# செந்தமிழ்ச்செல்வி

## உள்ளுறை


| | பக்கம் |
|---|---|
| கருணாமிர்த சாகரர் | ௧ |
| தமிழ் எழுத்துமாற்றம் | ௧0 |
| மாபெருந் தமிழ்ப்புலவர் சரவணபிள்ளை | ௧௬ |
| வாழிய தமிழே! (கவிதை) | ௧௭ |
| தமிழ்த்தாய்க் கொலை | ௧௮ |
| எழில் (கவிதை) | ௨௪ |
| மேற்புலத்தறிஞர் கண்ட தமிழகம் | ௨௫ |
| இக்கால மாணவன் இயம்புகிறான் (கவிதை) | ௩௩ |
| கல்வி | ௩௫ |
| மறைந்த மணி (கவிதை) | ௪0 |
| தமிழ்ப்புலவர் மாணவர் தேர்வு | ௪௪ |
| வள்ளுவர் நல்கும் சாயவாழ்வு | ௪௫ |
| நூல் நிலையம் | ௫௨ |
| செய்திகளும் குறிப்புகளும் | ௫௩ |
| மதிப்புரை | ௫௯ |


KURAL


சிலம்பு ௨௧ ★ வள்ளுவர் ஆண்டு ௧௯௮௨ ஆவணி, (Sep., 1951) ★ பரல் ௧

# 'செந்தமிழ்ச் செல்வி'

## இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்கள்

க. திரு. மகாமகோபாத்தியாய பண்டிதமணி, மு. கதிரேசச் செட்டியார் அவர்கள், மகிபாலன்பட்டி.

உ. ,, 'சித்தாந்த கலாநிதி' வித்துவான், ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள்,
தலைமைத் தமிழ் விரிவுரையாளர், தியாகராயர் கல்லூரி, மதுரை.

௩. ,, துடிசைகிழார், அ. சிதம்பரனார் அவர்கள், கோயமுத்தூர்.

௪. ,, தி. சு. கந்தசாமி முதலியார் அவர்கள், எம். ஏ.,
வழக்குரைஞர், சாத்தூர்.

௫. ,, வித்துவான், மு. இராசாக்கண்ணனார் அவர்கள்,
B.O.L. (Hons.) M.E.S., அரசினர் கல்லூரி, கோயமுத்தூர்.

௬. ,, வித்துவான், பண்டித, கா. பொ. இரத்தினம் அவர்கள்,
பி. ஏ. (ஆனர்ஸ்) பி. ஓ எல்.
அரசினர் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி, கொழும்பு.

௭. ,, 'சித்தாந்த பண்டிதர்' பா. இராமநாத பிள்ளை அவர்கள்,
கழகப்புலமையாளர்.

---

## செல்வி உறுப்பினர்கட்கு

கடந்த இதழுடன் செல்வி இருபத்தைந்தாம் தொகுதி முடிவு பெற்றது. அடுத்துவந்துள்ள இவ் இதழ இருபத்தாறாம் தொகுதியின் முதல் இதழாகும். எனவே, அன்பர்கள் 26-ஆம் தொகுதிக்குரிய தங்கள் உறுப்பினர் கையொப்பத் தொகையினை உடன் அனுப்பியுதவ வேண்டுகின்றோம்.

முன்பணம் அனுப்பாத அன்பர்கட்கு ஆவணி இதழ் ரூ 4-6-0 க்கு வி. பி. வழி அனுப்பப்பெற்றுள்ளது. அவர்கள், செல்வி நலங்கருதி அதனைப் பணஞ்செலுத்திப் பெற்றுக்கொள்வார்கள் என நம்புகின்றோம். தங்கள் நண்பர்கள் பலரையும் செல்வி உறுப்பினராகச் சேரச்செய்து உதவவும் வேண்டுகின்றோம்.

செயலாளர்
'செந்தமிழ்ச் செல்வி'

---

பணமனுப்பவேண்டிய முகவரி :

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
1/140, பிராட்வே, சென்னை - 1.

# இருபத்தாறும் ஆண்டு

நம் 'செந்தமிழ்ச் செல்வி'க்கு இருபத்துஆறும் ஆண்டு துவங்குகின்றது.

நம் செல்வி கடந்த இருபத்தைந்து ஆண்டுகளில் நம் நாட்டிற்குரிய செந்தமிழையும் சைவத் திருநெறியையும் தன் இரு கண்ணெனப் போற்றி உயரிய கருத்துக்களைக்கொண்டு வெளிவந்துலவிக்கொண்டிருப்பது யாவரும் நன்கறிந்ததே.

இப் புத்தாண்டிலும் தனக்குரிய பண்பாடான அரும் பெருங் கருத்துக்களையும், மொழியாராய்ச்சி, கலைநுட்பம், தமிழர்அறம் முதலிய பல்வகை நுண்ணியல் அடிப்படைகளையும் கொண்டு சிறந்த நன்முறையில் மலர்ந்து தனித்தமிழ் மணங் கமழ வெளிப்போந்துலவும்.

இருபத்தாறும் அகவை தொடங்கிய நம் செந்தமிழ்ச் செல்விநங்கைக்கு வெள்ளணி விழாக்கோள் காண எண்ணியுள்ளோம். அதன் அணியாக 'வெள்ளி விழா மலர்' என்னும் பெயரால் தைப் பொங்கல் திருநாளைச்சார ஓர் மணமலர் வெளியிட முயன்றுள்ளோம்.

அம்மலர், செந்நாப்புலமைத் திருவளர் செல்வரின் அரிய பெரிய நுண் கருத்துக்களைத் தன்னகத்துத் தாங்கி, சீரிய கூரிய தீஞ்சொல் வளங்கெழுமிக் கண்டார்ப் பிணிக்கும் கவின்பெறு வனப்பொடு விரிந்து கமழும்.

நம் தமிழ்மொழி மற்ற மொழிகளோடு ஒத்த மொழியன்று. அது தனக்கெனச் சிறப்பாகக்கொண்ட இயற்கை ஒலி அமைப்புடையது.

அம்மொழி மாற்றோர்களாலும் தன்னலங்கருதியோராலும் பண்டைநாள்முதல் இற்றை ஞான்றுவரை ஆக்கிவரூஉம் பல இடுக்கண்கட்கிடையே தன் இளமை குன்றாது வளர்ச்சியும் எழுச்சியும் உற்று தன்னிகரில்லாத் தனிமொழியாக—தனிப் பண்புடையதாக—இனிமையும் கனிவும் மிக்குடையதாக—இளவள ஞாயிறுபோல் சுடர்கான்றொளிர்கின்றது.

அதன் ஒளியை ஒடுக்க, ஒருசிலர் மின்மினி போன்று சீர்திருத்தம் என்னும் போலிச் செயற்பாட்டைக் கொணர்ந்து மொழியமைப்பைச் சிதைக்க முன்வந்துள்ளனர்.

அத்தகையோர்க்கு செந்தமிழ்ப் புலவர்பெருமக்கள் தாம் கற்றுத் துறைபோய கருத்துரைகளினால் அவர்தம் மருட்சிக்கு வெருட்சிகாட்டி தெருட்சி செய்தருளவேண்டுமென்று புலவர் பெருமக்களைப் பெரிதும் வேண்டுகின்றோம்.

இவ்வாறாய நுண்மாண் நுழைபுல ஓவியங்களையெல்லாந் தன்கண் தாங்கி அந்நறுமலர் வெள்ளி மலராக வள்ளிதழ் மலர்ந்து இன்னறுந்தேறலை அன்பர் நாவகத்தும் நெஞ்சகத்தும் ஊட்டி இன்புறுத்தி நலந்தரும்.

ஆகலான், இதுகாறும் எம் செல்விக்கு ஊக்கமும் ஆக்கமும் தந்து போற்றிய எம் செந்தமிழ்நாட்டுச் சீரியோர் யாவரும் நம் செல்விக்குப் பேராதரவு தந்து பேணிவருவதுடன், இப்புத்தாண்டுத்தொடக்கமுதல் ஒவ்வொருவரும் தத்தம் நண்பர்களைக் கையொப்ப அன்பராகச் சேரச்செய்து பேருதவி புரிந்தருள வேண்டுகின்றோம்.

அவ்வாறு தூண்டி இப் பேருதவி செய்யின் நம் செல்வி முன்னினும் பல்வகைக் கட்டுரைப் புத்தணிபூண்டு வெளிவந்துலவி, நாட்டுக்கும் கலைக்கும் நற்பணியாற்றுவாள்.

இற்றைநாளில் தமிழ்மொழி வேற்றுச்சொல் கலப்பை அறவே அகற்றி மிளிர்கின்றதென்றால் அஃது செந்தமிழ்ச் செல்வியின் சிறந்த தொண்டெனின் மிகையாகாது.

நல்லிசைப் புலவர் பெருமக்கள் தத்தம் அலுவல்கட்கிடையேயும் நம் செல்விக்குக் கட்டுரை வழங்கி வளர்த்துவந்த—வருகின்ற பெரு நன்றியை எழுமையும் உள்ளும் கடப்பாடுடையோம். அக்கடமை மீண்டும் மீண்டும் அவர்கள் செய்து உதவி அருள விரும்புகின்றோம்.

இதுகாறும் யாவரும் போற்றி உதவிய பேருதவி மலையினும் மாணப்பெரியதாகும். அதற்கு எம் உளமார்ந்த நன்றி உரித்தாகுக.

முத்தமிழ்த்துறையின் முறைபோய புலவர்களும், செந்தமிழ்ப்பற்றும் செம்மை நலமும்மிக்க நம்நாட்டுமக்கள் யாவரும் அன்பும் ஆதரவும் தந்து, எம்மை மேலும் ஊக்கினால் இச்சீரிய அரும்பெருந் தமிழ்ப்பணி, நன்முறையில் படர்ந்து நாட்டுக்கு நலம்பல கெழுமும் வாய்ப்புப்பெறும். அதனைச் செய்தருளுமாறு பெரிதும் வேண்டுகின்றோம்.

தமிழ் வாழ்க.

ஓம்

# செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு உ௬ | திருவள்ளுவர் ஆண்டு ௧௯௮௨, ஆவ்ணி செப்டம்பர், 1951 | பரல் ௧

## கருணாமிர்த சாகரர்

[திரு. ஆ. அ. வரகுணபாண்டியர், தஞ்சை.]

அமிழ்தினுமினிய என்றுமுள தென்றமிழ் வளர் கழகமும், இன்கூலம் நிறைகளமும், வெண்கயல் புரள் கழனியும் மலிந்து பொலிவுறும் பாண்டிய நாட்டின்கண், திருநெல்லை மாவட்டத்தின் மேற்பகுதியில், "சாம்பூர் வடகரை," என்றொரு சிற்றூருண்டு. முன்னொருகால் மதுரையில் செங்கோலோச்சிய கூன்பாண்டியனின் வழித்தோன்றலாம் முத்துசாமி என்ற புனிதர் அன்பு, அருள், அடக்கம், வாய்மையுடையராய் இச்சிற்றூரில் தன் மனைமகாருடன் இனிது வாழ்ந்துவந்தார். இவருக்கு ஐந்து ஆண்களும், நான்கு பெண்களு மிருந்தனர். இன்னோருள் முன்னவரே நம் ஆபிரகாம் என்ற சீலர். இவர் 1859-ஆம் ஆண்டு, ஆகஸ்டுத்திங்கள், இரண்டாம் நாளன்று நந்தமிழ்நாடு செய்த தவப்பயனாய்த் தோன்றி, நாளைக்கொரு திறமும் வேளைக்கொரு நிறமுமாய் வளர்ந்துவந்தார்.

சாம்பூர் வடகரையிலிருந்து மூன்றுகல் தொலைவிற், "சுரண்டை" எனப் பெயர்கொண்ட மற்றொரு சிற்றூருண்டு. இங்கு சில ஆங்கில விடையூழியர் (Missionaries) இறைவழிபாட்டிற்கென ஒரு கோவிலையும், சிறுவர் கல்வி வளர்ச்சிக்கென ஒரு பள்ளியையும், மாணவர்க்கென ஓர் உறைவிட ஊண் விடுதியும் அழகுபெற அமைத்து, அவ்வட்டத்து ஏழை மக்களிடையே அருந்தொண்டாற்றி வந்தனர். துள்ளித் திரியும் ஐந்தாட்டைப் பருவத்தில் நம் ஆபிரகாம் இப்பள்ளியிற் சேர்ந்து படித்து வரலானார். இவர் ஒவ்வோராண்டும் தம் படிப்பில் கண்ணுங்

கருத்துமா யிருந்து, தேர்வுகளில் முதன்மையாய்த் தேறிவரு வதுபோன்றே, அழகாய் ஓவியம் தீட்டுவதிலும், இனிதாய் மிடற்றிசை குயிற்றுவதிலும் முதன்மையாய் விளங்கிவந்தார். அப்பள்ளியிலுள்ள ஆசிரியரும் மாணவரும் இவரின் சுறுசுறுப் பையும், பின் உறங்கி முன்னெழும் பழக்கத்தையும் கண்டு, வியப்புமிக்குறுவர். இவர் தம் பதினான்காம் அகவையில் அக்காலத்தில், "அப்பர்-போர்த்," (Upper-fourth) என வழங்கப்பெற்ற தற்காலத்து எட்டாம் வகுப்பிற்குச் சரியான படிப்பைப் படித்துத் தேர்வில் முதன்மையாய்த் தேறினார். இவர் ஆண்டில் இளையராயும், அறிவில் முதியராயும், உற்று நோக்கி ஊகித்தறியுந் தன்மையராயும், தம் கண்ணுற் கண்ட தைக் கையாற் செய்பவராயு மிருந்தமையின் இவர்மாட்டு மிக் குவகைகொண்ட அவ் வாங்கில விடைத்தொண்டர் இவர் ஆசிரி யர் தொண்டாற்றத் தக்காரெனக் கருதி, அப்பொழுது திண்டுக் கல்லில் நிறுவப்பெற்றிருந்த, "ஆசிரியப் பயிற்சிப் பள்ளி" க்கு இவரையும் வேறு சிலருடன் பயிற்சி பெறும்படி அனுப்பவே, இவரும் அங்குச் சென்று 9-6-1874-இல் அப்பள்ளியிற் சேர்ந்து படித்துவரலானார்.

அக்காலத்தில் புகைவண்டித் தொடரில்லையாதலின், மிகச் சேய்மையிலுள்ள இடங்கட்குச் செல்லுவது மிக வருத்தமும் பொருட் செலவுமான காரியமாகும். குறைந்தது நாற்பது நாட்களேனுங் கொண்ட கோடை விடுமுறைகளிற்கூட நூற்றிரு பது கல் சேய்மையுற்ற தம் பிறப்பிடத்திற்கு இவர் சென்று வருவது இயலாதிருந்தது. ஆகலின் இவர் ஆசிரியப் பயிற்சி பயின்ற அவ் வீராண்டுகளின் கோடை விடுமுறையில் தக்கோர் நட்பையும், கற்றோர் உறவையும், துறவோர் அன்பையும் நாடி வந்தார். "கண்டது கற்கப் பண்டிதனாவான்," என்ற முது மொழிக்கேற்ப இலக்கண இலக்கிய சமய நூற்களை ஐயந்திரி பறக் கற்றும், அவருடன் சென்று அருமூலிகளைச் சேர்த்தும், மருந்து செய்வதில் அவர்கட்குத் துணைபுரிந்தும் வந்தார். இவர் அரிய நட்பினரில் ஒருவரான, "சோதிடம் கந்தசாமிப் பிள்ளை," யிடம் சோதிடம் கற்றும், இசையாசிரியர், "பிடில் சடையாண் டிப் பத்தர்," இடம் இசைபயின்றும் வந்தார். மேலும், தம் பள்ளித் தலைவரான அருட்டிரு, யார்க் ஐயரிடம் (Rev. York) புகைப்படம் பிடித்துப் படிவங்கள் அமைத்தற்குத் துணைபுரிந்து அக்கலையிலும் தம் அறிவைப் பெருக்கிக்கொண்டார். தாம் கொண்ட சமயத்திற்கேற்பக் கிருத்துவ மறையினை ஆராய்ந்து காலை மாலைவேளைகளில் அத்தனை வழிபடுவார். கெட்டுப்போன கடிகாரங்களைச் சீர்ப்படுத்தியும், பழைய பொத்தகங்களைக் கட்

டிச் சீர்ப்படுத்தியும், கஞ்சுகங்களைத் துன்னியும் பிறர்க்குதவி, அவற்றிற்குத் தக்க கைம்மாறு பெறுவார். பிறர்க்குணவளித்து அவர் தம்முவகையைக் காண மிக விருப்புற்றோர்களின், தம் கைப்பொருளுக்கும், வேளைக்கும் தக்கதாய் ஏழை எளியவர்கட் குணவளித்தும் வருவார். இவ்விதம் அறிவைப் பெருக்கி நல் வழிகளில் நாட்களைப் பயன்படுத்திக்கொண்டார்.

அதுபோழ்து அருட்டிரு யார்க் ஐயர், இவரை அப்பள்ளியி லேயே ஒரு ஆசானாக அமர்த்த, இவரும் அப்பணியை விருப் புடன் 1876-ஆம் ஆண்டின் முற்பகுதியில் ஏற்றுக்கொண்டு சிறுவர்க்குக் கல்விகற்பித்து வரலானார். அக்காலத்தில் ஆசிரி யர் தம் உரிமைப்படி மாணவரைக் கோலொடிய அடித்து அன் னோர் அறியாமையை யோட்டுவதே அருமுறையாக இருந்தது. ஆனால், இவரோ அவ்வுரிமையினையும் அம் முறையினையும் முற் றும் நீத்துத் தம்மினிய மொழியால் சிறு கதைகளைக்கூறி நகைக்க வைத்தும், இடம் நோக்கி உற்ற எடுத்துக்காட்டுகளைக் கூறித் தெளியவைத்தும், செய்யுட்களை இசையுடன்நிகழ்த்திச் சுவைக்க வைத்தும் சிறுவர்க்குக் கல்வி புகட்டிவருவார். அச் சிறுவர் கட்குக், "கதை உபாத்தியாயர்," என்றாலே போதும். அவர் களின் மகிழ்ச்சிக்கு எல்லையே யிராது. இவர் கூறும் சிறு கதைகளைக் கேட்பதற்காகப் பள்ளிக்கூடத்து வேலைகளில் இவர் எது சொல்லினும் அம்மாணவர் மகிழ்வுடன் செய்தேமுடிப் பார். பள்ளி முடிந்து தம் வீடுசேர்ந்த சிறுவர், தம் பெற்றோ ரிடமும், மற்றோரிடமும் தம் "கதை உபாத்தியாயர்," அன்று தமக்குச் சொன்ன கதையைக் கூறிக் களிப்புற்றுத் தம் ஆசிரி யரையும் புகழ்ந்துரைப்பார்.

இவ்விதமாய் நம் ஆபிரகாம் ஆசிரியரிடம் மகிழ்வுடன் கல்வி கற்றுவந்த சிறுவர்களில் துரைசாமி, மாணிக்கவாசகம் என்ற இருவர் யானைமலைப்பட்டி என்ற சிற்றூரைச் சேர்ந்த பொன்னம்பலம் என்ற ஒரு பெரு நிலக்கிழவரின் மக்களாவர். ஒவ்வொரு ஞாயிறு காலையிலும் பொன்னம்பலனார் தம் மக்க ளின் நலனறிதற் பொருட்டுத் தம் வண்டியிலேறித் திண்டுக்கல் லிற்கு வந்து, அன்னோரைப் பார்த்து உரையாடிப் பின் தாம் கொணர்ந்த தின்பண்டங்களைக் கொடுத்துவிட்டு, மாலையிற் றம் மூர் திரும்புவது வழக்கம். அவ்வாறான ஒருநாள், அச்சிறுவர் தம்மைக் காணவந்த தம் ஐயனிடம் அவர் கொண்டுவந்த பண் ணியங்களை அருந்திக்கொண்டே, தம் "கதை உபாத்தியாயர்," தமக்குக் கூறிய பல்லருங் கதைகளைக் கூறி அகமகிழ்ந்தனர். இதனைச் செவியுற்ற பொன்னம்பலனார் அக்கதைகள் யாவும் நற்கருத்துக்களும் படிப்பினைகளும் மிகமலிந்து பொலிவுற்

றனவா யிருத்தல்கண்டு மகிழ்வுற்றுத் தாமும் அக் "கதை உபாத்தியாயரை"க் கண்டு உரையாடிவர விருப்புற்றார். சிறுவர் உண்டு முடித்தபின் அவருடன் நம் ஆபிரகாம் ஆசிரியரின் வீட்டிற்குச் சென்றார். திண்டுக்கல்லிலிருந்து திருப்பழனிக்குச் செல்லும் பெருவீதியில் அமைந்ததோர் சிறு இலைக்குடிலாக அஃதிருந்தாலும், அஃது உறைந்து வாழ்வதற்கேற்ற முறைமையிலிருந்தது. அதன் உட்புறம் தூசிதுகளற்றுத் தட்டுமுட்டுப் பொருள்கள் யாவும் அவ்வவற்றிற் கேற்ற விடங்களில் அமைந்து மிகத் தூய்மையாய் விளங்கின.

அதுபோழ்து நம் சிறு ஆசிரியர் தம் வழக்கம்போல் தம் வீட்டின் உள் முற்றத்தில் ஏதோ ஒரு மருந்துப் பொருளைப் புடமிட்டெரியவிட்டும், வேறுமொரு பொருளை ஒரு குழியம்மியிலிட்டுப் பச்சிலைச் சாறுகூட்டிக் குழவியைப் பிடித்து அரைத்துக்கொண்டு மிருந்தார். மருத்துவத் துறையில் பல்லாண்டுகள் பழகிய பொன்னம்பலனார் இதனைக்கண்டு வியப்புற்று, "என்னே! நம் ஆசிரியர்க்கு மருத்துவத் துறையிலும் பழக்கமுண்டோ?" என வினவ, நம் இள ஆசிரியர் தாம் முன்பின் அறியாத அம் மூதாளரைக் கண்டு சற்றே மலைவுற்றுப் பின்பவரை வணங்கி, மிகத் தாழ்மையுடன், தாம் கடந்த சில ஆண்டுகளாகத்தான் சில துறவிகளின் அருந்துணைகொண்டு மருத்துவக் கலையிற் பயிற்சிபெற்று வருவதாகக் கூறினார். அதன்பின் அம் மாணவச் சிறுவர் தம் தாதையைத் தம் ஆசிரியருக்கு அறிமுகப் படுத்தினார். ஆசிரியரும் அவர்கட்கு நல்வரவுகூறி, அவர்களை ஒரு விரிப்பில் அமரச்செய்தார். அம்மூத்தோர் மருத்துவத்தைப்பற்றியும், தம் மக்களின் முன்னேற்றத்தைப் பற்றியும் ஆசிரியரிடம் இரு நாழிகையளவு உரையாடிப் பின் விடை பெற்று நீங்கினாலும், நம் ஆசிரியரின் தாழ்மையும், நுண்ணறிவும், சுறுதியும், மருத்துவ வேட்கையும் அவருள்ளத்தில் ஆழப் பதிந்து விட்டமையின், அவர் உள்ளம் நம் ஆசிரியரை விட்டு நீங்காதிருந்தது. ஏன்? அவர் உள்ளத்தை நம் ஆசிரியர் முற்றுங் கவர்ந்து கொண்டாரென்றே கூறவேண்டும். அவரை அறியாமலே அவர் நினைவில் நம் ஆசிரியரின் உருத் தோன்றிக் கொண்டேயிருக்கும். நாட் செல்லச் செல்ல அந் நினைவு அவரின் உள்ளத்தில் நம் ஆசிரியர்பால் மிக்க அன்பையும் உவகையையும் வளர்த்துவிட்டது. அவர் திண்டுக்கல்லிற்கு வரும்போதெல்லாம் தம் மக்கட்கெனக் கொண்டுவரும் பண்ணியங்களைப் பகிர்ந்து நம் ஆசிரியருக்கும் கொடுத்து அவருடன் சிலநாழிகையேனும் உரையாடித் தம்மூர் திரும்புவது அவருக்கு வழக்கமாகிவிட்டது.

இவ்வாறாக ஓர் ஆண்டு கழிந்தபின் நம் பொன்னம்பலனார் 1877-ஆம் ஆண்டின் கோடை விடுமுறையில் நம் ஆசிரியரை யானைமலைப்பட்டிக்கு வந்து, தம்முடன் உறைந்து, விருந்துண்டு, மருந்துகள் சிலவற்றைச் செய்து தமக்குதவுமாறு விரும்பி வேண்ட, நம் ஆசிரியரும் அதற்கிசைந்து அவ் விடுமுறை நாட்கள் துவங்கியதும் யானைமலைப்பட்டிக்குப் பொன்னம்பலனாரின் சிறுவர்களுடன் சென்றார். அவ்வூருக்கண்மையில் சந்தனமும் மந்தாரமும் பொருந்திய சுருளிமலை என்றோர் திருமலை உண்டு. நம் ஆசிரியரின் உள்ளத்தினை அம்மலையின் வனப்பு மிகக் கவரவே அப்பெரியாரை நோக்கி அம்மலையின் சிறப்புகளைத் தமக்குரைக்கக்கூடுமோவென மிக வேண்டினார். பொன்னம்பலனாரும் அம்மலையின் அடிவாரத்தில் ஒரு சிறு மண்டபமும், அத்திருமலை முடியில் ஒரு பழமைவாய்ந்த முருகர்கோவிலும் இருப்பதாகவும், அக்கோவிலுக்கருகிலுள்ள ஒரு சுனையின் மருங்கில் ஒரு சந்தன மரத்தடியில் "கருணாநந்தர்" எனப்பெயர் கொண்ட ஒரு அருள்வண்ண முனிவர் இருக்கையிலிருந்து, வாசிகூடி, வளிநிலை கொண்டு, தலைமைத் தவம் புரிந்து வருவதாகவும், பல வேடுவர் கூறத் தாம் கேட்டிருப்பதாகச் செப்பினார். இவற்றைச் செவியுற்ற நம் ஆசிரியர் பெருமகிழ்ச்சி கொண்டு, அத் தவமுனிவரைத் தாம் காண விருப்புற்று, அக் கொடுமுடிக்கேகும் வழியினையும் தமக்குச் சொல்லுமாறு வேண்டினார். அதற்கப் பெரியார் அவ்விடம் செல்ல ஒரு நடைவழி அவ்வூரில் இருக்கிறதென்றும், ஆனால் அங்கு குண்டடியனும் சிறுத்தையும் உறைவதால் எவரும் துணையின்றிச் செல்லவியலாது என்றும் பகர்ந்தார். இதனைக் கேட்ட நம் இளங்காளை உள்ளந் தளராது அம் மலைக்கோட்டிற்கேகும் வழியினையும் ஒரு துணையினையும் அன்றே தேடுவாராயினார். இரண்டு நாட்கள் முயன்றும் தமக்கேற்ற துணை கிடையாது நம் ஆசிரியர் உள்ளம் மிக வருந்தி, முடிவில் தம் உள்ளக் கருத்தைத் தம் நண்பரிடம் சொல்ல, அவரும் சற்று ஊன்றி நோக்கி, அதற்கிணங்கி, "நாளை மறுநாட்காலையில் ஐந்து நாழிகைக்குமேல் நாம் பயணப்படுவோம்," என முடிவாய்க் கூற நம் ஆசிரியர் அதனைக் கேட்டுப் பெருமகிழ்வுகொண்டார். அவ்வண்ணமே அந்நாளில் குறித்தவேளையில் இருவரும் ஒரு கையில் விடாய் தணிக்க உதவும் ஒருகுலை கொடிமுந்திரிப் பழங்களையும், மறு கையில் மலை மீதேறிச் செல்வதற்குதவ ஓர் ஊன்றுகோலையுந் தாங்கித் தம்தம் இறையை வழிபட்டு வழிமீது சென்றனர்.

அவர்கள் செல்லுங்கால் அம் முதுவழியின் ஏற்றமும், கொடிய விலங்கினத்தின் தோற்றமும், அவற்றுட் சிலவற்றின்

சீற்றமும் பலவாயின. அவற்றை இங்குக் கூறப்புகின் மிக விரியுமாகலான் அவற்றைக் கூறாதுவிடுவோம். தம் வழியிடையே இவர் நுகர்ந்த இயற்கையின் தோற்றமும், அருவியின் சீற்றமும், பூக்களின் நறுநாற்றமும் மிக்கன. இவற்றையும் இங்குக் கூறாது செல்வோம். முடிவாக இவ்விருவரும் கல்லுங் கரம்பும் நிறைந்து, முள்ளுங் குருக்கும் குறுக்கிட்ட பாதைவழி மூன்றுகல் தொலைவு நடந்து அம்மலையின் அடிவாரத்திலுள்ள ஒரு பழமண்டபத்தை அடைந்தனர். அம் மண்டபத்தின் நடைவாவிகள் ஏழும் கருங்கற்களாலானவை யாகலின் அவற்றின்மீது அமர்ந்தனர். இரண்டொரு கொடிமுந்திரிப் பழங்களையும் அருந்தினர். படிமீது சற்று அயர்ந்தனர்.

அத்தருணம் இவர்கள் எண்ணுவண்ணம் ஒரு துறவி காவியுடுத்தி, உடலில் திருப்பொடி பூசியவராய் இவர்கள் முற்றோன்றி "உங்களில் ஆபிரகாம் உபாத்தியாயர் என்பவர் யாவர்?" என வினவ, அக்காட்டில் தம்மை முன்பின் சற்றேனுமறியா இத்துறவி தம் பெயரைக் கூறக்கேட்ட நம் ஆசிரியர் மிக ஐயமும் பெருவிம்மிதமுங்கொண்டு, உள்ளம் பதறி நாக்குழற, "ஐயனே, அன்னோன் அடியேனே," எனப் புகன்றார். இதனைக் கேட்ட அத்துறவி புன்முறுவலுடன், "எம் குரு நும்மை அழைத்துவர அடியேனைப் பணித்து இங்கனுப்பியுள்ளார். ஆகலின் என் பின் வருக," எனப் புகல, நம் ஆசிரியர் மிக்க வியப்புற்று தம்முடன் வந்த பொன்னம்பலனாரை நோக்க, அவரும் களிப்புற்று "தம்பி மிக மகிழுறுகிறேன். நீ இவர் பின்சென்று அம் முனிவரை அடிபணிந்து வணங்கி, அவரின் அருள்பெற்று வருக. நீ வருமளவும் யான் ஈண்டமர்ந்திருப்பேன். சற்றும் ஐயுறற்க," எனக்கூறி ஊக்கமூட்டி வழியனுப்பினர். மூன்று நாழிவேளை நம் திறலியும் துறவியும் கோடுநோக்கி இவர்ந்து சென்றபின் இவர் கண்முன் கொடுமுடியிலுள்ள முருகரின் படைவீடு தோன்றிற்று. அதனை நோக்கித் துறவி முன்னும், இவர் பின்னுமாய்ப் பின்னும் ஏறிச்சென்றனர். அப்போழ்து ஒரு நீர்க்கால் இவர்கள் வழியில் குறுக்கிட்டது. இவர்கள் அதனை வாவி அக்கரையேக, கல்காரை மலர்ந்து நிறைந்த ஒரு வாவியின் அருகே ஒரு சந்தன மரத்தடியில் இருக்கையொடு வீற்று, அருள் ஒளி பெற்று, புன்முறுவலுற்று விளங்கும் "கருணாநந்த முனி"வரை நம் தேசிகர் கண்டார். கண்காணுக் காட்சியினையிவர் கண்டாராகலின் தம் மெய்சிலிர்த்து, உடல் வியர்த்து, உணர்விழந்து, நெடுங்கிடையாய்ப் படிமீது வீழ்ந்து அவ்வருந் தாபதரை வணங்கினர். தெய்வ முனிவரும் புன்முறுவல் கொண்டு, "அன்ப! வருக. மிக மகிழ்வுகொண்டோம்," என வர

வேற்க, நம் ஆசிரியரும் ஒருவாறு தம் உள்ளத்தைத் தேற்றி எழுந்து தம் உயிர் அடங்கி உடல் மடங்கி நின்றனர். பின்பு அம் முனிவர் இவரைத் தம் அண்டையில் வருவித்து, தம் பக்கத்தில் இருத்தி, "குழந்தாய்! நீ இவண் வர விருப்புற்றதின் நோக் கென்னையோ?" என வினவினர். இவர் "ஐயனே! தங்களைக் காணுமுன் அடியேன் கொண்டிருந்த விருப்பு வேறு, இப்போது தங்களைக் கண்டபின் அதனை முற்றும் நீத்தேன். இனி அடியே னுக்குத் தங்கள் அடி பிரியாதிருக்கும் விருப்பொன்றே மிக்குள் ளது. ஆதலின் தாங்கள் தயை கூர்ந்தருள்க," என்று வேண் டினர்.

இதனைச் செவிமடுத்த அத் தவப்பெரியார், "அன்ப! தம்மை யொரு பொருளென இறப்ப மதித்துத் தம்மைச் சார்ந்த பொரு ளைத் தமதென வேட்டுத்திரியுமவர் துறவியெனப் பேர்பூண்டு, நீட்டலும் மழித்தலும் புரிந்து உழலல் துறவன்று. மனத் துறவே துறவாகும்," எனக் கூறி, மேலும், மனவமைதியினையும், மனத்துறவின் திறத்தையும், அதனை யெய்து முறையினையும், அது நிலைத்தற்குரிய வழியினையும் நன்குணர்த்தினர். பின்னும் அவ்வறிவர், "பிள்ளாய்! நீ மருத்துவ வேட்கை மிக்குடையோ னாகலின் முப்பிணிகளை நீக்கவல்ல அருமருந்துகளின் செய் முறையினை நினக்கோதுவோம். நீ குருவருளால் உலகிற் பெரும் புகழொடு நிலையுறுமாறும் உவந்தோம். ஆகலின் நீ துறவை வேண்டற்க," என அன்பு கனிந்தொழுக மொழிந்தார். இதனைக் கேட்ட நம் ஆசிரியர், "ஐயனே! தங்கள் திருவுள்ளம் போல் அடியேனுக் கருள்க," எனப் பணிந்துரைத்தார். இத னைக்கேட்ட குருமுனிவர் பலஅரு மருந்துகளின் செய்முறைகளை யும், மருந்துப் பொருள்கள் ஒவ்வொன்றிற்குமுரிய நட்புப் பகை யினையும், ஒப்புமை வேற்றுமையினையும், மருத்துவத்திற்குதவும் பல்லருமூலிகைகளையும், மருந்து கட்டுவித்தான "குரு"வையும் ஐயந்திரிபற ஓதி உணர்த்தி ஆசிகூறி, "அன்ப நீ சென்றுவருக," என நவில, நம் தேசிகர், "ஐயனே! தங்கள் ஆணைப்படி செய் கிறேன். ஆயினும் தங்களை இவ்வடியேன் மேலும் காணவேண் டுமே!" என உள்ளங்குழைந்திளைத்தனர். இதனைச் செவியுற்ற அவ்வருளின்ப வாரி உள்ளமிரங்கி "அன்ப! நீ மலைவுறற்க. யானைமலைப்பட்டிக்கு நீ வரும்போதெல்லாம் துணையின்றியே இங்கும் வரலாம். யாம் இன்னும் சில ஆண்டுகள் இங்குறை வோம். அதன்பின் தென் குமரியாடி இமயம் நாடுங்கால், சோழனின் பொன்னிக்கருகில் தோட்டந்துரவு நிறைந்த பல மண் மனைகளுடன் மனைமகார் பாங்கிருக்க, உற்றார் உறவினர் புடைசூழ, பெரும்புகழ் வாய்ந்த மருத்துவச் சித்தனாய், கட

லன்ன செல்வனாய், இரப்போர்க்கு வள்ளலாய், கொளைவல்லோர்க்கோர் அளவையாய், மேதினியில் மேதையாய், பெரும் புகழுடன் நீ இன்புற்று வாழ்வதைக் காண்போம்,'' என வாழ்த்த இவரும் அத்தவ உருவனைப் பணிவுடன் வணங்கிப் பிரியா விடைபெற்றுத் துணையின்றிக் கோடு விட்டிறங்கி, மண்டபத்தை நண்ணி, ஆங்கு இவர் வரவை நோக்கியபடி படிமீது அமர்ந்திருந்த நம் பொன்னம்பலனாரை அணுகினார். நடந்தவற்றை இவர் அவரிடம் கூறியவண்ணம் இருவரும் காடுகடந்து வீடு சேர்ந்தனர்.

யானைமலைப்பட்டியில் பின்னும் இருபத்தொரு நாட்கள் நம் தேசிகர் தங்கினார். ஆதலின், பின்னும் மூன்று முறை யாதொரு துணையுமின்றி இவர் மலைமீது சென்று, மருத்துவக் கலைஞரைச் சந்தித்துப் பிற பல்கலை நுட்பங்களையும் கேட்டறிந்து இன்புற்று வந்தார். இதன்பின் கோடை விடுமுறையின் முடிவு அண்மையுற்றமையின் தம் நண்பரிடம் விடைபெற்றுத் திண்டுக்கல் அடைந்தார். அதனை அடைந்த சில நாட்களுக்குள்ளாகவே அருளின்ப முனிவர் திருவாய்மலர்ந்தருளிய விதிமுறைப்படி இவர் மருந்துகளைச் செய்து, தாம் உண்டு, பயன் கண்டு, திடன்கொண்டு, களிப்புற்று, அம்மருந்துகட்குக் "கருணானந்தர் சஞ்சீவி மருந்துகள்'' என்ற முகவரியுடன் பெயர்களிட்டு, பல பிணியாளர்க்கும் கொடுத்துதவினார். இவரின் மருத்துவத்தால் தம் நோய் நீங்கி உடல்நலம் பெற்ற யாவரும் மிகக் களிப்புற்றுத் தாம் நுகர்ந்தவற்றைப் பலருக்குங் கூறிப் புகழவே, இம்மருந்துகள் மிக விளக்கம் பெற்றன. சில நாட்களுக்குள் அவ்விடத்தில் இவர் ஓர் அரிய மருத்துவராகவும் திகழ்ந்தார். இவர் இதோடு தாம் பற்றுற்றுக் (Hobbi) கலையாகக் கொண்ட இசை, கோணூல், ஆருடம், ஒளி, ஓவியம் முதலிய பிற கலைகளைக் கற்றுப் பழகியும், ஆசான் பணியாற்றியும் வந்தார். கோடை விடுமுறைகளில் இடையிடையே சுருளிமலை சென்று தம் தவச்செல்வரைச் சந்தித்துப் பல்அரும் பொருள்களைப்பற்றி அவரிடம் கேட்டுத் தம் கேள்விச் செல்வத்தைப் பெருக்கியும் இன்புற்று வந்தார்.

இவரிவ்வாறு கல்வி கேள்விகளில் பெருக்கமுற்று, அறிவில் முதுமையுற்று வருங்கால், சாம்பூர்-வடகரையிலிருந்த இவர் பெற்றோர், தன் மகனார் தம் சமயம்விட்டு வேறு சமயம் தழுவி, தம் தொண்டினைவிட்டு, ஆண்டியர் தோழமைகொண்டு, துறவறம் பூண்டார் எனச் சிலர் பழிதூற்றக் கேள்வியுற்று, தம் உள்ளமுடைந்து, திண்டுக்கல்லிற்கு 1882-ஆம் ஆண்டின் முற்பகுதியில் வந்தார். தம் அருங் கான்முளையைக்கண்டு இன்புற்

ஞர். உச்சி முகர்ந்து முத்தமிட்டார். அளவளாவினர். இறைவனைத் தொழுது நன்றிசெலுத்தினர். மேலும், இரு திங்கள் தம் எச்சமுடன் உறைந்து அவரின் பழக்க வழக்கங்களையும், அறிவுப் பெருக்கினையும், மருத்துவத் திறனையும், இறைவழிபாட்டின் ஒழுங்கினையும் தம் கண்கூடாய்க் கண்டு பெரியதோர் இறும்பூதுற்றனர். பின்பு தம் அருமகவை அவ்வாண்டின் கோடை விடுமுறையினைத் தம்மூரில் கழித்துத் தம்மை மகிழ்விக்கப் பணித்துப் பல் ஆசிமொழி கூறி, விடைபெற்றுத் தமமூராகிய சாம்பூர் வடகரைக்குச் சென்றனர். ஆனால், நம் ஆசிரியர் அவ் ஆண்டின் கோடை விடுமுறைக்குத் தம் பிறப்பிடம் செல்லுதற் கியலாது போயிற்று. ஏனெனில், இவர் திண்டுக்கல்லிற்கு ஆசிரியப் பயிற்சி பெறவென வந்துற்ற நாள்முதலாய் அன்றளவும் இவர்பால் மிக்கன்பு பூண்டு, தம் மகவைப்போற் கருதிப் போற்றிவந்த அருட்டிரு யார்க் ஐயரும் அவர் துணைவியாரும் தம் பிறப்பிடமாகிய மேல்நாட்டிற்கு அவ்வாண்டின் மே திங்களில் செல்லவேண்டியிருந்தமையின், நம் தேசிகர் அச்சமயம் அன்னோரை நல்வழிவிட்டனுப்பும் வண்ணம் திண்டுக்கல்லிலேயே இருக்கும்படியாயிற்று. 1882-ஆம் ஆண்டு, மே திங்களின் பிற்பகுதியில் அருட்டிரு யார்க்கையரும் அவர்தம் மனைவியாரும் தம் நாட்டிற்குச் செல்லுகையில், அன்னோர் பிரிவாற்றுமையைக் குறித்து நம் அண்ணாவியார் ஓர் அரிய இசையளவு பா இயற்றி, தம் இசையாசிரியரான சடையாண்டிப் பத்தரின் கின்னரியை (பிடிலை)க் கொண்டு தாம் இசை முழக்கியும், சில மாணவரைக்கொண்டு அப்பாடலைத் தம்முடன் உடன் நிகழ்ச்சியாய் மிடற்றால் இயக்குவித்தும், தம் உள்ளநிலையை ஐயருக்கு உணர்த்தினர். இதனைச் செவிமடுத்த ஐயர், ஆசிரியரின் உள்ளம் உலர்வது கண்டு தாமும் வருந்தி, தம்முடைய அருமையான கின்னரியை நம் ஆசிரியருக்கு அன்பளிப்பாகத் தந்து, தம் நினைவுக்குறியாக அதனைக் காத்துப் பயன்படுத்திக் கொள்ள வேண்டினர். நம் அண்ணாவியும் அதனைக் களிப்புடன் ஏற்றுக்கொண்டு பல்லாண்டுகள் குயிற்றிப் பேணிவந்தார். அக்கருவி இன்றும் இவர் குடும்பத்தினரால் காக்கப்பெற்றே வருகிறது.

(தொடரும்)

# தமிழ் எழுத்து மாற்றம்*

தமிழ் எழுத்து மாற்றம் ஒரு சிறிதும் பொருத்கம் அற்றது என்பதை விளக்குவோம். இது வேறு எம் மொழியாளரும செய்யத் துணியாதது: இதனால் நன்மையே இல்லை; தீமைகளே மலிந்திருக்கின்றன.

**செய்யத் துணியாத முயற்சி**

(1) ஆங்கில எழுத்துக்கள் இருபத்தாறே; அதனால் பல ஒலிகளை அம் மொழியில் எழுத முடியாது. ஒரு எழுத்துப் பலப்பல இடங்களிற் பலப்பல விதமாக ஒலிக்கின்றது; இதைச் சீர்ப்படுத்த ஆங்கிலர் யாரும் துணியவில்லை. பெரியார் பெர்னார்டுசா செய்த முயற்சி பயனற்றுப் போயிற்று (அவர் ஆங்கிலர் அல்லர்). சில மாதங்களின் முன் ஆங்கிலப் பாராளு மன்றமும் தன் ஆங்கில மொழியில் ஒரு திருததமும் செய்யக் கூடாது என்று முடிவுசெய்துவிட்டது.

(2) வடமொழியில் 573 எழுத்துக்கள்வரை இருக் கின்றன; தெலுங்கு, மலையாளம், கன்னடத்தில் வடமொழி எழுத்துக்களோடு வேறு சில எழுத்துக்களும் இருக்கின்றன; அவைகளைக் குறைக்கவோ கூட்டவோ யாரும் முயற்சி செய் யவே இல்லை. தமிழில் 247 எழுத்துக்களே உள; அவைகளைக் கொண்டே எல்லா ஒலிகளையும் எழுதிவிடலாம். தமிழ்ப் பெரி யார் மறைமலையடிகளும், மாணிக்க நாயகரும் இவ்வுண்மையைத தெளிவுறுத்தி யிருக்கிறார்கள்.

ஆதலின், தமிழ் எழுத்து மாற்றம் செய்வது இதுவரை உல கில் யாரும் செய்யத் துணியாத, சிறிதும் பொருத்தம் அற்ற முயற்சியே.

**தீமைகளே விளையும்**

இன்றுவரை அச்சான தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்களும், புறநானூறு முதலிய சங்க இலக்கியங்களும படிக்க முடியாத நிலைமையை அடையும். இன்றுள்ள எழுத்துக்களிலே பயின்ற மக்கள், புது முறை எழுததுக்களிலே பழகி அறிவது கடினம்; இன்றுவரை ஒரு சிறிது படித்த முதியோர் அனைவ ரும், புது முறையால், படியாதவரே ஆவர். அடுத்த சில ஆண்டுகளுக்கும் பயன்படுமாறு அச்சிடப்பட்டுள்ள பள்ளிக்

---

* 'நெல்லைச் செய்தி' எனும் திங்களிதழில் வெளிவந்தது.

கூடப் பாடப் புத்தகங்களெல்லாம் பயனற்றனவாகும்; அதனால் அப் புத்தக வியாபாரிகளுக்கு ஆயிரக்கணக்கிற் பெருந்தொகை அழிந்துவிடும். இவைகளையும் இவைபோன்ற உண்மைகளையும் அரசாங்கம் எண்ணி ஆராய்ந்தல்லவா "தமிழ் எழுத்து மாற்றம் உடனே இந்த 1951 ஜூலை மாதத்திலிருந்து நடைமுறைக்கு வருகிறது," என்று ஆணையிட்டிருக்கவேண்டும்?

பழைய இலக்கண இலக்கியங்களைப் படிப்பவர் சிலரே; ஆதலின் அந்நூல்களைத் திரும்ப அச்சடிக்க எவரே முன்வருவர்? "வேறு சில மாற்றங்களும் செய்யவேபெறும்," என்ற பேச்சு உலவும் உண்மையால், இப்போதுள்ள மாற்றப்படிதான் நூல்களை அச்சிட எவர்தாம் முன்வருவர்?

"அச்சு மாற்றம் செய்துள்ளோம்," என, அரசாங்கம் ஆணையிட்டுவிட்டால் மட்டும் போதுமா? நடைமுறைக்கு வரவேண்டாவா? பொதுமக்களையும் தமிழ்ச்சங்கங்களையும் அரசாங்கம் கலந்த பின்னர் அல்லவா பொருத்தமான திருத்தங்கள் இருந்தால் கொண்டுவருதல் வேண்டும்? நிற்க.

### பொருத்தமற்ற மாற்றம்

இப்போதுள்ள தமிழ் அச்சுப் பெட்டி (Case)யில் நூற்றுமுப்பத்தொரு எழுத்துக்கள் கிடக்கின்றன. அவை வருமாறு:—

| | | | |
|---|---|---|---|
| அகரமுதல் ஔகாரம் முடிய உயிர் | 11 | உயிர்மெய் ஈகாரம் | 18 |
| | | உயிர் மெய் உகரம் | 18 |
| ஆய்தம் | 1 | உயிர் மெய் ஊகாரம் | 18 |
| மெய் | 18 | உயிர் மெய் எகரத்துக்கு (ெ) | 1 |
| உயிர்மெய் அகரம் | 18 | உயிர் மெய் ஏகாரத்துக்கு (ே) | 1 |
| உயிர்மெய் ஆவுக்குக் கால் (ா) | 1 | உயிர் மெய் ஐகாரத்துக்கு (ை) | 1 |
| உயிர்மெய் ணா, றா, னா | 3 | ணை, லை, ளை, னை | 4 |
| உயிர்மெய் இகரம் | 18 | | |
| | | ஆக | 131 |

இப்போது அரசாங்கம் செய்ய வேண்டும் என்று ஆணையிட்டிருக்கும் மாற்றங்களின் நிலைமை பின் வருமாறு:—

ஈ என்ற எழுத்தினை இகரத்தின் கொம்பைச் சுழித்து எழுதவேண்டும் என்பது; இதனால் ஒன்றும் குறையவில்லை. ஔகாரத்தில் உள்ள, ளகரம் உருமாற்றப்படவேண்டும் என்பது; இதற்கு அச்சுப் பெட்டியில் ஒரு குழி மிகும். ணா, றா, னா என்பவைகளையும் ணை, லை, ளை, னை என்பவைகளையும் எடுத்துவிட்டு முறையே ணா, றா, னா என்றும் ணை, லை, ளை, னை

என்றும் அச்சிடவேண்டும் என்பதனால் ஏழு குழிகள் குறை யும்; என்றாலும் இவ்வெழுத்துக்களுக்கு ஏற்றாற்போல் அவ்வக் குழிகளிலிருந்த எழுத்துக்களுக்கு ஈடாக, ண, ல, ள, ற, னக் களிற் போதுமானபடி எழுத்துக்களை மிகுவிக்கவேண்டும்; அத னால் அவைகளுக்கு இயல்பாக உள்ள குழிகளை விரிக்கவேண் டும், அல்லது புதுக் குழிகள் போட்டே ஆகவேண்டும்.

இங்ஙனமேதான் காலு(ா)க்கும் சுழி(ை)க்கும் ஈடாக அவ்வவைகளைப் பெருக்கிக் குழிகளை விரிக்கவோ பலவாக்கவோ செய்வது இன்றியமையாததாகும்.

இகர உயிர்மெய்களையும் ஈகார உயிர்மெய்களையும் எடுத்து விட்டு, அவைகளுக்கு ஈடாய் கிகர கீகாரங்களிலுள்ள ககரத்தின் தலைமேலான அடையாளங்களை மட்டும் வைத்துக்கொண்டு, ககரம் முதலிய அகர உயிர் மெய்களுக்குப் பக்கத்திலே சேர்த்து அச்சிடுவது; இதனால் முப்பத்தாறு குழிகள் குறையும்; இரண்டு அடையாளங்களுக்கு இரண்டு குழிகள் மிகும். ஆனால் மேலே காட்டியபடி இம் முப்பத்தாறு எழுத்துக்களுக்கு ஈடாக, ககரம் முதலிய அகர உயிர்மெய்கள் சேர்க்கப்பெறுதல் வேண்டும்; அதனால் முப்பத்தாறு குழிகளும் மிக மிக விரிக்கப்படல்வேண் டும், அல்லது பக்கத்தில் முப்பத்தாறு புதுக் குழிகளில் அவ் வெழுத்துக்கள் நிறைக்கப்படல் வேண்டும். இரண்டு அடையா ளங்களுக்கு அவை தனித்தனி பதினெட்டுக் குழிகளில் இருந் தவையாதலால் மிகப் பெரிய குழிகள் அல்லது பல குழிகள் அமைத்தல் வேண்டும்.

ஆதலினாலே நாற்பது குழிகளை எடுத்துவிட்டு ஐம்பது குழிகளை உண்டாக்கவோ, அல்லது அவ்வவை உள்ள குழிகளை மும்மடங்காக அகலப்படுத்தவோ வேண்டும். திருத்தம் செய் வது என்பது எளியதோர் செயலா?

மேலும் இங்ஙனம் மாற்றப்படும் நாற்பத்துமூன்று எழுத் துக்கள் இரண்டிரண்டாக வெட்டப்படுவதால் ஒவ்வோர் எழுத் துக்குப் பதிலாக இரண்டிரண்டு எழுத்துக்களைக் கோத்தல் இன்றியமையாததாகும்.

அதனால், 1. வேலை நேரம் இரட்டிக்கும்;
2. வேலைத் தொல்லை இரட்டிக்கும்;
3. அச்சு இடம் இரட்டிக்கும்;

அதனால் தாள் விரிந்து செலவாகிப் பணம் வீண் செலவாகும். இவைகளையெல்லாம் அரசாங்கம் ஆராய்ந்திருக்க வேண்டாவா?

**பேர்தான் தமிழ் அச்சுப் பெட்டி!**

மேலும் பேர்தான் தமிழ் அச்சுப் பெட்டி (Case). இன்று அதில் தமிழ் எழுத்துக்களுக்கு இருக்கும் குழிகள் 131; வடமொழி எழுத்துக்களுக்கு இருக்கும் குழிகள் 24; தமிழ் எழுத்துக்களுக்கு இருக்கும் இடத்தில் ஐந்திலொரு பங்கு இடத்தைப் பிற மொழியாகிய வடமொழி எழுத்துக்கள் அடைத்துக்கொண்டிருக்கின்றனவே! இது அரசாங்கத்துக்கும் அறிஞர் கண்ணுக்கும் புலனாகவில்லையா?

“இவ்வெழுத்துக்களைச் சேர்த்து அச்சிட்டால்தான் தமிழ்ப் பாடப் புத்தகங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்,” என்ற பிழைபாட்டை நீக்கவேண்டாவா? தமிழ்ப் பெருமக்களே! விழித்தெழுந்து தமிழ்த் தாயைத் தமிழ்த் தாயாகவே வளர்க்க முன் வாருங்கள்.

உள்ள எழுத்துக்களைக் குறைக்கவேண்டும் எனக் கருதும் இப் புதுமுறை ஆராய்ச்சியாளருக்கு வேண்டத்தகாத வேண்டப்பெறாத க்ஷ, ஸ, ஷ, ஹ, ஜ ஆகிய எழுத்துக்களைச் சேர்த்து வைக்கவேண்டும் என்ற தேட்டம் எங்ஙனம் எழுந்ததோ? இந்த எழுத்துக்களைக் கூர்ந்து பார்ப்பவருக்கு இவை தமிழ் எழுத்துக்களின் கூட்டெழுத்துக்களே என்பது புலனாகும். இவைகளின் ஒலியைத் தமிழ் எழுத்துக்களாலேயே எழுதிக் காட்டுவது எளிதில் முடியும்! உண்மை இங்ஙனமாக, இக் கூட்டு எழுத்துக்களுக்குத் தனி எழுத்து எதற்கு? இடம் குறைப்பதென்பது, இப்படித்தானா? அறிஞரே! ஏற்றன செய்து நலம்புரிய முன் வந்தருள்க.

---

## வடமொழி எழுத்து

தமிழ்மொழி இயற்கை ஒலியால் அமைந்தது. சொற்செட்டும், எழுத்துச்செட்டும் நிறைந்தது. மற்ற மொழிகளை நோக்க இதில் அமைந்துள்ள எழுத்துக்கள் மிகமிகக் குறைவே.

ஆகவே, தமிழ் ஒலிக்குப் பொருந்தாத—இயற்கை ஒலிக்கு மாறுபட்ட—ஷ, ஸ, க்ஷ, ஹ, ஜ முதலிய வடமொழி எழுத்துக்களை, தமிழ்வரிவடிவோடு சேர்த்துவைத்துக்கொண்டு நெடுங்கணக்கைப் பெருக்குவது, தமிழின் ஆக்கத்தை அமிழ்த்திக் கெடுப்பதாகும். குறியீடுகளால் அவைகளின் ஒலிகளை யன்றி, வேறு எந்த மொழிகளின் ஒலிகளையும் எளிதில் பலுக்கியும் எழுதியும் காட்ட ஒல்லும். ஆதலால், அவ் வடமொழி எழுத்துக்களை ஒதுக்கி விலக்கிவிடவேண்டுவது நம் தமிழ்மாந்தரின் கடமையும், இதுவே முதல்முதல் செய்ய வேண்டும் சீர்திருத்தமும் ஆகும்.

—செல்லூர்க்கிழார்.

---

# மாபெருந் தமிழ்ப்புலவர் சரவணபிள்ளை

[திரு ஆர். வி. கிருஷ்ணய்யர்]

பத்தொன்பதாவது நூற்றாண்டின் இறுதியிலும், இருபதாம் நூற்றாண்டின் முதலிலும் சேலம் நகராண்மை உயர்நிலைப் பள்ளியில் திரு. எஸ். சரவணபிள்ளை என்ற ஒரு மாபெருந் தமிழ்ப்புலவர், தமிழ்ப்பண்டிதராக விருந்தார். அவரிடத்தில் தமிழ்பயின்ற நூற்றுக்கணக்கான மாணவர்களுள் நான் ஒருவன். சேலத்திலும், சென்னையிலும் நான் படித்த உயர்நிலைப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் உத்தியோகம் பெற்றிருந்த ஆசிரியர்களில் என் நினைவில் முதன்மையாக இருப்பவர்களில் அவர் ஒருவர். அவருடைய களைமிகுந்த பரந்த முகமும், கம்பீரமான தோற்றமும், நடையும், அவருடைய ஆழ்ந்த கல்வியும், கேட்போர் மனத்தை ஈர்க்கும் சொற்பொழிவுகளும் என் மனத்தினின்றும் எப்பொழுதும அகலவல்லன அல்ல.

அக்காலத்தில், அஃதாவது ஐம்பது ஆண்டுகளுக்குமுன் நாங்கள் நான்காம் உயர்நிலை வகுப்புமுதல், கல்லூரி இடைநிலை வகுப்பு வரையில் படித்த தமிழ் நூற்களில் முக்கியமானவை நீதிநெறிவிளக்கம், நாலடியார், நானூற்பது, திரிகடுகம், குசேலோபாக்கியானம், நளவெண்பா, பெருந்தேவனார் பாரத வெண்பா, வில்லிபுத்தூரார் பாரதம், ஆசாரக்கோவை, ஆரியப் புலவர் பாகவதம், பஞ்சதந்திரம், நன்னூல் முதலியனவாம். மற்ற பள்ளிக்கூடங்களில் தமிழ்ஆசிரியர் வரும்பொழுது வகுப்பிலுள்ள பிள்ளைகள் வகுப்பினின்று எழுந்து வெளியே போய்விடுவதும், அல்லது வகுப்பிலிருந்தால் ஒருவரோடொருவர் பேசிக்கொண்டு பாடத்தைக் கவனியாமலிருப்பதும் வழக்கமென்று சொல்லிக்கொள்ளுவார்கள். ஆனால், திரு. சரவணபிள்ளை வகுப்பில் மாணவா, அவர் வரவை ஆவலுடன் எதிர்நோக்குவதோடு அக்கம் பக்கத்தில் வேறு பாடங்கள் கற்கும் பிறவகுப்பு மாணவரும், அவர் பாடம் கற்பிக்கும் வகுப்புக்கு வந்து-கூடி அவர் சொற்பொழிவுகளைக் கேட்டுக் களிப்பர். அக்காலங்களில் கல்லூரித் தலைவர், நேரில் வந்து அம்மாணவர்களை அவரவர் வகுப்புக்குப் போகச்சொல்வதுண்டு.

திரு. சரவணபிள்ளை பாடம் கற்பிப்பதே ஒரு தனியான முறை. அவர் வகுப்பிற்கு வந்தவுடன் கொஞ்சம்கூடக் காலத்தை வீணாக்காமல் அன்று குறிப்பிடப்பட்டுள்ள மூன்று அல்லது நான்கு செய்யுட்களைப் படித்து, சொற்களைப் பிரித்துப் பொருள் சொல்லி, விரிவுரைகளையும், குறிப்புகளையும் தெளி

வாகக் காட்டிவிடுவார். பிறகு அன்று சொல்லிக்கொடுத்த பாடத்தில் வந்திருந்த அருஞ்சொற்களையோ, தொடர்களையோ, பொருள்களையோ, கதைகளையோ முதன்மையாக எடுத்துக் கொண்டு வேறு நூற்களிலிருந்தோ, அல்லது அதே நூலில் வேறு பகுதிகளிலிருந்தோ மேற்கோள்களை விளக்கமாகவும், விரிவாகவும் எடுத்துக் காட்டுவார். நளவெண்பாவில் கலி தொடர்காண்டம் பாடமாயிருந்ததென்று வைத்துக்கொள் வோம். அவர் பாடம் சொல்லும் முறையில் பையன்கள் கலி தொடர்காண்டமேயன்றி நளவெண்பா முழுவதையும் கற்ற வர்களாவார்கள். முதன்மையாக அவர் திருக்குறளிலிருந்தும், கம்பராமாயணத்திலிருந்தும், தாயுமானவர்பாடல்களிலிருந்தும் மேற்கோள்கள் எடுத்துரைப்பார். தமிழ்ச் செய்யுட்களை எடுத் துரைக்கும்பொழுது, நல்ல குரலுடனும், இசையுடனும் பாடு வார். கேட்போருக்கு அவர் சொற்பொழிவுகள் ஓர் அருமை யான விருந்தாக இருக்கும். நன்னூற் சூத்திரங்களைக்கூட, அவர் தாம் சொல்லும் உதாரணங்களால் கேட்பதற்கு மிகவும் இன்பமாக இருக்கும்படி செய்துவிடுவார். அவர்போன்ற வெற்றிமிக்க நல்லாசிரியர்கள் எந்த மொழியிலும், எந்த நூலி லும் இவ்வளவு உயர்ந்த நிலையில் இருப்பது அரிது.

அவர் கம்பராமாயணத்தைக் கரைகண்டு கற்று இன்புற்ற வர். அவர் வகுப்புகளில் சுமார் பாதிக்காலம் கம்பராமாயணச் சொற்பொழிவு செய்தார் என்றே சொல்லலாம். நாலடியார், பாரதம், லீலாவதி' சுலோசனை நாடகம், பஞ்ச தந்திரம், நன் னூல் முதலிய நூற்களில் எது பாடமாயிருந்தபோதிலும் அதில் எப்படியாவது கம்பராமாயணத்தைப் புகுத்திவிடுவார். பிறகு கம்பராமாயண மூலத்தை எடுத்துக்கொண்டு செய்யுட் களைப் பாடிச் சொற்பொழிவு ஆற்றுவார். அவரிடம் படித்த மாணவர்களில் எவரும் கம்பராமாயணத்தில் ஆர்வமில்லாதவர் களாயிருக்க முடியாது.

அக்காலத்தில் தமிழ்ப் பண்டிதர்களுக்கு ஊதியம் மிகக் குறைவாயிருந்தது. திரு. சரவணபிள்ளையின் ஊதியம் ரூ. 25-க்கு மேல் எப்பொழுதும் இருந்ததில்லை. ஆயினும், 1000 ரூபா ஊதியம் வாங்கினவர்கள்கூட அவரைப்போல் மகிழ்ச்சியாக வும், மன அமைதியாகவும் வாழ்க்கையை நடத்தியிருக்கமாட் டார்கள். அவருக்குக் குழந்தைகள் இல்லாமலிருந்தபடியால், அவர் குடும்பம் மிகச் சிறிய குடும்பமாயிருந்தது. விலைவாசி களும் அக்காலத்தில் இப்பொழுதுபோல் மிகுதியாயிருக்க வில்லை. ஆதலால், அவர் குறைந்த ஊதியத்தில் இருந்தாலும், மிக உயர்வாகவே யாவராலும் மதிக்கப்பட்டார்.

அவர் தாராளகுணமும், தெய்வபக்தியும், நல்லொழுக்கமும் உடையவராயிருந்தார். அவர் வகுப்புகளிலாவது வெளியி லாவது, தற்புகழ்ச்சி, பிறரைப் பழித்தல், சிற்றின்பமொழிகள், பொழுதுபோக்கும் வீண்கதை பேசுதல், இவைபோன்ற குணங் களைக் காட்டியது கிடையாது. அவருடனிருக்கும் எவருக்கும் உயர்ந்த எண்ணங்களும் நோக்கங்களும் ஏற்படுமேயன்றி, வேறு தீய எண்ணங்களும், நோக்கங்களும் அருகிலும் தோன்ற.

அவருடைய உயர்ந்த குணத்திற்கு ஓர் அறிகுறி சொல்ல லாம். அவர், மாணவர் தேர்வுகளில் விஞக்களுக்குச் சரியாக விடை எழுதினவர்களுக்குக் காரணமின்றி மார்க்குகளைக் குறைக்கமாட்டார். சில மாணவர்கள் அவர் தேர்வுகளில் 40-க்கு 39, அல்லது 38 வாங்கினதுண்டு. "நானே இதைவிட நன்ருக விடை எழுதமாட்டேனே! நான் ஏன் மார்க்கைக் குறைக்க வேண்டும்,'' என்பார். இச் சிறு செயலை நான் ஏன் சொல் லுகிறேன் என்ருல், தமிழ்த் தேர்வாளர் தமிழ் மாணவர்களுக் குத் தேர்வில் காரணமில்லாமல் மார்க்குகளைக் குறைக்கிருர்கள். வடமொழி படிக்கிற பிள்ளைகள் அம்மொழியில் 100-க்கு 95, 100-க்கு 100 வாங்குவது இயல்பாக இருக்கத் தமிழ்மாணவர் தமிழில் 70, 75-க்குமேல் வாங்குவது அரிதாக இருக்கிறது. இதனல் தமிழ் கற்கும் மாணவரின் மொத்த மார்க்குகள் குறைந்து, முதலாவதாகத் தேறுவது அரிதாக இருக்கிறது.

திரு. சரவண பிள்ளை சரவணக் கடவுளிடம் மிக்க பத்தி யுடையவராயிருந்தார். திருநீறும் சந்தனமும் அணிந்த அவர் மலர்ந்த முகத்தில் கடவுளன்பிஞல் உண்டாகும் பொலிவு அவரைக் கண்டவர் மனதில் அவரிடத்தில் ஓர் அன்பையும், நன்மதிப்பையும் உண்டாக்கியது. கார்த்திகை மாதத்தில் ஒவ் வொரு ஆண்டும் அவர் தன் வீட்டில் கந்தசஷ்டித் திருவிழாவை மிகவும் சிறப்பாக நடத்துவார். அந்நாட்களில் அவரே சிவபுரா ணங்களையும், கந்தபுராணக் கதைகளையும் சொற்பொழிவு ஆற்றி மக்களை மகிழ்விப்பார். கண்ணப்ப நாயஞர் சரித்திரத்தில் அவர் மனம் ஈடுபட்டு அச்சரித்திரத்தைத் தமிழ்ப்பாடல்களால் பாடி யுள்ளார். அவர் அச்சரித்திரத்தைச் சொல்லி 'நில்லு கண்ணப்பா' என்று பாடும்போது எத்தகைய கன்னெஞ்சும் நெக்கியுருகும். மேலும் அடிக்கடி பெரிய அவைகளில் கம்பராமாயணத்தை அடிமுதல் முடிவுவரை நாள்தோறும் சொற்பொழிவு ஆற்றுவார். நூற்றுக்கணக்கான மக்கள் அச்சொற்பொழிவுகளுக்கு வருவ துண்டு. கம்பராமாயணச்சொற்பொழிவு செய்வதில், புகழ் பெற்ற ஒரு பெரிய நாகப்பட்டினப் புலவர் குடும்பத்தில் அவர் பிறந்தவர் என்று பிறகு நான் அறிந்தேன்.

கடைசிக்காலத்தில் திரு. சரவண பிள்ளை சைவசித்தாந்தக் கொள்கைகளுக்கும், 'இயூகிலிட்ஸ் ஜியாமெட்ரி' Euclid's Geometry-க்கும், ஏதோ ஒற்றுமைகளைக் கண்டுபிடித்து 'இயூகிலிட்ஸி'ல் உள்ள ஒவ்வொரு கொள்கைக்கும் ஒரு தத்துவார்த்தம் கூறினார். ஆனால் அவர் கண்ட உண்மையை எங்களால் கண்டு களிக்க முடியவில்லை.

அவர் தமிழுக்குச் செய்த தொண்டும், எங்களுக்கு ஊட்டிய தமிழ் இலக்கிய அன்பும், பொதுவாக எல்லாப் பொது மக்களுக்கும் ஏற்படுத்த முயன்ற தெய்வபத்தியும், நல்லொழுக்கமும், அவரையறிந்த எவராலும் மறக்கற்பாலனவல்ல. அவர் நினைவே எங்கள் வாழ்க்கையில் ஒரு நன்னெறி காட்டும் ஒளியாக விளங்குகின்றது.

---

# வாழிய தமிழே!

[திரு. க. முத்துக்குமாரசாமி]

பண் : மத்யமாவதி] [தாளம்: ஆதி

**பல்லவி**

வாழிய வாழிய வாழியவே
வளம்பெறும் நாடும் தமிழும் இனிதே. (வா)

**அனுபல்லவி**

காழுறு நன்மையும் கடமையும் கொண்டு
கவிஞர்கள் போற்றிடும் கலைநலன் கண்டு. (வா)

**சரணங்கள்**

ஏழிசை யும்அதன் இனிமையும் சேர்ந்து
ஈசனைப் போற்றுநல் எண்ணமும் வாய்ந்து
மேழியும் செல்வமும் மேன்மையும் தாவி
மிகுபுகழ் வல்லவர் நல்லவர் மேவி. (வா)

புகழுடன் வேண்டிய புலமையும் ஓங்கி
புவனமெல் லாம்தொழும் புதுமையும் தேங்கி
திகழுற ஏழ்மையும் தீமையும் நீங்கி
திருமிக மருவிய அருள்மொழி தாங்கி. (வா)

---

# தமிழ்த்தாய்க் கொலை

[கணியர், டாக்டர். திரு. இ. மு. சுப்பிரமணிய பிள்ளை]

மக்கள் முதன்முதலாகத் தோன்றிய இடம் தமிழகம்; தமிழ் மக்களே பல்கி உலகமெங்கும் பரவினர். ஆதலின் அவர்களே இன்று உலகில் வாழும் எந்நாட்டினருக்கும் மூதாதையர். அவர்கள் பேசிய மொழியே உலக முதன்மொழி; அவர்கள் வேறுவேறு இடங்களிற் சென்று வாழத் தொடங்கியபோது தட்ப வெப்ப வேறுபாட்டுக்கு ஏற்ப அவர்கள் பேச்சும் மாறு பட்டது; ஆதலின் உலக மொழிகளுக்கெல்லாம் தாய்மொழி தமிழ் என்பது மிகையாகாது. சம்ஸ்கிருதத்துக்கும் தாய் மொழி தமிழே. ஆதலின் பல சொற்கள் தமிழிலிருந்து சம்ஸ்கிருதத்துக்குச் சென்றிருக்கின்றன; அவை வடசொற்போலக் காணப்பட்டாலும் உண்மையில் தமிழ்ச்சொற்களே. இதையே முதல் உரையாசிரியர் ஆகிய இளம்பூரணர் "வடசொல்லாவது வடசொல்லோடு ஒக்கும் தமிழ்ச்சொல்," என்று கூறுகின்றார். இதனை மறுத்துப் பின்னால் வந்த சேனாவரையர் என்ற உரையாசிரியர் "வடசொல் உலக மொழி; ஆதலின் வடசொல்லே தமிழில் வந்து விளங்குவதாயிற்று," என்று எழுதினார். இங்ஙனம் அவர் கூறியது தொல்காப்பியம் 401-வது சூத்திர உரையில். அச்சூத்திரம் வருமாறு:—

"வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே"

(தொல். எச்சவியல்: 5.)

இச்சூத்திரமும் இதற்கு அடுத்ததும் இடைச்செருகலாக வேண்டும் என்று சில தக்க புலவர் கருதுகின்றனர். தமிழையே தாய்மொழியாகவும் தம் வயிற்றுப் பிழைப்புக்கு வழியாகவும் உடைய சிலர், ஏதோ மயக்கத்தால் உண்மைக்கு மாறாகத் தமிழ்மொழியினும் சிறந்தது வடமொழி எனவும் அதிலிருந்து சொற்கள் தமிழில் வந்து வழங்குவன என்று சொல்லி வழங்கவும் தலைப்பட்டனர். அப்போது தமிழ்ப்பெரியார் பொருள்களின் வடமொழிப் பெயர்கள் மட்டும் தமிழில் வந்து வழங்கட்டும், வழங்கும்போது வடஎழுத்து நீக்கித் தமிழ் எழுத்தாலேயே எழுதப்பெறுதல்வேண்டும் என்று இடம் தந்தனர்.

தமிழின் தனிப்பண்பைக் கெடுக்கவேண்டும் என்பதே சிலர் குறிக்கோள்; அவர்கள் அதற்காகச் சம்ஸ்கிருதச் சொற்களை மிகுதியாகத் தமிழில் புகுத்தத் தலைப்பட்டனர்; பின்னர் அவர்கள் அதற்கேற்ப எழுத்துக்களையும் மாற்றப் புகுந்தனர்.

இங்ஙன்மான முயற்சியினாலே தமிழ்நாட்டின் ஒரு பகுதி பிரிந்து தெலுங்கு நாடாயிற்று; மற்றொரு பகுதி கன்னட நாடாயிற்று; பழைய தெலுங்கு அச்ச தெலுங்கு எனவும் கன்னடம் பழங் கன்னடம் எனவும் பெயர்பெற்றன. அச்ச தெலுங்குவும் பழங் கன்னடமும் தனித்தமிழே. தமிழ்மன்னர் சேரர் ஆண்ட நாடு இம்முயற்சியினாலே மலையாள நாடாகப் பிரிந்துவிட்டது. திரு வனந்தபுரம் அரசாட்சியில் ஐம்பது ஆண்டுகளின் முன்வரை தமிழிலேயே பதிவுகளெல்லாம் இருந்துவந்தன. இப்பொழு துள்ள தமிழ்நாடு மட்டும் இம் முயற்சியில் அகப்படாமல் இருந்துவருகின்றது.

கி. பி. 1178—1216 வரை அரசாண்ட மூன்றாம் குலோத் துங்கன் காலத்திலிருந்த சீயகங்கன் என்ற சிற்றரசன் அவையி லிருந்த பவணந்தி என்ற பெரியார் நன்னூல் என்ற இலக்கண நூலை ஆக்கினார். அவர் காலத்திலே ஜ, ஷ, ஸ, ஹ, க்ஷ என்ற சம்ஸ்கிருத எழுத்துக்களை அவர்கள் புகுத்தித் தமிழைக் கெடுக்க எண்ணியபோது அவர், "கூடாது, அவைகளைத் தமி ழில் இன்னின்ன தமிழ் எழுத்துக்களாலேதான் எழுதவேண் டும்," என்று விதி அமைத்தார். (நன்னூல் பதவியல்-வடமொழி ஆக்கம்.)

நாளடைவில் தமிழின் பழைய உருவத்தைச் சொற்களா லும் எழுத்துக்களாலும் மாற்றவேண்டும் என்று முயன்றவரு டைய சூழ்ச்சி சென்ற முப்பது ஆண்டுகளாகப் பலிக்கத் தொடங்கிற்று. அவர்களிற் சிலர் பாடப்புத்தகக் கழகத் (Text Book Committee) தில் முதன்மைபெற்று "முதற் பாடப் புத்தகத்தில் ஜ, ஷ, ஸ, ஹ, க்ஷ என்ற எழுத்துக்களைச் சேர்த்துப் பாடங்களும் எழுதி அச்சிட்டால் மட்டும் அவைக ளைப் பாடப் புத்தகங்களாக ஏற்போம்," என்று மறைமுகமாக விதி அமைத்து வற்புறுத்தத் தொடங்கினர். என்ன எதிர்த் தும் அவர்களை வெல்ல முடியவில்லை. அதனால் வயிற்றுப் பிழைப்பே பெரும் பிழைப்பாகக் கருதிய புத்தகப் பதிப்பாள ரும், ஆசிரியரும் அங்ஙனமே புத்தகங்கள் எழுதி அச்சிட்டுப் பிழைக்கத் தொடங்கினர். அதனால் அவர்தம் தமிழ்த்தாய் கொலை செய்யப்படுகிறாள் என்பதை உணர்ந்தாரல்லர்.

இந்த அளவு வெற்றி கண்டதில் ஊக்கம் பெற்றவர்களாய் அவர்கள் தனித்தமிழில் எழுதப்பெறும் நூல்களைப் பாடநூல் களாக ஏற்காமல் பதிப்பாளருடைய ஊக்கத்தைக் குறைக்கத் தலைப்பட்டனர்; இம் மறைமுகச் சூழ்ச்சியும் ஓரளவு வெற்றியே பெற்றுள்ளது. ஏமாந்த தமிழ்மக்களும் தமிழ்ப்புலவர்களும்

செய்வது இன்னதென அறியாதவராய்த் தவிக்கத் தொடங்கினர். அதற்குக் காரணம் நாடு விடுதலையடைந்தபின் சென்னைக் கல்வியமைச்சராக வந்தவர் தமிழரேயாயினும் என்ன காரணத்தாலோ அவர்களுடைய சூழ்ச்சி வலையிலே பட்டனர். மேலும் தனித்தமிழ் வளர்க்கும் சங்கங்கள் பல இருந்தாலும் அவர் புதிதாகத் தமிழ்வளர்ச்சிக் கழகம் என்ற ஒன்றை அமைத்து, அதில் தமது கொள்கை உடையவரை மட்டும் சேர்த்து வடசொற்களை அளவில்லாது தம் தெய்வத் தமிழ்த்தாயோடு சேர்க்கவும் ஜ, ஷ, ஸ, ஹ, க்ஷ என்ற வடஎழுத்துக்களைக் கலக்கவும் இடம் தந்து முயன்றதோடு மேலும் தம் பண்டைப் பெரியோரால் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக எழுதிவந்த தமிழ் எழுத்துக்களையும் உருமாற்றும் முயற்சியிலும் ஈடுபட்டனர். இம் முயற்சியில் அவரைத் தூண்டித் துணையாக இருந்துவருபவர் சுதேசமித்திரன் ஆசிரியர் திரு. சி. ஆர். சீனிவாசன் அவர்கள். இந்நன்றியை மறவாது இவரைத் தமிழ் வளர்ச்சிக் கழகம் யாழ்ப்பாணத்திலே அண்மையிற் கொண்டாடிய தமிழ்த் திருவிழாவின் தலைவரும் ஆக்கிற்று. தமிழ்த்திருவிழா தலைமை உரையை ஆராய்வோம்.

தலைவர் பெயர் அதில் ஸ்ரீ. ஸி. ஆர். ஸ்ரீநிவாஸன் என்று குறிப்பிட்டிருக்கிறது; இது தமிழா வடமொழியா? தமிழில் எழுதும் முறை இதுதானா? ஸி. ஆர். என்பன எதற்கு அடையாளங்கள்? முன் தமிழ்ப்பெரியாராக இருந்த சாமிநாதையர் அவர்கள் பெயரை அவர்கள் குறித்துவந்த முறைக்கு மாறாகச் சுவாமிநாதய்யர் என்றும், திருவாரூர் என்பதைத் திருவாலூர் எனவும் தலைமையாகக் குறித்திருக்கிறது. தமிழ்த்தாய் என்பது தமிழ்தாய் எனவும், தமிழ்த்திருநாள் என்பது தமிழ் திருநாள் எனவும் இங்ஙனமாய பல பிழைகள் மலிந்திருக்கின்றன. கழகம் என்ற சொல் 'கமிட்டி' எனவும், அறிக்கை என்ற சொல் 'ரிப்போர்ட்' என்றும், அரசாங்கத்தார் என்பது 'கவர்ன்மெண்டார்' எனவும் வேண்டுமென்று குறிப்பிட்டிருப்பதுபோல ஆங்கிலச் சொற்கள் கலந்துள்ளன. மாநாடு என்ற சொல் மகாநாடு என்று மூன்றிடங்களிற் காணப்படுகிறது. பாஷை என்ற சம்ஸ்கிருதச் சொல் பதினெட்டிடங்களில் வந்திருக்கிறது; அதன் தமிழாகிய மொழி என்ற சொல் ஓரிடத்துக்கூடப் பயன்பெறவில்லை.

அவர்கள் பேச்செல்லாம் சுதேசமித்திரனில் ஏழு பத்திகள் கொண்ட பக்கம் ஒன்றில் இரண்டேகாற் பத்திகளில் 29-4-1951-ல் அச்சிடப்பட்டிருக்கிறது. அஃதாவது ஒரு பக்கத்தில் மூன்றில் ஒரு பகுதி. இந்தச் சிறு பேச்சிலேயே நூற்

றெழுபத்தொரு (171) சம்ஸ்கிருதச் சொற்கள் கலக்கப்பட்டுள்ளன. அவை பல இடங்களில் ஜ, ஷ, ஸ, ஹ, க்ஷ என்ற எழுத்துக்கள் விரவப்பட்டுக் காட்சியளிக்கின்றன. இங்ஙனமாகத் தமிழைச் சொல்லளவில் உருக்குலைத்துவந்த இவர்கள் இப்போது எழுத்தளவிலும் உருக்குலைக்கத் தலைப்பட்டுவிட்டார்கள். தலைப்பட்டு ஓர் அளவு வெற்றியும் பெற்று வெற்றிபெற்ற அளவில் தமது தலைமை உரையை அச்சிட்டுக் காட்டியிருக்கிறார்கள்.

மாநாட்டுத் தலைவர் "கல்பற்ற தமிழிற் பேசவும் இயலவில்லை," என்று குறிப்பிட்டுள்ளார்; அவர் மேலும் 1933-ல் நடைபெற்ற தமிழ் அன்பர் மாநாட்டைப்பற்றிக் குறிப்பிடும்போது குறித்துள்ள பின்வரும் பகுதி ஆராயத்தக்கது :—

"தமிழ் அன்பர்களாக அன்று நடித்தவர்கள் கள்ளக் காதலர்களோ என்ற சந்தேகம்"— இது உண்மையினும் உண்மை என்று பல தமிழ்ப்பெரியார் கருதுகின்றார்கள்.

பேசிய பேச்சு மூன்றில் ஒரு பக்கம்; அதில் நாலில் ஒரு பகுதி சம்ஸ்கிருதம்; எழுத்தும் தமிழ்எழுத்தில் பெரும் பகுதி இல்லை; பண்டைய எழுத்துருவங்கள் பல மாற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன. இன்னும் உகர ஊகாரங்களுக்கு ு, ூ என்ற சம்ஸ்கிருத மாற்றத்தைச் செய்யப்போகிறார்கள்; F, Z. போன்ற வட எழுத்துக்களைக் கலப்பதற்குச் சமயம் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்றால் இவர்களுடைய முயற்சி தமிழ் அன்பர்களாக நடிக்கும் கள்ளக் காதலர் முயற்சியே என்பதற்குத் தடையென்ன இருக்கிறது?

தமிழ்ப் பெரியார்களே! இவ்வுண்மைகளைக் கவனித்து வேண்டுவன செய்து தமிழ்த்தாயைக் கொலை செய்யப்படுவதிலிருந்தும் பாதுகாக்க முன்வந்தருள வேண்டுகிறோம். இதனைச் சுருக்கமாக எழுதினோம். விரிவாக எழுதவும் போகிறோம். அரசாங்கம் இவ்வுண்மைகளை யெல்லாம் கவனித்துத் தக்கன செய்யும்படி வேண்டிக்கொள்கின்றோம்.

ஒரு மொழியை அழிக்க வேண்டுமானால் அதிலே பிற மொழிச் சொற்களை நிரம்பப் புகுத்தி அதன் எழுத்துக்களைத் திருத்திவிட்டாற் போதுமானது. நாமும் எழுத்துத் திருத்தத்தை ஆதரித்தோம்; செந்தமிழ்ச் செல்வியிற் கட்டுரையும் எழுதினோம்; ஆனால் அன்று இக்கட்டுரையிற் கண்ட உண்மைகள் எமக்குத் தோன்றவில்லை. இன்று இவ்வுண்மைகளை உலகறிய வெளியிடுகின்றோம். எந்தத் தமிழனுக்கும் "தன்மொழி மலையா

ளம், கன்னடம், துளுவம், தெலுங்கு என்று பிரிந்து போன தோடாவது நிற்கட்டும். இனி வேறு கேடு செய்து எஞ்சியதையும் அழித்தல் கூடாது," என்ற கருத்தே முனைந்து நிற்கும் என்பதில் தடையில்லை. இன்றுவரை அச்சான நூல்களெல்லாம் என்னுவன? 'இலினோ டைப்பு' என்ற பெயரை வைத்து இங்ஙனம் தமிழ்க்கொலை செய்யலாமா? இதை 'டயோசிசன்' அச்சகத்தார் முன்னரே ஓர் இலினோ டைப்பு அச்சுப்பொறி கொண்டு தமிழ் உருக்குலையாமல் அச்சடித்து வந்திருக்கிறார்கள் என்பதை யாம் அறிவோம். இப்போதுள்ள அச்சகங்களும், அச்சு வார்ப்பு நிலையங்களும் அழிந்தொழியுமே! அடுத்த ஆண்டுக்கென அச்சடித்து வைத்திருக்கும் பாடப் புத்தகங்கள் என்னும்?

இப்போது எழுத்துக்களைக் குறைத்து விட்டோம் என்பது ஏமாற்றமல்லவா? இப்போது எத்தனை எழுத்துக்கள் இருக்கின்றனவோ அத்தனை எழுத்துக்களையும் அடித்துத்தானே ஆக வேண்டும்?

உயிர் மெய் இகர ஈகாரங்களையும் ணை, று, னை, ணை, லை, ளை, னை களையும் எடுத்துவிட்டாலும் இடம் குறையாதே! எடுத்துவிடும் இவ்வெழுத்துக்களுக்குப் பதிலாக அவைகளின் அளவுக்குக் குறையாத உயிர் மெய் அகரங்களையும் ஆகார, இகர ஈகார ஐகாரக் குறியீடுகளையும் அல்லவா அச்சுப் பெட்டியிற் சேர்க்கவேண்டிய இன்றியமையாமை ஏற்படுகின்றது? அப்போது குறைப்பு என்பது வெறும் பேச்சளவில்தானே நிற்கும்? மேலும் இந்த 43 (18 + 18 + 3 + 4) எழுத்துக்களை எடுத்தெறிந்து அவைகளின் இயற்கையான கண்ணைக் கவரும் அழகிய வடிவங்களால் விளையும் பயனை அகற்றி இகர ஈகாரங்களுக்கு இரண்டு தனிக் குறியீடுகளைச் சேர்த்து அச்சுக் கோக்கும்போது ஒவ்வோர் எழுத்திற்குப் பதிலாக இரண்டிரண்டு எழுத்துக்களை வைத்து இடத்தை மிகுதிப் படுத்துவதோடு உழைப்பை இரண்டு மடங்காக்கி ஒரு மணி நேரத்தில் ஆகவேண்டிய வேலையை இரண்டு பங்கு ஆக்கிக் கண்ணையும் புண்ணாக்குவதனாலே விளையும் பயன் என்ன? இடம் என்பது தாளில் அல்லவா? தாள் என்னும்போது பணமன்றோ வீணாகும்? இடத்தைச் சுருக்க வேண்டும், நேரத்தைக் குறைக்கவேண்டும் என்று சொல்லிக் கொண்டு இங்ஙனம் செய்வது ஆராயாமற் செய்யும் செயலாகும் அல்லவா?

அச்சுமாற்றக் கழகத்தில் இருந்த உயர்திருவாளர்கள் சென்னைப் பல்கலைக் கழகப் பேராசிரியர் சேதுப் பிள்ளையவர்கள், டாக்டர் வரதராசனாரவர்கள், பன்மொழிப் புலவர் மீனாட்சி

சுந்தரம் பிள்ளையவர்கள், சொக்கலிங்கம் பிள்ளையவர்கள் முதலிய பெரியார், அருமையும் பெருமையும் மிக்க அருந்தவத் தமிழ்த்தாய் மக்கள் அல்லரா? அவர்களை யாம் மன்றாடிக் கேட்கின்றோம்? அரசாங்கமும் அவர்களை மறுபடி கேட்கட்டும்; "உகர ஊகார உயிர்மெய்த் திருத்தங்களைச் செய்து முற்றிலும் உருக்குலைக்காமலும், F, Z. களைச் சேர்க்காமலிருக்கும் பொருட்டு இகர ஈகாரப் புரட்சிக்கு இணங்கினோம்; தமிழுலகம் சும்மாவா இருக்கும்? என்றே எண்ணினோம்," என்றுதான் அவர்கள் சொல்லி இப்போது யாம் காட்டிய உண்மைகளுக்கு உடன்படுவர். இகர ஈகார மாற்றத்தால் பெருங் குழப்பம் விளையும் என்பதை விளக்கிக்காட்டத் தயாராக இருக்கின்றோம். சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் இலட்சுமண சாமி முதலியாரவர்களையும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் டாக்டர் மணவாள ராமானுசம் அவர்களையும், பேராசிரியர் டாக்டர் சிதம்பரநாதச் செட்டியாரவர்களையும், ஏனைப் புலவர்களையும் அரசாங்கம் கேட்கட்டும்; அவர்கள் ஒரு நாளும் இப்புரட்சிக்கு இணங்கவேமாட்டார்கள் என்பதை நாம் அறிவோம்.

அறிஞர்திலகரால் நடத்தப்படும் "இந்து" இப்புரட்சியைக் கடுமையாகக் கண்டித்துத் தலையங்கம் எழுதியிருக்கிறது. அறிஞர் வி. வி. இராமசாமியவர்களால் நடத்தப்பெறும் "தமிழ்த் தென்றல்" அரசாங்கத்தை எச்சரித்திருக்கிறது (ஆகஸ்டு மடலில்); தென்னிந்திய தமிழ்ச்சங்கத்தார் நடத்தும் "செந்தமிழ்ச் செல்வி" கண்டித்துத் தலையங்கம் எழுதியிருக்கிறது. 2-9-1951ல் மதுரைத் தமிழ்ச்சங்கப் பெரியார், அதன் தலைவர் சேதுபதியவர்களுடைய தலைமையிலே கூடி இம் மாற்ற முயற்சியை வன்மையாகக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றியிருக்கின்றார்கள். நமது சென்னை மாகாணத் தமிழ்ச்சங்கம் 12—3—1950லேயே அரசாங்கத்தை வற்புறுத்தி வேண்டிக்கொண்டதோடு இம்முயற்சியைக் கண்டித்து 21—7—1951ல் தீர்மானித்திருக்கிறது. இப்போது நமது சென்னை அரசாங்கத்தைப் பின்வருமாறு வேண்டிக்கொள்கின்றோம்.—

(1) இந்த எழுத்து மாற்ற ஆணையை உடனே தள்ளுபடி செய்க;

(2) கிரந்த எழுத்துக்களை (ஜ, ஷ, ஸ, ஹ, க்ஷ)த் தமிழ் நூல்களிலே புகுத்தி எழுதவிடாமல் பிற மொழிச் சொற்களைத் தகாதவாறு புகுத்த விடாமலும் ஆணை ஆக்குக.

தமிழ்த்தாய் வாழ்க, "வாழிய செந்தமிழ்."

# எழில்

[திரு. பா. சூரியநாராயணன், B. A. Hons]

எரிஅழல் நிகர்த்த தேமா இளந்தளிர் மேனி; கார்போல்
சுரிகுழல்; சேலேய் கண்கள்; செவ்விய கொவ்வைச் செவ்வாய்;
விரிதிரழ் முல்லை யன்ன வெள்ளெயிற் றோடு, வானில்
திரிதரு திங்கள் போலும் திருவுடை வதனந் தன்னில். 1

சிறுகிதழ் எள்ளின் பூப்போல் சிறந்தொரு மூக்கும், மாவின்
அறுவடு போலும் நீண்டே அழகிய கண்ணும், அண்டும்
குறுகுநல் வள்ளைக் காதும், கூனலம் பிறையும், மின்னும்
சிறுகிடை துவளச் செல்லும் செம்மையும் எழிலா மன்றே! 2

யாழிலும், நீண்ட வேயின் குழலிலும், மெல்லத் தோன்றித்
தாழவே ஆர்க்கும் தூய முழவிலும், தாளம் தேர்ந்தே
ஆழவே வல்லோன் பாடும் அழகிய மிடறும் சேர்ந்தே
ஏழிசை உள்ளத் தூற்றும் உணர்ச்சியும் எழிலா மன்றே! 3

வண்ணமும் வடிவும் சேர்ந்து, நறுவிய மணமும், மிக்காய்
எண்ணரு மலர்கள் தோறும் எழுதரு கவினும், நாவால்
உண்ணுதற் குரிய ஆறின் சுவையுடை உணவும், அன்பால்
நண்ணுதற் குரிய மேனி நாடலும் எழிலா மன்றே! 4

ஆருயிர் அனைத்தும் அன்பால் அணைத்தருள் குழைந்த உள்ளம்
பாரினில் பரந்த நீர்போல் பண்பிணைத் தெளிந்து, நாட்டும்
கூரிய அறிவின் செம்மைக் கோலமும், கொள்கைக் காகச்
சீரிய உடலை வாட்டும் செப்பமும் எழிலா மன்றே! 5

காண்டலும் கேட்ட லோடு களிப்பொடு முகர்ந்தே உண்டு,
தீண்டவும் இன்பம் நல்கும் திறனெலாம் மக்கட் கன்றி,
ஈண்டிய விலங்குக் கேயும் எழில்; அது புறத்த தாகும்;
தூண்டிய அருளின் நோக்கால் துலங்கெழில் அகத்த தாமே. 6

மக்களும் பிறவும் சாணும் புறஎழில் நிலையன் றாகும்;
தக்கஐம் புலன்க ளோடு தகுபொறி இணைந்தா லன்றோ
மிக்கநல் எழிலி னின்பம் மேவலாம்; மேன்மேல் உண்மை
தொக்கநல் அறிவி னூற்றல் தூயநோக் குயர்ந்த பண்பும் 7

தளிர்த்தெழப் பரவி எங்கும் தழைத்தெழும் எழில்தா னென்றும்
பளிக்கினிற் பாயு நீர்போல் பாரெலாங் கொடுமை நீக்கி,
அளிக்கும்நல் இன்ப வாழ்வை, ஆண்டவ னருளை, அன்பை;
களிக்கும்நற் கவிஞர் வாழ்விற் கண்டதோர் எழிலீ தன்றே. 8

உலகினில் எய்த லாகும் அறம், பொருள் இன்பமோ டிங்கு
அலகிலா வீடும் நாட்டும்; அகஎழில் பண்பிற் கெல்லாம்
இலகிடம் முருக னென்றென் றியம்பினர் முன்னோர், வாழ்க!
குலவுமிஞ் ஞாலம் வாழ்க! குறைவற வாழ்க நன்றே! 9

# மேற்புலத்தறிஞர் கண்ட தமிழகம்

[திரு. வரத. வீரப்பன், புதுவை]

(சிலம்பு உ௫, பரல் கக, ௫௪0-ஆம் பக்கத் தொடர்ச்சி)

31

ஆந்திர சேர சோழ அரசுகள் அடங்கிய தீவக்குறையின் நாடுகளுள் நுழையும் முயற்சியில் வெற்றி பெற்ற பார்ப்பனர் ஆங்கே நாகரிகம் நனிவாய்ந்த மக்கட்டொகுதியைக் கண்டனரே யன்றித் திருந்தாத வெறும் முரட்டு இனத்தினர் நிறைந்த குழுவினரைக் காணவில்லை. தமிழரும் வடவரும் சமயத்தாலும் புறவொழுக்க நெறிகளாலும் மிக விரிந்த அளவில் வேறுபட்டு நின்றனர். தமிழரிடைக் குலப்பாகுபாடு தோன்றவேயில்லை. இந்நிலைமையே இன்றும் உள்ளது. பர்மாவில் மட்டும், பேய் வழிபாடு புரிவது தமிழர் சமயம் எனப் புனைந்துரைக்கப் பட்டது முதன்முதல் பேய்த் தெய்வங்கள் என்று கூறப்பட்டவையே பின்னர்ப் பார்ப்பனரால் புதுப்பெயரிடப் பெற்று, ஆரியமறை நுதலிய கடவுளரோடும் அக்கடவுளர்தம் துணைவியரோடும் சேர்த்து ஒன்றாக்கிக் கொள்ளப் பெற்றன. —ஸ்மித்

32

தலைக்காலத்துத் தமிழர்கள் நாகரிகமிலராய், இழிநிலையெய்தியவராய் வாழ்ந்தனர் என்றியம்ப எத்தகைய குறியும் இல்லை. காட்டகத்துறைந்த வகுப்பினர் நிலைமை எத்தன்மையதாயிருந்திருப்பினும், திராவிடர்—இப்பெயரிட்டழைப்பதே முறையாகும்—தம்மிடையே பார்ப்பனர் வந்து குடியேறுவதற்கு முன்னரே, குறைந்த அளவு, நாகரிகத்திற்கு அடிப்படையாயுள்ள பகுதிகளாயினும் அமையப்பெற்றிருந்தனர் என்பதில் ஐயுறவில்லை.

வடமொழியடியாகப் பிறந்த சொற்களை நாம் தமிழ்மொழியினின்று களைந்தெறிந்தோமாயின், எஞ்சிநிற்கும் இயற்றமிழ்ச் சொற்கள் ஆரிய வலையில் வீழாத தமிழரின் மாசற்ற வாழ்க்கை ஓவியத்தை உள்ளது உள்ளவாறே தீட்டிக் காட்டும். வடமொழிக் கலப்பினின்று விடுபெறுங் காலைப் பழந்தமிழ் நிகண்டுகள் விளக்கியுதவக்கூடும் பண்டைய தமிழர் மனநிலை, ஒழுகலாறுகள், சமயம் இவையிற்றினைப்பற்றிய குறிப்புக்களைமட்டும் தற்பொழுது எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

பழங்காலத்துத் தமிழரிடை வழங்கலுற்ற சொற்கள் தரும் சான்றின் துணை கொண்டு நோக்குங்கால், கீழ்வரும் செய்திகள் நமக்கு விளக்கமாகின்றன! இவர்கட்குத் தலைமையாக விளங்கிய "வேந்தர்கள்" "அரண்மனைகளில்" உறைந்து, சிறு "நாடு" களைப் புரந்தார்கள். இவர்களிடை,"பாணர்" என்போர் "விழா"க் களில், "பாக்கள்" இசைத்தனர். இவர்கள் அகர முதலான "எழுத்து"க்களைப் பனையோலைகளில் எழுத்தாணி கொண்டு எழுதியதாகத் தெரிகிறது. இங்ஙனம் வரையப்பெற்ற பனை யோலைத் தொகுதியைச் "சுவடி" என்றழைத்தார்கள். தெய்வம் ஒன்றுண்டு என்னும் உண்மையை இவர்கள் ஆய்ந்தறிந்துணர்ந் தார்கள். அம்முழுமுதற்பொருட்கு, இவர்கள் "கோ" அல்லது "இறை" எனப் பெயரிட்டார்கள். இங்ஙனம் உண்மையோ டியைந்தவாறு பெயரிடும் முறை ஆரிய மறைவழி நிற்கும் இந்து சமயத்திற்குப் பெரிதும் புறம்பானது. இறைவனைச் சிறப்பித்தற் பொருட்டு ஒரு நெடுமனை எடுப்பித்து இறைவன் உறையுள் என்னும் பொருள் தோன்றுமாறு, "கோ—இல்" எனப் பெயர் சூட்டினார்கள். "நெறிமுறைகள்" என்றும், "ஒழுகலாறுகள்" என்றும் இவர்கள் வகுத்திருந்தார்கள். ஆயினும், வழக்கறிஞர் என்றோ அன்றி முறைமன்ற நடுவர் என்றோ இவர்களிடை எவரும் இல்லை. மணமுறை வழக்கிலிருந்தது. "தகரம்" "ஈயம்" "துத்தநாகம்" நீங்கலாகப் புழக்கத்திலுள்ள ஏனைய உலோகப் பொருள்களையும்; "புதன்" "சனி" இவையிரண்டும் ஒழிய, முற் காலத்தவர்க்குப் பொதுவாகத் தெரிந்த கோள்களையும் இவர்கள் அறிந்திருந்தார்கள். இவர்கள் "மருத்துவக்கலை"யில் பயிற்சி யுடையராய் விளங்கினார்கள்; "ஊர்"களிலும் "பட்டு"களிலும் உறைந்தார்கள். "சிற்றோடம்" "படகு," மற்றும் கப்பல் (கரை யடுத்துச் செல்லும் மேன்மாடங்களமைந்த சிறிய மரக்கலங்கள்) களுங்கூட இவர்கள் வைத்திருந்தார்கள். அந்தக்காலத்தில், கடல்வடிவு நாட்களில், ஒருகால், கால்நடையாகச் சென்றணுகும் சேய்மையிலிலங்கிய இலங்கைக்கண் வாழும் மக்களோடன்றிக், கடலுக்கப்பாலுள்ள ஏனைய மக்கள் எவரோடும் இவர்கள் நெருங்கிப் பழகினார்கள் அல்லர். "தீவு" அல்லது "நிலப்பிரிவு" இவற்றினைப்பற்றி நிலநூற்கருத்துத் தோன்றுமாறு தெளிவுற வமைந்த சொற்கள் எழுத்தாட்சியிலில்லை. இவர்கள் "உழவு"த் தொழிலில் மிகுந்த தேர்ச்சியும், "போரில்" பேர் ஊக்கமும் உடையராய்த் தோன்றினார்கள்: செருக்களத்தில் "வில்" "வேல்" "அம்பு", "வாள்" முதலான படைகளைப் பயன்படுத்துவர்கள். "நூற்றல்," "நெய்தல்" "சாயந்தோய்த்தல்" உள்ளிட்ட பொது அல்லது இன்றியமையாத வாழ்க்கைக்குரிய வழிவகைகள் கண்டு பயன் துய்த்து வந்தார்கள். "மட்கலம் வனை"வதில் இவர்கள்

தலைசிறந்து விளங்கினார்கள். இவர்கள் கட்டுவித்த பிணவறைகள் அதனை விளக்குவனவாகும்.

பார்ப்பனர் வருகைக்கு முன்னர் வாழ்ந்த தமிழர்களின் பொது வாழ்க்கை நிலையைப்பற்றிப் பழைய தமிழ் நிகண்டுகளி னின்று எடுத்தாண்ட இச்சுருக்கமான மேற்கோள்கள், நாக ரிகத்திற்கு அடிப்படையான பகுதிகள் பற்பல இவர்களிடை நலமுற நிலவின என்பதை உறுதிப்படுத்தப் போதுமானவைக ளாகும்.　—கால்டுவெல்

33

உயர்நிலை மேவும் பண்பினதாய், தமிழர்க்கே சிறப்பாக உரியதாய், வடநாட்டுத் தொடர்பேதும் இலதாய் இலங்கிய நாகரிகத்தினைத் தமிழ்ப்பெருமக்கள் ஆக்கமுற விளைவேற்றி வந்தனர். வடநாட்டினின்று மதுரைக்கும் வேறு பல நகர்களுக் கும் போந்து புதுவதாக வாழிடம் அமைத்துக்கொண்ட வந் தேறு குடியினர், குலவொழுக்கச் சமயச் சடங்குகள் சார் புடைய ஆரியக் கருத்துக்களைப் புகலிடத்தே புகுத்த முயன்ற னர்; அதனால், மிகுந்த எதிர்ப்புக்கு ஆளாயினர். மேலும், தென்னாட்டில், பல நூற்றாண்டுகளாக வேறெங்கணும் காணக் கூடாத அத்துணைக் கடுமையாகப் பின்பற்றப்பட்டு வந்த குல முறை, பின்னர் முற்றுப்பெறாததாகவும் குறைபாடுடையதாக வுமே நிற்கலானது.　—ஸ்மித்

34

கொமார் என்னும் பெயருடைய ஒரு நாட்டினைப்பற்றி மசூதி என்பார் குறிப்பிடுகிறார். அப்பெயர் குமரிமுனை என் னும் சொல்லடியாகப் பிறந்தது என்பது புலனாகிறது. மேலும், தஞ்சைவளநாடும், தீவக்குறையின் தென்கிழக்குப் பகுதி முழுமையும் அந்நாட்டுள் அடங்கியிருந்தனவாகக் கருதலாம். மசூதி கூறும் வரலாறு வருமாறு: "கொமார்நாடு ஒரு தீவு அன்று; அது கடற்கரைகளாலும் மலைகளாலும் அமையப்பெற்ற நாடாகும். இதனைப் பார்க்கினும் மக்கட்பெருக்கம் வாய்ந்த நாடுகள், இந்தியாவிலேயே மிகக்குறைவு.......இந்திய மக்களுள், கொமார் நாட்டிடை வாழ்வோர்மட்டுமே கற்புநெறி பிறழாதவ ராகவும், தீயவொழுக்கங்களினின்று தற்காத்துக்கொள்பவ ராகவும் விளங்குகின்றனர். மயக்கந்தரும் குடிநீர் வகைகளை அவர்கள் பருகுவதில்லை. இதனைப் பொறுத்தமட்டில், இந்திய ருள் பெரும்பாலோர் மேற்கொண்ட ஒழுக்கத்தினின்று இவர் கள் வேறுபட்டிலர்."　—ரேனோ

## ஆ. ஒழுகலாறும் பண்பும்

35

தமிழர் போதிய அளவு மனத்திட்பமும் தாளாண்மையும், உயர்நிலை மேவும் தகுதியும் வாய்ந்தோர் ஆவர். தென்னிந்தியாவைக் கடைத்தேறவைக்கும் முழுப்பொறுப்பும் தமிழரையே சாரலாம். —குய்ஸ்தாவ் லேபோன்

36

தமிழர்கள் அன்புள்ளவர்கள், நல்லவர்கள்; விருந்தோம்பும் இயல்பினர்கள். பொதுவாக, இவர்கள் மட்டோடு உணவு கொள்பவர்கள். இவர்கள் நீண்டநாள் உயிர்வாழும் ஆற்றல் உடையவர்கள். பழித்தற்குரிய எவ்வகைத்தான ஒழுக்கக் குறைவும் இல்லாதவர்கள். —மூய்லியேன் வென்சோன்

37

அடிமைவாழ்வு எத்தன்மையது என்றும் அறிந்திலர் பண்டைத்தமிழர். "இந்தியாவில் அடிமையென்று எவருமில்லை. அந்நாட்டு மக்கள் எல்லோரும் கட்டின்றி வாழ்வது ஒரு நிகழ்ச்சியாகவிருந்தது," என்றெடுத்தியம்பிய மெகாஸ்தெனஸின் கூற்று, தென்னிந்தியப் பகுதிகளைப் பொறுத்தமட்டில் உண்மையெனக் கொள்ளப்பட்ட செய்தியினைச் சற்றும் ஆராயாது பொதுவாக்கப் பெற்றதனின்று எழுந்ததுபோலும். —ஸ்மித்

38

கருத்தின்மை, முன் எச்சரிக்கையின்மை, தமிழனின் வாழ்க்கை முழுவதையும் இவ்விரண்டே சொற்களில் அடக்கி விடலாம். தன் மகனது மன்றல் விழாவினைச் சிறப்பாக நடாத்தும்பொருட்டு, மூன்று நான்குமுறை தொகுத்துவைத்த நில விளைவை விலைப்படுத்தி அவன் பெற்ற பொருளனைத்தையும் செலவிடுவான். சிறுவிலைக்காலம் வந்தெய்தின், அவன் கைப்பொருள் யாவும் இழந்து கடன்பட்டு விரைவில் வருவாய் ஏதுமின்றிக் கெட்டழிவான். இத்துயரமான முடிவினின்று தப்பிப் பிழைத்துப் பெற்றிழந்த நன்னிலையை ஏதோ நல்வினைப்பயனுய் அவன் அடைய நேரிடின், முன்னர் நிகழ்த்திய அறிவில்லாச் செயல்களையே அவன் மீண்டும் புரிந்து வருங்கால நலனைப் பாழாக்கிக் கொள்வதை நீங்கள் காண்பீர்கள். அவன் வாழ்நாள் முழுமையும் இதே நிலைமைதான். —மேய்ந்த்ரோன்

39

மிகவும் தாழ்ந்த வகுப்பினர் ஈறுகத் தமிழர்கள் அனைவரும் இத்தாலிய நாட்டினரைப் பார்க்கினும் மிகுந்த அறிவு நுட்பமும்

திறமையும் உடையவர்கள். ஐரோப்பியர்மட்டில் அவர்கள் மிகுந்த பணிவு காட்டுகின்றனர்; படைவலியும் தலைமைநிலையும் எய்தப்பெற்றிருத்தலால். ஆயினும், அவர்கள் தினைத்துணையும் இகழ்தற்குரிய முறையில் பணிந்தறியார்கள். ஒருவகைத் தான அமைதி தோய்ந்த மேன்மைப்பண்பு, பணிவுநிலையிலும் அவர்கள்பால் மிளிர்வதாலென்க. அமைதியோம்புவதில் விருப்பமிக்கவர்களாயிருந்தும், ஆங்கிலப் போர்முறைப்படி பயிற்றுவித்த தமிழ்மறவர்களின் அஞ்சாத நெஞ்சழுத்தம் ஆங்கிலேயரையே வியப்புக்குள் ஆழ்த்துகிறது.

—சோல்த்திகோப் இளவரசர்

## இ. தமிழரிடை மகளிர் நிலை

40

பாண்டிநாடு 150,000 போர்மறவர்கள் கொண்ட படையினைத் திரட்டும் திறல்பெற்றிருந்தது என்று பிளினி கூறுகிறார். அரசியலமைப்பின்படி அந்நாடு ஓர் அரசியின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது என்று அவர் மேலும் குறிப்பிடுகிறார். ஆனால், தனித்தவொரு நிகழ்ச்சியைப் பொதுவழக்கு என இவர் கருதுகிறார் என்பது தேற்றம். இற்றை நாளிலும், கண்ணனூர், மதுரை உள்ளிட்ட சில மாவட்டங்களில் ஓரொருகால் மகளிர் அரசியற்றலைமை ஏற்பதென்னவோ உண்மைதான். ஆனால், இவர்தம் கொழுநரோ, உடன்பிறந்தாரோ உயிர்நீத்த பின்னரே இவ்வாய்ப்பு நேரிடும்.

—தெமர்லே

## ஈ. தமிழர்தம் மறச்செயல்கள்

41

அடுத்தடுத்தும், மிகக்கொடுமையான முறையிலும் ஒருநாட்டவர்களுக்குள் நடைபெற்று வந்த கடும்போர்களைப் பற்றிப் பழைய இலக்கியங்களில் காணப்படும் வரலாறுகள், பண்டைய தமிழ்அரசுகளிடையே அமர்தவிர்த்து அமைதியோம்பும் திறனும், நாட்டுமக்களின் இன்பநலன்களைப் பேணும் கலையும் அறவே புறக்கணிக்கப் பெற்றிருத்தல்வேண்டும் என்னும் கொள்கையை மெய்ப்பிப்பதுபோல் தோன்றக்கூடும். ஆனால், இங்ஙனம் கருதுவது தவறுடையதாகும். ஏனெனில், செய்யுட்பகுதியும் வேறு பல மென்கலைகளும் மிக மேன்மையான அளவிற்கு ஆக்கமுற வளர்க்கப்பெற்றிருந்தன என்பதில் ஐயுறவில்லை. மேலும், நகரத்து மக்கள் எல்லோரும் எவ்வகைத்தான நிகழ்ச்சிகள் வந்தடுத்த காலத்தும், பொருட்செல்வத்தால் எய்தலாகும் இன்பவாழ்விற்குரிய நுகர்பொருள்கள் யாவையும்

துய்த்தனர். இந்நூதலிய பொருள்பற்றி, மற்றும் மெகாஸ்தெனஸின் ஆராய்ச்சிக் குறிப்பொன்று, ஒருபுறம் இடையீடின்றிப் போரும், மற்றொருபுறம் உழுதுண்டு அமைதியாக வாழும் நகரத்து மக்கட்டொகுதியும், ஏராளமாக நடைபெற்றுவந்த வாணிபமுமாக விளங்கலுற்றுப், புறத்தே முரண்படுவனபோற் றோன்றும் இந்நிலைமையை நாம் புரிந்துகொள்ளத் துணை செய்கிறது.

கிரேக்கிய அரசியற்றூதர் கீழ்வருமாறு குறிப்பிட்டுள்ளார்; இரண்டாம் வகுப்பைச் சார்ந்தவர் பயிர்த்தொழில் செய்வோர் ஆவர். மக்கட்டொகுதியில் இவர்களே பெரும்பான்மையோர்களாக உள்ளவர்கள்; அன்பும் நற்பாங்கும் மிக்குடையவர்கள். போர்ப்பணியாற்றுங் கடப்பாட்டினின்று விடுபெற்ற இவர்கள், அச்சத்தால் கலக்கமுறாது தங்கள் நிலங்களை உழுது பயிரிடுவார்கள். நகரிடை இடம்பெறும் குழப்பங்களில் கலந்து கொள்ளவேனும், அன்றி வேறு எதைக் கருதியேனும் ஆங்கு அவர்கள் என்றைக்கும் போவதில்லை. ஆதலின், ஒத்தகாலத்தில் நாட்டின் ஒரு பகுதியில் மக்கள் பலர் அணிவகுத்து உயிர்க்கஞ்சாது போரிட்டுக்கொண்டிருக்கவும், வேறு பலர், மிக மிக அண்மையில் அப்போர் மறவர்கள் தம்மைக் காத்துதவச் சமைவாயிருப்பதை நம்பிக் கடுகளவும் கவலையின்றி நிலத்தை உழுதும் அகழ்ந்தும் வினையாற்றும் காட்சிகள் அடுத்தடுத்து நிகழ்வதுண்டு. —ஸ்மித்

42

இராசேந்திரசோழ தேவற்கு, பீகார், வங்காள நாடுகளில் கோலோச்சிய மகிபாலனோடும் பகைகொள்ள நேரிட்டது. நேரிடவும், கங்கையாற்றங் கரைக்குத் தன் போர்ப்படையினை உடன்அழைத்துச் சென்றான். இம் மறச்செயலின் நினைவுக் குறியாக அவன் கங்கைகொண்டான் என்னும் பட்டப்பெயர் ஏற்றதோடு, புதுவதாக அரசர் தலைநகர் ஒன்று எடுப்பித்து அதற்குக் கங்கைகொண்ட சோழபுரம் எனப் பெயர் வழங்கினான். இம் மாநகரின் அண்மைக்கண் அகன்ற செயற்கை ஏரி ஒன்றைத் தோண்டுவித்தான். விரிந்த நிலப்பரப்பு முழுமையும் நீர்பாயப் பெறுவதற்கு இன்றியமையாத மடைமுகங்களும் நீர்க்கால்களும் மிகுதியாக அமையப்பெற்றுப் பதினைந்து மைல் அளவு நீண்டு விளங்கியது அந்த ஏரியின் அணை. அழகிற் சிறந்த வோர் அரசமாளிகையும், முப்பது அடி உயரம் வாய்ந்த ஒற்றைக் கருங்கல்லினால் இயன்ற உறுப்பில் வடிவத்தினைத் (பிழம்பு உரு) தன் நடுவகத்தே காத்து, உயரத்தில் உயர்ந்த மாபெருங் கோவில் ஒன்றும் அத் தலைநகரை அணிசெய்தன.

இக்காலத்தவருள், பயனீட்டுவதொன்றே பெரிதெனும் கொள்கையினரான ஒருசாரார், கட்டட வேலைக்குரிய மூலப்பொருள்கள் இருக்கும் இடம் தேடிக் கேடுசூழ்ந்தமையால் இரங்கத்தக்க அளவிற்கு உருக்குலைந்து பாழ்பட்ட அக் கட்டடங்கள், திருச்சி மாவட்டத்துள், தனித்த வோரிடத்தில், தனித்த தம் பெருமை தோன்ற இன்றும் நின்று காட்சியளிக்கின்றன. அக் கோவிலில் காணப்படும் கொத்து வேலைகள் இணையற்ற மேம்பாடுடையனவாகும். —ஸ்மித்

43

இராசராசனின் அரசிளங்கோவும், கங்கைகொண்டான் என்னும் பெயரினனுமான முதலாம் இராசேந்திர சோழ தேவன், புகழ்நாடிப் போர்தொடுக்கும் தன் தந்தையின் ஒழுகலாற்றைத் தொடர்ந்து மேற்கொண்டதோடு அப்போர் வினையில் மிகுந்த மனவெழுச்சியும் காட்டினான். அவன் எய்திய வெற்றிகளோவெனில், அவன் தந்தை பெற்றவற்றினும் பரந்த புகழ்வாய்ந்தவைகளாகும். அவனது கப்பற்படை வங்காளக் குடாக்கடல் கடந்துசென்று, ப்ரோம் அல்லது பெகு நாட்டின் பழைய தலைநகரான கடாரம் (கிடாரம்), தக்கோலத்தைச் சார்ந்த கடற்றுறைப் பட்டினங்கள், அந்தக் கடற்கரையிலேயே அமைந்த மாத்தாமா அல்லது மர்த்தாபான், இவையிற்றினைத் தாக்கிப் பிடித்து அடிமை கொண்டது. இந்நகரங்களின் வீழ்ச்சி, பெகு அரசு முழுதையும் சோழப் பேரரசோடு தற்காலிகமாக ஒருசேரப் பிணைத்தற்கு உறுதுணை செய்தது. பெகு நகரில் இன்றளவும் நிலைத்துநிற்கும் இரு கருங்கற்றூண்கள் கி. பி. 1025-27-இல் ஏற்பட்ட வெற்றியின் நினைவாகச், சோழ அரசனால் நாட்டப்பெற்றன என்பர். பெகுநாட்டின்மீது தொடுத்த போரில் நேர்ந்த வெற்றியைத் தொடர்ந்து நிக்கோபார் (நக்கவரம்) அந்தமான் தீவுகள் இவற்றின் இணைப்பும் நிகழ்ந்தது. —ஸ்மித்

44

தமிழ் அரசுகளின் வசம் வலிமைமிகுந்த கப்பற்படையிருந்தது. கீழ்நாடுகளினின்றும் மேனாடுகளினின்றும் மரக்கலங்கள் ஆங்குத் தடையேதுமின்றி வந்து தங்கிப்போகும். செம்பொன் வெண்பொன் கொடுத்தும், மென்கலையாலியன்ற மேனாட்டு விலைபொருள்கள் அளித்தும், முத்து, மிளகு, கடல் வன்னக்கல் இன்னும் பிற இந்திய நாட்டுச் சரக்குகளைப் பெற்றேக மிக விழையும் பல்வேறு இனங்களைச் சேர்ந்த வணிகர்களை அந்த நன்கலங்கள் தாங்கிவரும். ஐரோப்பா நிலப் பிரிவில் ஆங்கில சவரன்கள் இற்றைநாளில் தாராளமாக வழங்

கப்பெறுவதைப் போன்றே, உரோமையப் பொன் நாணயங்கள் தென்னிந்தியாவில் வழங்கலாயின. ஒரு பகுதி இறக்குமதியாகியும், பிறிதொரு பகுதி மதுரையில் அடித்து வெளியிடப் பட்டும் வந்துள்ள உரோமைய வெண்கலச் சில்லறைக் காசுகள், பொதுவாக நாள்அங்காடிகளில் நடமாடி வந்தன. நமது காலத்தொடக்கத்தின் முதல் இரண்டு நூற்றாண்டுகளில், வாணிபத்துறையில் ஈடுபட்ட உரோமையநாட்டு மக்கள் திரளாகத் தமிழ்நாடு போந்து வாழிடம் அமைத்துக்கொண்டனர் என்று கருதுதற்குத் தகுந்த சான்று உளது. மற்றும், "அடல்வாள் யவனர், மூகை மிலேச்சர், முற்றும் உருக்குமெய்யுறை பூண்டோர்" என்றெல்லாம் புனைந்துரைக்கப்பெற்ற ஐரோப்பியப் போர்மறவர்கள், தமிழ் அரசர்களின் மெய்க்காவலர்களாகப் பணியாற்றினர். அதுகாலை, யவனர் தந்த வினைமாண் நன்கலங்கள் பொன்னொடு முசிறி (காங்கனூர்) வந்து கறியொடு (மிளகு) பெயராநிற்கும். அகஸ்டஸுக்கென எடுப்பித்த கோயில் ஒன்று முசிறியில் இருந்ததாகவும் எடுத்தியம்பப் பெற்றுள்ளது. இக்கூற்று உண்மையுடையதே என்பதில் ஐயம் இல்லை. கிழக்குக் கடற்கரையிலே, காவிரியாற்றின் வடகிளை கடலொடு கலக்கும் இடத்தில் அமைந்த தொழிற்செறிவுள்ள துறைமுகமாகிய காவிரிப்பட்டினம் அல்லது புகாரில் பிறிதொரு உறைவிடம் வகுத்துக்கொண்டனர், அயல்நாட்டு வந்தேறு குடியினர். நெடுங்காலத்திற்கு முன்னர் மறைந்தொழிந்த அந்நகரும், நகரின் துறைமுகமும், இன்று பரந்த மணல்மேட்டின்கீழ்ப் புதையுண்டு கிடக்கின்றன. யவனநாட்டு முந்திரிச்சாற்று வகைகள், விளக்குகள், ஏனங்கள் இவைகளின் இறக்குமதியைப்பற்றிச் செய்யுள்கள் (காப்பியங்கள்) பரக்கக் கூறுகின்றன. மூன்று கருங்கற்பாறைகளால் இணைத்துக் கட்டப்படும் பழங்காலக் கட்டட முறையில் அமைந்த நீலகிரிக் கல்லறைகளில், கிறித்துவக்காலத் தொடக்கத்தில் ஐரோப்பாவில் இயற்றப்பெற்றனவற்றையொத்த வெண்கல ஏனங்கள் ஏராளமாகக் காணக்கிடந்தமையும், செங்கடற்செலவில் எடுத்தோதப்பெற்ற விளக்கவுரைகளும் அச்செய்யுட்கள் பகரும் சான்றினை உறுதிப்படுத்துகின்றன. —ஸ்மித்

(தொடரும்)

# இக்கால மாணவன் இயம்புகிறான்

[திரு. புலவர் அரசு]

௧. ஆறுவய தினில்நான்காம் வகுப்பிற் சேர்ந்தேன்
ஆங்கிலமும் வரலாறுங் கணக்கும் மற்றும்
கூறுபடும் பொதுக்கலையும் உலக நூலும்
குறைவிலா ஓவியமுந் தமிழு மென்று
வேறுபடு பலபாடக் குவியல் நோக்கி
வெருண்டேன்மற் றிவைகளோடா சிரியர் தந்த
பேறுதரு குறிப்புகளு மெழுதிக் கற்றுப்
பீடுபெற வேண்டுமென்றார் ; நடுங்கி விட்டேன்.

௨. ஆசிரியர் கொடுத்தருளுங் குறிப்பை யெல்லாம்
அரைகுறையா யலக்கணுட னெழுதி வைப்பேன்.
கூசியுளம் வாட்டமுற வீட்டில் வந்து
கொடுத்த குறிப்பது படித்தால் விளங்கிடாது.
வீசிடுவேன் வெறுத்தவற்றை! வெளியிற் சென்று
விளையாடி யுணவுண்டு துயில்வேன் ! என்கொல்
பேசிடுவேன் ? இருமொழியி லொருசொல் லேனும்
பிழையின்றி வாசிக்க எழுத ஒல்லேன் !

௩. உடலிளைத்தேன் சுவடிகளு முணவுந் தூக்கி !
உளமிளைத்தேன் பலசரக்குப் பாடந் தூக்கி!
இடனின்றிக் குழம்பியுறும் நினைவி னாலே
ஏக்கமுட னொன்றுக் கொன் றுளறி நிற்பேன்
கடனிதுவே யென்றென்றன் பெற்றோ ருக்குங்
கணக்காயர் பார்வைக்கு மச்சங் கொள்வேன்
விடமாட்டா துளம் விரும்பாப் பாடமேனும்
விதித்திட்டார் கலைப்பிரமர் வெகுண்டெடம் மேலே.

௪. ஒருபாடம் நடந்திடும்போ ததனைக் கேட்க
உளம்விரும்பி நின்றாலும், அடுத்த பாடம்
பெருமையுறு மாங்கிலமே லதையொப் பிக்கப்
பிணிக்கின்ற வுளத்துடனே படிப்பேன் ; ஒன்றும்
உருவாகப் பதியாது பிரம்புக் கஞ்சும்
ஒருநிலையே முன்னிற்கும் பூதம் போல
இருமை யென்கொல் எழுமைக்கும் கல்வி ஏமம்
என்பார்கள் ! அச்சமே யென்று கொண்டேன்!

௫. வியப்பிதுவே; ஆண்டிறுதித் தேர்வு தன்னில்
விடையெழுத வியலாமல் நடுங்கி யொன்றும்
நயப்பின்றிப் பிழைபடவே யெழுதி னாலும்
நாற்பதெண்கள் நூற்றுக்குப் பெற்றுத் தேர்ந்தேன்!

உயப்பெரிய வழிபெற்றார் போல இன்பம்
ஓங்கியது! வளர்ந்திட்டேன்! மேலு மென்ன?
பயப்படுத லொழிந்திட்டேன் வீட்டி லாசான்
பாடங்கள் கற்பிக்க வந்த தாலே.

௬. முன்வகுப்பிற் பொருளறியேன்; படித்த பாடம்
முடிந்துவிடும் அடுத்தவகுப் பதனில் லாமல்!
என்வகுப்பேன்? ஒருசான்று : திணைபா லெண்கள்
இடமாதி யிலக்கணங்கள் தமிழி லாரப்
பன்முறைநான் காம்வகுப்பி லிருந்தோ யாமற்
பள்ளியிறு வகுப்புவரை பயின்றே னேனும்,
இன்னுமவை யென்னுளத்திற் பயில வில்லை!
இப்படியே பாடமெலா மியங்கா நிற்கும்!

௭. நிழலிருந் தூதியம்பெற் றிடலா மென்று
நீள்கின்ற வூக்கத்தாற் கற்றுத் தேறி,
விழலிறைக்கும் நீரெனவே கற்ற வெல்லாம்
வீணாக மறந்திட்டேன்! மற்று மென்ன!
பழகுமுறை யறியாத குழவிப் போதிற்
பலபாடஞ் சுவைத்துருசி யிழந்து விட்டேன்!
கழல்வுறவென் றந்தைபொருள், அடிமை வாழ்விற்
கணக்கெழுத வுற்றேன்பத் தாண்டு கற்றே!

௮. அறிவொன்றே கல்வியினா லொழுக்க முந்தான்
அமைவுறுமென் றான்றோர்க ளமையச் சொன்னார்!
நெறிநின்ற கீழ்வகுப்பா சிரியர் மேலே
நேர்வகுப்புப் பயில்போதிற் பொருளாய்த் தோன்றார்!
செறிகின்ற பொருளையழித் தாடை யுண்டி
சிறந்தளித்த பெற்றோரும் மதிப்பிழந்தார்!
அறிவொன்ற வில்லாரென் றணுகி நின்ற
அயலவர்கள் தமைநீக்கித் தனிய ரானோம்!

௯. செலவழித்த பொருளுக்குக் கற்ற கல்வி
சிறிதேனு மீடிலது! கல்லா மாந்தர்
பலனிழந்து வெயிலிலுழைத் தீட்டி நல்கும்
பணம்பறிக்கும் நோக்கமன்றிப் பற்றொன் றில்லை!
நலனளிக்குங் கல்விதனைத் தேடித் தேடி
நான்பெற்ற பயனிதுவே! பிறரு மென்போற்
குலவுகின்றார் தனிக்குழுவாய்! எழுத்து வேலை
குலைந்ததெனில், உடலுழைக்க வலிகா ணேமே.

# கல்வி

உலகத் தமிழாராய்ச்சி

[திரு. ரா. கிருஷ்ணசாமி பி.காம், திருவையாறு]

கல்வி கலைத்துறையில் ஒளிர்ந்திடும் விளக்கம்; அறியாமையை அகற்றும் அறிவுச்சுடர்; இன்பநிலை இன்பம் காட்டும் அன்பியல் 'தண்டமிழ்'ச் சோலை; பகுத்தறிவின் பான்மையதாய மெய்யியல்பு; பொய்ம்மை, கயமை, பொறாமை எனப் பல தீமைகளைப் போக்கி வாய்மை, மெய்ம்மை, நேர்மை, நற்பான்மை முதலாய பல நன்மைகளையாக்கும் நற்பண்பியல்பு ஒன்றினுக் கொன்று உயர்வினதாய்த் தோன்றும் செல்வம் பலவற்றுள் அழியாச்செல்வம் ஒன்றென விளங்குவது கல்வி; மக்களகத்தே மறைந்து மண்டிக்கிடக்கும் ஆற்றலைப் பெயர்த்து எடுத்து வெளிப்படுத்துவது கல்வி.

அறியாமையைக் கல்லி, அறிவை விளக்குவது கல்வியெனப் பட்டது. அறிவு என்பது மனத்தைச் சென்றவிடத்தெல்லாம் செல்லவிடாமல் தீதொரீஇ நன்றின்பால் உய்ப்பிக்கும் உணர்வு நிலையாகும். ஆனால், அறிவு என்பது புதிதாகப் புகுத்தப்படுவதொன்றன்று; உள்ளத்தே உறைந்துகிடக்கும் நுண்ணுணர்வேயாகும். நம் உள்ளமே அறிவு அனைத்தும் பொதிந்த எல்லையில் நூற்களஞ்சியமாகும். ஆதலின் கற்கப்படும் பொருள் நமது உள்ளமேயெனலாம். புறப்பொருளமைப்பு (Universe) நாம் கற்றற்கு வேண்டற்பாலனவாய குறிப்பையும் வாய்ப்பையும் நல்கும் கருவியேயாம். இவ்வாற்றான், மனத்தின்கண் மறைந்து மண்டிக்கிடக்கும் ஞானத்தை வெளிப்படுத்துதலே கல்வி கற்றலாகும்.

நன்கு ஆராய்ந்துபார்க்கின் எவரும் கற்பிக்கப்படுவதில்லை; தமக்குத் தாமேதான் கற்றுக்கொள்கின்றனர் என்பது விளங்கும். கற்பிப்பவராகக் கருதப்படும் ஆசிரியர், கற்பவனின் அகக்கண்ணுள்ள அறியும்ஆற்றலை விழித்தெழச்செய்யும் தூண்டு கோல் போன்றவர்தான். அவரவருடைய ஆழ்ந்த எண்ணங்களினாலும், பயிற்சியினாலுமே அறிவுத் தெளிவு ஏற்படுகிறது. "கல்வியென்பது ஒருவனுடைய மூளையில் பல செய்திகளைத் திணிப்பதன்று; அவ்விதம் திணிக்கப்படும் பொருள்கள் மனத்தின்கண் ஒன்றி நிலைத்து நில்லா," வென்று விவேகானந்தர் கூறியுள்ளார். கற்கப்படும் பொருள்கள் நன்கு புரிந்துகொள்ளப் பட்டு அறிவில்பட்டுப் பயன்படுவனவாய், உயிர் ஊட்டுவனவாய், ஊக்கம் அளிப்பனவாய், மக்கள் தன்மையை வெளிப்படுத்துவனவாய், ஒழுக்கம் தருவனவாய் அமையற்பாலன.

கல்விகற்கும் முறையை உடன்பாட்டு முறை, எதிர்மறை முறை என இருவகையாகப் பிரிக்கலாம். அகக்கண் தன்னம்பிக்கையையும் ஊக்கத்தையும் வளர்க்கக்கூடிய முறை உடன்பாட்டு முறை எனப்படும். அம்முறையான் கல்வி கற்பிப்பது சிறப்பாகும்; அஃது உயரிய எண்ணங்களேயும் குறிக்கோளகளேயும் வளர்க்க ஏதுவாகும். அறிவிக்கற்பாலவற்றை அன்பொடு எளியமுறையான் தெளிவாக அறிவிப்பது நன்று. உடன்பாட்டு முறையில் கல்வி பயில்பவர் உழைப்பில் ஊக்கமும், அறிவின் ஆக்கமும், உள்ளத்தில் திண்மையும், தன்னம்பிக்கையும், ஒழுக்கத்தின் உயர்வும் பெறற்பாலர். எம்முறையான் கல்விகற்பது என்பதனே,

"நூல்பயி லியல்பே நுவலின் வழக்கறிதல்
பாடம் போற்றல் கேட்டவை நினேத்தல்
ஆசாற் சார்ந்துஅவை அமைவரக் கேட்டல்
அம்மாண் புடையோர் தம்மொடு பயிறல்
வினுதல் வினுயவை விடுத்தல் என்றிவை
கடனுகக் கொளினே மடநனி யிகக்கும்"

என்ற நன்னூல் சூத்திரத்தால் நன்கறிகின்றேம்.

மனத்தை ஒருமுகப்படுத்துதலே (Concentration of mind) கல்விப் பயிற்சிக்குள்ள சிறந்த வழியாகும். மனத்தை ஒருமுகப்படுத்துகிற அளவிற்கேற்ப அறிவுத்தெளிவு ஏற்படுகின்றது என்பது அறிஞர்கள் கண்டறிந்த முடிவு. "தொட்டனேத்தூறும் மணற்கேணி போன்று கற்றனேத்தூறுவது" அறிவன்றே! மன ஒருமைநிலேதான் 'உலகத்தின் மறைவுகளே' மூடிவைத்திருக்கும் கதவுகளேத் திறக்கும் கோலாகும். ஈண்டு,

"தெள்ளிதின் ஆராய்ந் தமைவுடைய கற்பவே
நீரொழியப் பாலுண் குருகிற் றெரிந்து"

என்ற அறநெறி மொழிகள் நோக்கற்பாலன.

### கல்வித்துறைகள்

கல்வித்துறைகள் பலதிறத்தன. ஆனல், இந்நாட்களில் ஏட்டுக்கல்வியே கல்வி எனும் ஒரு பழுதாய எண்ணம் நிலவிவருகிறது. ஏட்டுக்கல்வி மட்டும் கல்வியாகாது; கேட்டற்கல்வி, தொழிற்கல்வி முதலியனவும் கல்வியின் பாற்பட்டனவே. அறிவியல், பொருளியல், விஞ்ஞானம், அரசியல், வரலாறு, வணிகக்கலே முதலியனவாகப் பலதிறப்பட்ட கல்வித்துறைகளுள் ஒவ்வொன்றும் ஒவ்வொருவர் இயல்பினுக்குப் பொருந்தியதாகத் தோன்றும். அப்பொருந்திய ஒன்றில் சிறப்பு அறிவும் பிறவற்றில் பொது அறிவும்பெற முயல்வது முறையாகும்.

**கல்வியின் நோக்கம்**

இக்காலத்தில் கல்வி கற்போரில் பெரும்பான்மையோர் உத்தியோக நோக்கான் கற்கின்றனர் என்பது வெள்ளிடைமலை. இந்நிலை இரங்கத்தக்கது; இயற்கை நெறிக்கு மாறுபட்டது. அஃதன்றி, 'அறிவு அறிவிற்காகவே' என்ற அளவொடுமட்டும் நின்றுவிடுவதும் கல்வியின் நோக்கமாகாது.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

என்ற பொய்யாமொழிப் புலவரின் பொருந்திய மொழிக்கேற்பக் கசடறக் கற்ற கல்வியினால் பெற்ற அறிவினை வாழ்க்கையிலே பயன்படுத்தவேண்டும்; அதற்கேற்ப ஒழுகவேண்டும். மாக்களினின்றும் மக்களை வேறுபடுத்துபவை பகுத்தறிவு, அன்பு முதலாயின. அச்சிறப்புப் பண்புகளை வளர்த்துப் பொலிவுறச் செய்வதே கல்வியின் சீரிய நோக்கெனலாம். இவண், "கல்விப்பொருள் என்றும் அழியாது; கல்விப்பொருள் ஒருவனது அறிவைப் பற்றிக்கொண்டு எழுமை எழுபிறப்பும் அவனுக்கு உற்ற துணையாய்ச் செல்லும்; கல்விப்பொருள் இந்த உலகத்திலும் இங்குள்ள உயிர்களிலுமுள்ள வியப்பான உண்மைகளை விளங்கச் செய்வதுடன், இவற்றிற்கு உள்ளுமாய்ப் புறம்புமாய் நிற்கும் இறைவன்றன் அருளுண்மைகளையும் விளங்கச் செய்து நமக்குப் பேரின்பத்தைத் தராநிற்கும்," என்று கூறிய மாண்பார் மலையெனத் திகழ்ந்த தமிழ்மலை **மறைமலையடிகளின்** மறையாச் சொற்கள் உன்னற்பாலன. "கல்வியென்பது குழந்தையின் உடல், உள்ளம், உயிர் ஆகிய மூன்றின் பண்புகளும் வளர்ந்து முழுமைப்பொலிவுபெறச் செய்வதேயாகும்," என்று **காந்தியடிகள்** கூறியுள்ளார். "நெஞ்சத்து நல்லம்யாம் என்னும் கல்வியழகே அழகு," என்றெல்லாம் கவிஞர் பாடும்போதும் கல்விக்கு இந்த நோக்கமே கற்பிக்கிறார். அன்பு முதலாய பண்புகளை உயர்வாக மதிக்கும்போதும் அவரவர் கடமையையும், உரிமையையும், பொறுப்பையும் உணர்ந்து சமூக நலனைப் போற்றும் போதுந்தான் மக்களாட்சி அமைவுறுகின்றது. அவ்வமைப்பிற்கு முதன்மையானவைகளாகத் தன்னடக்கம், ஒற்றுமை, கூட்டுறவு, பொறுக்குந்தன்மை, பொதுநல உழைப்பு முதலாய பண்புகளை வளரச்செய்வது கல்வியின் இறுதி நோக்கம் எனலாம்.

**தொழிற் கல்வியும் ஆதாரக் கல்வியும்**

மேற்கூறிய பண்புகள் யாவும் ஏடுகளைப் படிப்பதினால் மட்டும் அமைவனவல்ல. வாழ்க்கையின் அனுபவத்தின்மூலமே அவைகள் அமையப்பெறுவன. இதை அடிப்படையாகக்

கொண்டதுதான் தொழிற்கல்வி. மாணவனின் அன்றாட வாழ்க்கைக்கும், பள்ளிவாழ்விற்கும், படிப்பிற்கும், குணப்பண்பாட்டிற்கும் எவ்வித தொடர்பும் இல்லாதபடி அமைந்தது, அந்நிய ஆதிக்கத்தால் ஏற்பட்ட அடிமைக் கல்விமுறை. அடிமைக் கல்விகற்ற மாணவனிடத்தில் ஒரு பண்புமே வளரவில்லையென்றால், அதில் வியப்பு ஒன்றுமில்லை! தன் வேலையைத் தன்னுறுப்புக்களால் செய்யும் பழக்கமும் பயிற்சியும் பள்ளியில் ஏற்படாமல் போகவே, தொழில் செய்வதற்கு ஏதுவாய மனத்திண்மை, இற்றை மாணவர்களிடத்தே அமையப்பெறவில்லை. மேலும், "தொழில் என்றால் இழிவு," என்ற எண்ணமும் ஏற்பட்டுவிட்டது. தொழிலாற்றுவதின் மூலம் உடல் உறுப்புக்களின் வளர்ச்சியும் அறிவுத்தெளிவும் ஒருங்கே ஏற்படும். தொழில்செய்வதிலுள்ள உடற்றுன்பங்களை ஒருவன் தானே பட்டு உணரும்போதுதான் துன்பப்படுபவர்கள்பால் அன்பும், இரக்கமும் கொள்வது இயல்பாக அமையும். இது தொழிலால் வரும் ஆன்மபலன்.

இத்தகைமைத்தாய தொழிலைக் கல்விப்பயிற்சிக்குக் கருவியாகக் கொள்வதுதான் காந்தீயக்கல்வி முறையாய ஆதாரக் கல்வியின் சிறப்பாகும். பள்ளிமன்றம், இருப்பிடம், விளையாடுமிடம், சுற்றுப்புறங்கள் ஆகிய இடங்களில் குழந்தைகளுக்கு ஏற்படும் அனுபவத்தைக்கொண்டு அன்னாரின் அறிவை வளர்ப்பது ஆதாரக்கல்வியின் நோக்கமாகும். சுருங்கக் கூறின், இக் கல்விமுறை இயற்கையின்பாற்பட்டது. இக் கல்விமுறை நற்பயன் அளிக்க வேண்டுமாயின், பள்ளியில் நடத்தப்படும் பல செயல்களும் பல பொருள்களைக் கற்பிக்கக் கூடியனவாய் இருப்பதோடு பிள்ளைகளுக்கு ஒழுக்கத்தையும், ஒற்றுமை உணர்வையும் பிறர்நலம் நாடும் பெற்றிமையையும், இடும்பைக்கு இடும்பைதரும் ஆண்மையையும், தளரா ஊக்கத்தையும், உழைக்கும் ஆற்றலையும் அளிப்பனவாய் அமையற்பாலன.

ஆதாரக் கல்விக்கு அடிப்படையான தொழில் பயனுடைத்தாயும், மக்கள்வாழ்வின் அடிப்படைத் தேவைகளாய உணவு, உடை, உறைவிடம் ஆகிய மூன்றனுள் ஏதாவது ஒன்றினையாவது சார்ந்ததாயும் இருக்கவேண்டும். ஆதாரக் கல்வி ஏட்டுக்கல்வியாய் மட்டுமின்றி, வாழ்க்கைக்கே ஆதாரமான கல்வியுமாகும்.

### தாய்மொழியும் கல்வியும்

"தாய்மொழியில் கல்விபெறுவது இயற்கை. தாய்மொழிப் புலமை நிரம்பப் பெற்ற பின்னை வேறு பலமொழிகளைப் பயிலலாம்; ஆராயலாம். முதன் முதல் தாய்மொழி வாயிலாகவே

**கல்வி** பயிலுதல்வேண்டும்,'' என்று அறிஞர் திரு. **வி. கல்யாண சுந்தரனார்** கூறியுள்ளார். தாய்மொழியைப் பேணவேண்டுமென்பதற்கு, மும்மொழிப்புலவர் மறைத்திரு. மறைமலையடிகள், அறிஞர் திரு. வி. க, கல்விக்கடல் பாலகங்காதர திலகர், அண்ணல் காந்தியடிகள் முதலாய பெரியோர்களின் வாழ்வு எடுத்துக்காட்டாக விளங்கும். "தாய்மொழிப் பற்றே தாய்நாட்டுப் பற்றாகும்,'' எனினும், தாய்மொழிப் பற்று என்பது பிறமொழிகளை வெறுப்பது என்பதாகாது. தமிழனுக்குத் தாய்மொழிப் பற்று போதிய அளவில்லையென்பது வருந்தத்தக்கது. தமிழனுக்குத் தன் தாய்மொழியின்பால் தணியா வேட்கை என்று எழுகிறதோ அன்றே அவன் வாழ்வும் மணம்பெறும்.

நம்நாடு அன்னிய ஆட்சியிலிருந்து விடுதலையடைந்து தன்னைத் தானே ஆளும் ஆட்சியுரிமைபெற்றுக் "குடியரசு,'' நாடாக விளங்கும் இற்றைநாளில், நம்நாட்டில் இதுகாறும் பயிலப்பட்டு வந்த அடிமைக் கல்விமுறையை அகற்றி நமநாட்டின் பண்பாட்டிற்கும் நாகரிக அமைப்பிற்கும் ஏற்றமுறையில் ஒரு சிறந்த கல்விமுறையை அமைக்கும் தறுவாயில் உள்ளோம். நாம் வேண்டுவது, செல்வ நிலைபெற்றுள்ள ஒரு சிலருக்குமட்டும் பயன்படும் கல்விமுறையன்று; தாய்மொழியைக் குன்றச் செய்யும் பிறமொழிக் கல்வித்திட்டமன்று; ஆட்சிக் குழுவினருக்கு ஆதரவாக இருக்கும் கணக்கர்களைமட்டும் தோற்றுவிக்கும் கல்விமுறையன்று. தாய்மொழிப்பற்றையும் தாய்நாட்டுப் பற்றையும் ஏற்படுத்தி, நாட்டில் தாண்டவமாடும் அறியாமையைக் கல்லி, வறுமையைப் போக்கி, வகுப்புவேற்றுமையைக் களைந்து, மாக்கள்நிலையை மாற்றி மக்கள்நிலையையுண்டாக்கி, அன்பையும் தமிழ்ப்பண்பையும் வளர்த்து நாட்டை எல்லாத் துறைகளிலும் முன்னேற்றம் அடையும்படி செய்யக் கூடிய கல்விமுறையே யாம் வேண்டுவதாகும். நம் தமிழ்நாட்டிலே நாம் வேண்டுவது தமிழ்க்கல்வி: திருவாசகமும் குறளும் அதன் உயிரும் உடலும்; அவையே கண்கள்; அவையே கண்மணிகள்; கடைத்தேற்றும் ஞானக் குவியல்கள்; அன்பு அக்கல்வியின் அடிப்படை; பண்பு அதன் பயன்; இன்பம் அதன் இறுதி:

> "தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
> காமுறுவர் கற்றறிந் தார்."

வாழ்க தமிழ்மொழி! வாழ்க அருட்கலை!! ஓங்குக ஒழுக்கநெறி!!!

# மறைந்த மணி

[திரு. தி. வே. நடேசன், அண்ணாமலைநகர்.]

## இறைமை வாழ்த்து

உலகை வளர்க்கும் ஒருணர்வின் கரையாய
தலைமைத் தனிமொழியாந் தமிழ்அன்னையைப் போற்றுதுமே
'நிற்க அதற்குத் தக'வென்று கற்றபயன்
முற்ற வுணர்ந்து மொழிந்தானைப் போற்றுதுமே
குறையுற்ற பெண்மைக் குலமாண்பை விரித்தானை
நிறைபுலத்தின் வேந்தன் இளங்கோவைப் போற்றுதுமே
ஊக்கமே வெற்றி, உழைப்பே வழி, வாழ்க்கை
ஆக்க வுணர்வே யெனவுணர்ந்தோர்ப் போற்றுதுமே
அன்பு உலகமைக்க அமையாத காதல்வளர்
இன்பு மனத்தின் இறையோரைப் போற்றுதுமே
நிறை யொளிர் வாழ்வின் இறைமணிக ளிரண்டீந்த
புரைதீர் வனப்பின் பூம்புகார் போற்றுதுமே.

## "கொழுமுகையே"

பூம்புகார் என்றாலே
சோம்பர்வாழ் வங்கில்லை
பூம்பொழில்க ளெங்கும்
தேன் பரந்த பழனம்.

சங்கந் தவழ் தமிழை
அங்கந் தழுவ நீர்மை
தங்கு மான்றோர் தீய
தங்கா தொழில் செய்வார்.

கருணை நிலத் தன்னை
தெருள் வளத்திற் குன்றாள்
பொருள் வளங் குறையா
மருள் விதையாச் செங்கோல்.

பொருள் நிறைவுங் குறைவும்
பொருந்த வாழ்வ ரேனும்
அருள் நிறைந்தார் பலரால்
பொருள் வறுமை யறியார்.

எச்சறம ரங்கள்
சச்சரவி னோங்கக்
கொச்சைவள மோங்கும்
அச்சந்தரு கானஞ்

சூழமழை தாழும்
காழ்மணிப்பச் சாடை
சோழநகர் சூழ
வேழந்தாழ் பழனம்

முத்துறையு நெஞ்சார்க்(கு)
ஒத்தொளியின் அமைய
முத்தெடுப்போர் உறைவர்
சத்தக்கட லருகே.

"உப்பிலாத பண்டம்
குப்பையிலே" யன்றே
உப்பெடுப்போர் குடில்கள்
உப்பளத்தின் பக்கம்.

அலையிசைக் கிசையக்
கலங்குழுமித் துறையுள்
அலையசைக்கத் தலைமேல்
தலையசைத்தே யாடும்.

தாயகந்து றந்து
சேயகத்து றையும்
ஒய்வில்வளத் தெழிலார்
சேயவனர் இல்லம்.

கலையினோதம் பாய்ச்சிப்
புலைமனங் கழுவும்
தலைதுலங்க நிலவின்
கலையரங்க மோர்பால்.

பல்கலைப் பசியின்
சொல்வளஞ் சிறந்தார்ப்
பல்லோராயுங் கோயில்
பல்கலைமன் றோர்பால்.

சேயளிக்குந் தேவின்
தாயெனுங் குலத்தார்
மாயஉள்ளத் தன்மை
ஆய்கழகம் ஓர்பால்.

மண்ணுறங்கு மக்கள்
எண்ணமோங்கு மென்ன
நுண்கலையின் பண்ணை
விண்ணளக்குங் கோயில்.

தொல்லறிவோர் நூலாஞ்
சொல்நலந்தோய் தூய
மெல்லியலா ரோடு
அல்லும்எல்லு முறையும்
அருள்நிலைக்கு நெஞ்சிற்
பொருள்தழைக்கும் பாக்கள்
மருவிமருவிப் பெறுவர்
கருவின்திருப் புலவோர்

கார்நடக்குந் திருவீதி கலையாழிப் புலவோரின்
போர்நடக்கும் புகழில்லம் பொலத்தெழிலின் இளஞ்சிறுவர்
ஆர்ப்படங்கல் அறியாத அறந்தழைக்கு மில்லங்கள்
தார்கிடக்குந் தடமார்பே எங்கெங்கும் புகாரிதுவே.

*

கணிகைக் குலவிருளைக் கட்டோடகற்ற வொரு
மணியொன்று சித்திராபதி யுமிழ்ந்தாள் நகர்மகிழும்
அழுது மகிழ்விக்கும் அருங்குழவி நாள்நீங்கிப்
பவழ இதழ்விலக்கிப் பருமகிழ்வை விளைவிக்குந்
தவழும் பருவந் தாண்டி யொருமொழியாம்
மழலை மிழற்றி மாவுலகை எள்ளிநகை
யாடும் பருவந் தீரச் சீரடியில்
பாடி யொலிக்கும் பண்சிலம்புத் துணைபாட
அன்னையின் கயலுகள அன்னாய்நீ யாடுகையில்
பெண்மைக் குலமுழுதும் பீடழிய ஆடவர்தந்
தன்மை திரிந்து தகவிலராய் மெய்யின்பப்
புன்மை நுகரப்பொங்கி வந்த அழிவுகளின்
போக்கறுத்து நீக்கிப் பொன்றாவுயிர்த் துணையாய்
நீக்கமில் அன்பின் நெடுந்திரியு நெய்யுமாய்
வாக்கு மனங்கடந்த வழிவிளங்கா வாழ்விற்குப்
போக்கை விளக்கும் பொன்தழலா யெரியவொரு
அறிவின் மிக்கோங்கி ஆழ்ந்தகன்று தூய்மையுறு
செறியுணர்வின் ஆடவனைச் சேர்ந்தொழுகும் சீர்வாழ்வில்
இருதலையும் இன்பம் நுகர்ந்து இருவீரும்
ஒருதலை யாயின்பம் உலகுக்கு ஊட்டுமொரு
வாழ்வழிந்த கணிகையர்க்கும் வாழ்வின் வழிகாட்டித்
தாழ்வறுக்க வந்த தலைவிநீ யென்றுணர்ந்தால்
காழ்சூழ் கலக்குவையே கனவதிலுங் கண்டுமகிழ்
வாழ்வொழுக்கும் அன்னை வயிறெரியப் பாராளோ?
பலர்நச்சும் பாழ்மையற ஒருவற்கே யுனையளித்துக்
குலமாற்ற வந்த கோமகள்நீ யென்றுணர்ந்தால்

முலையுண் ணும் காலையெலாம் முகந்தாழ்த்தித் தணலிதழால்
நிலவூறு நெற்றியிலே நெடுமுத்தம் இடுவாளோ?
ஆடல் நிகழ்த்தி ஆடவர் தம் உளமயக்கிக்
கோடிநிதி கொள்வாய் எனுங் கொள்ளை நகை கொண்டாள்
ஆடல் அளிப்பாய் அகத்தலைவற்கே யென்றால்
பாடற் சிலம்பைப் பரிந்தடிக்கே யிசைப்பாளோ?
படியை நெடியால் மயக்கிப் பதுமத்தின்
அடியில் அடிமைத் திறங்கொள்ள அலரும்ஓர்
கொழுமுகை யாகும் இவளென்று கொள்கைபல
விழுதூன்றி யோங்கும் வீணுற்ற வுவகையொடு
ஆடல் வளர்க்குஞ் சித்திராபதி மகளுக்(கு)
ஆடல் பயிற்ற ஆறிரண்டு ஆண்டெய்தும்

*

வையமெலாங் காக்கும் வளநிதி மாசாத்துவன்பேர்
உய்விக்க வந்த ஒருமகனுங் கோவலற்குப்
பொருளும் அருளும் பொருந்துமகன் மாநாய்கன்
அருளின் உருவாய்ப் பொறையுயிராய்ப் புதுமலராய்ச்
செறியிருள் இரியச் சுடருந் திருவிளக்காய்
மறுவில் வனப்பின் மாமணியாங் கண்ணகியை
வாய்ந்த வழுநீங்கு வளநாளிற் சுற்றத்தார்
சூழ்ந்து மகிழ்ந்து மலர்தூவி வாழ்த்தல்செய
முல்லைப் பசுங்கொடியை மூரியெழு கொம்பின்மேற்
புல்ல விடுவரெனப் புணர்த்தினர் புகழ்மணமே
மணஞ் சிறந்த,
மங்காப் புகழின் சங்கப் பெருநூல்கள்
தங்கள் முடிபாய்த் தருநிலையில் ஒருமையராய்த்
துஞ்சா இரவில் தோலாத போராற்றிப்
பஞ்சும் பலவும் பரந்தெழிலூர் மஞ்சத்தில்
நெஞ்சங் கலந்து நீந்துவரால் இன்பாழி.

ஆழியென,
அறமலிய ஒலி பேசும் பைந்தொடி யங்கையோடு
மறமூருங் காளையவன் வன்கையு மிணைந்தாற்றிப்
பாரிற்பே ரின்பம் பாரிக்க வோர்மனையிற்
சேர்மின் என வாழ்த்திச் சேர்த்தனரே செம்மாந்தார்.

(தொடரும்)

## தென்னிந்திய தமிழ்ச்சங்கம்

24, கீழைத் தேர்த் தெரு, திருநெல்வேலி.

# தமிழ்ப்புலவர் மாணவர் தேர்வு

சென்னைப் பல்கலைக் கழக வித்துவான் தேர்வுக்குப் பல புலவர்கல்லூரியிலும் பயின்றுவருகின்ற மாணவர்களும், ஆசிரியராகவோ அல்லது தமிழ்ப் பற்றுளராகவோ தமிழைப் பயின்று மேற்படி வித்துவான் பட்டமடைய விழைகின்ற பிறரும், தம் பயிற்சியில் ஊக்கமுறும் பொருட்டு இச்சங்கத்தார் 1951-ஆம் ஆண்டு மாசித் திங்கள் முதல் தேர்தல் நடத்திவருகின்றனர்.

இத்தேர்வுகளில் முதல்தகுதியில் தேர்ச்சியுறும் முதல் மூவருக்குப் பரிசுகளும் தகுதித் தாள்களும்; நூற்றுக்கு நாற்பது விழுக்காட்டிற்குக் குறையாதிருக்கும் பிறர்க்குத் தகுதித் தாள்களும் வழங்கப்பெறும்.

தேர்வு பெற்று வித்துவானாகத் திகழ்கின்றவர்கள், உயிர்க்கு உறுதி பயக்கும் சித்தாந்தநூற் பாடங்களையும் பயின்று தேர்ச்சிபெறுவது பொன்மலர் நாற்றமுடைத்தாம். ஆதலின், அவர்கள் சித்தாந்தநூற் பயிற்சிக்குத் துணையாகக் கீழ்க்குறித்த பாடங்கள் வகுக்கப்பெற்றுள்ளன. இவற்றில் நூற்றுக்கு முப்பத்தைந்து விழுக்காடாவது எடாது, மேல் பொதுத்தேர்வில் முதற் றகுதியில் தேர்ச்சிபெற்றிருந்தாலும் பரிசு பெறுதற்குரியராகார். சித்தாந்தபாடத் தேர்ச்சிபெற்றிருப்பவரே பரிசுக்கு உரியராவார் என்க.

### சித்தாந்தநூற் பாடங்கள்

புதுமுகத் தேர்வு :
1. கழகச் சைவ வினாவிடை (முதற் புத்தகம்)
2. திருவருட் பயன (உரையுடன்)
3. பூப்பிள்ளை அட்டவணை.

வித்துவான் முதனிலை :
1. சிவஞானபோதச் சொற்பொழிவு.
2. திருக்களிற்றுப்படியார் (உரையுடன்).
3. நால்வர் நான்மணிமாலை (உரையுடன்).

வித்துவான் இறுதிநிலை:
1. கந்தர் கலிவெண்பா (உரையுடன்).
2. சித்தாந்தப் பிரகாசிகை.
3. சிவப்பிரகாசம் (உரையுடன்).

சித்தாந்தநூற் பாடத்திற்கு மேற்குறித்த தேர்வுகளுக்குப் பயிலாமல், சித்தாந்தபாடத் தேர்வுமட்டும் எழுத விரும்பும் ஆண் பெண் இருபாலரும் முறையே ரூபாய் $\frac{1}{2}$, $\frac{3}{4}$, 1 ஆகிய கட்டணங்களைச் செலுத்தி அவ்வப் பாடத் தேர்வுகட்கு எழுதலாம். தமிழ்ப்புலவர் மாணவர் தேர்வுக்கு எழுதுகின்றவர்கள் முறையே ரூ. 1, 2, 3 கட்டினாலே போதும். சித்தாந்த பாடத் தேர்வுக்குத் தனிக் கட்டணம் செலுத்த வேண்டியதில்லை.

## தமிழ்ப்புலவர் தேர்வுப் பரிசு முறைகள்

| | புதுமுகத் தேர்வு | முதனிலை | இறுதிநிலை |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. |
| முதற் பரிசு | 20/- | 40/- | 50/- |
| இரண்டாம் பரிசு | 15/- | 30/- | 40/- |
| மூன்றாம் பரிசு | 10/- | 25/- | 30/- |

## சித்தாந்தத் தேர்வுத் தனிப்பரிசு

| | | | |
|---|---|---|---|
| முதற் பரிசு | 15/- | 20/- | 25/- |
| இரண்டாம் பரிசு | 10/- | 15/- | 20/- |

# *வள்ளுவர் நல்கும் சமயவாழ்வு

[சாத்தூர், திரு. தூ. சு. கந்தசாமி முதலியார் அவர்கள், எம். ஏ]

எங்கும் அறிவொளி பொங்கும் திருநாடு. ஞானப் பெரு நிலம். அதனையாளும் தலைவன், மன்னர்க்கு மன்னனாய ஆண்டவன் என்றுதான் சொல்லவேண்டும். அவன் தன் திருமுடியில் விலைமதிக்க முடியாத மணிமுடி தரித்திருந்தான். உயர்ந்த மணிகள் அழுத்திய சிறந்த முடி அது. அதனை ஓரிடத்தில் வைத்துச் சென்றான். அறவுள்ளம் படைத்த பெரியார் ஒருவர் அதனைக் கண்டார். நடுநிலை தவறாத நல்லாராதலின் அவர், அதனை உரியாரிடம் சேர்க்க விழைந்தார்.

நடுநிலையாளரின் கையமர்ந்த மணிமுடியைக் கண்ணுற்றார் பலர், தனித்தனியே சென்று அஃது எம்முடையது, எம்முடையது என்றுகூறிப் பெற முயன்றார். நடுநிலையாளரோ, உடையவரைக் காண ஒருவழி கண்டார். அணிந்தவருடைய திருமுடியமைப்புக் காணலுற்றார். அனைவரையும் அழைத்துத் தனித் தனியே அவர்தம் தலையில் கவித்துப் பார்த்தார். யாருடையது என்றுதான் தெரியவில்லை. உடையவர்க்குத்தான் கொடுப்பேன் என்றார்.

இங்ஙனம் எல்லோரும் ஒருங்கே பெறவிரும்பும் மணிமுடியை வைத்துச்சென்றவர் வள்ளுவர் பெருமான். அவரது மணிமுடிதான் அருமைத் திருக்குறள்தெய்வநூல். அப்பெரு நூல்தான் தமிழர்க்கு மறை—பொது மறை—பொய்யாமொழி.

வள்ளுவர் சொல்லும் வாழ்வு யாது? மூச்சுடையாரெல்லாம் வாழ்பவரா? ஆரவாரமாக ஆடையணிகள் பூணுவாரெல்லாம் வாழ்பவரா? எல்லோரும் வாழ்பவராகார். வள்ளுவர், படிப்படியாக வாழ்வுமுறை கூறி, மணிமுடியான வாழ்வு யாது என்பதையும் ஓதுகிறார்.

வாழ்வு ஒரு கலை. அஃது, ஒரு கவியின்பம். அதனின் மிக்க இன்பம் புலனுக்கில்லை. "வாழ்வு, விருப்பை விளைக்கிறது" (Life is interesting) என்றார் ஓரறிஞர். அத்தகைய திருத்தமான வாழ்க்கையை வகைப்படுத்து, இங்ஙனம் வாழ்க என்றும் கூறினார் வள்ளுவர். பிறரெல்லாம் வெவ்வேறு முறையில் கூறினார். ஆனால், திருவள்ளுவரோ தமது பழக்கத்தில் கண்டதை உள்ளவாறு தெள்ளத்தெளியச் சொல்லியருளினார்.

---

* 13-8-50 நெல்லையில் ஆற்றிய விரிவுரை. இதனைக் கேட்டு எழுதியனுப்பியவர்கள் வித்துவான் திரு. நவநீதகிருஷ்ண பிள்ளை அவர்கள். இஃது அரிய சொற்பொழிவாதலின் செல்வியன்பர்கட்கும் பயன்தருமாறு ஆசிரியரவர்கள் ஒப்புதல்பெற்று வெளியிடப் பெறுகின்றது.

திருந்திய வாழ்வுக்குத் தனியறிவு வேண்டும். அவ்வறிவின் இயல்பு என்ன? நலந் தீங்குகளையறியும் அறிவே அறிவென்றார் வள்ளுவனார்.

"சென்ற விடத்தால் செலவிடா தீதொரீஇ
நன்றின்பா லுய்ப்ப தறிவு."

ஐந்தாண்டுகட்கு முன்வரை யிருந்து மறைந்த சிறந்த விஞ்ஞானி—நோபெல் பரிசு பெற்றவர்—அலெக்சிஸ் காரோல் (Alexis Carol) என்பவர், "அறியப்படாத மனிதன்," என்றொரு நூல் வரைந்துள்ளார். (Man the un-known) அதன்கண் தாம் கண்டதை அறுதியிட்டுக் கூறியுள்ளாரவர். "நலந் தீங்குகளைப் பகுத்தறியும் அறிவே அறிவு; அவ்வறிவின்றேல் வாழ்க்கை அவலம்," என்று வரையறுத்துக் கூறியுள்ளார். இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே நம் தெய்வப் புலவர் அறுதியிட்டுக் கூறிய உண்மையைத் தெளிய மேனாட்டவர்க்கு எத்துணைக் காலம் பிடித்தது! இவ்வளவு காலத்திற்குப் பின்னர்ப் பெருவிஞ்ஞானி அதனை ஒப்பினார்.

இத்தகைய அறவொழுக்கத்தில் நிற்பதுதான் வாழ்வு. விலங்குபோல் நடப்பதெல்லாம் வாழ்வாகாது; அறிவுடைமையாகாது. இவ்வாழ்வுக்கு அன்பு முதலாகப் பல ஒழுக்கங்கள் பேசுகின்றார். எனினும், ஒழுக்கமுடைமை யெனத் தனியதிகாரம் வகுத்தது, இடையறாது ஒழுகவேண்டுவது அவ்வொழுக்கம் என்பதனாலாகும். கனவிலும் நனவிலும் உண்ணும்போதும் உறங்கும்போதும் அமையவேண்டுவது அவ்வொழுக்கம். காதல் செய்வதற்குரியதொரு பொருள் உயிரினும் மிக்கதில்லை. அவ் உயிரினும் சிறந்ததாகக் காக்கத்தக்கது ஒழுக்கமென்றார்.

"ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்."

என்றார் வள்ளுவர்.

இடையறாது நல்லொழுக்கமுடன் வாழ யாது செயல் வேண்டும்? அறவாழ்வு என்பதியாது? அறத்தான் வருவதன்றோ இன்ப வாழ்வெனலாகும்; மற்றெல்லாம் மறத்தின் பாற்பட்டனவும் புகழ் தாராதனவுமன்றோ? இன்பத்திற்குக் காரணமானதே அறம். அவ் அறத்திற்கு வித்தே நல்லொழுக்கம். "நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்," என்பது வள்ளுவர் வாக்கு.

எங்கள் சிவன் நல்லவன், தீதிலன், நலமேயுடையன். அவனை வழிபட்டொழுகும் வாழ்வே அறவாழ்வு.

கலப்பில்லாத இன்பத்திற்குக் காரணமாக இருப்பது எதுவோ, அதுவே அறம். "யாதொன்றும் தீமையிலாத சொலல் வாய்மை," யென்றார் வள்ளுவர். அவ் அறத்தின் இயல்பினைத் தெளிவுற விளக்கப் புகுந்தவர், எதிர்மறை வாய் பாட்டான் வலியுறுத்துப் பேசுகின்றார். கருத்தை வலியுறுத்தச் சுருக்கமான வாய்பாடு எதிர்மறையாகும். அதனைக் கையாண்டு கட்டுரைத்தார் வள்ளுவர்.

"அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா வியன்றது அறம்."

சிவாகமங்களைச் செம்மையுற உணர்ந்து, அவற்றின் வழி நின்ற வள்ளுவர், மனக்குற்றம் மூன்றும் சொற்குற்றம் நான்கும் கலவாமல் நீக்கி நடத்துவதே நேரிய அறமெனக் கூறினார். மேற்காணும் குறட்பாவுக்குப் பரிமேலழகர் தரும் கருத்துக்கு வேறுபட்டது இக் கருத்து. அழுக்காறு முதலான நான்கும் நீக்கி நடப்பதே அறமென்றார் பரிமேலழகர். அங்ஙனம் கொள்ளாது நான்கு என்னும் எண்ணை இன்னாச்சொல் ஒன்றற்கே உரியதாக்கிச் சொற்குற்றம் நான்கு எனக் கோடலே பொருந் தும். அழுக்காறு, அவா, வெகுளி ஆகிய மூன்றும் மனக் குற் றங்களாகும். இவற்றோடு நால்வகைச் சொற்குற்றங்களும் நீக்கவேண்டும். இந் நால்வகைச் சொற்குற்றமும் நீக்கினார் வாய்ச் சொல்லையே, "செம்பொருள் கண்டார் வாய்ச்சொல்," என்று செப்பினார் வள்ளுவர். செம்பொருள் என்பது அறம். அவ் அறத்தினை உணர்ந்தார் வாயிற் சொற்களே அன்புகலந்து வஞ்சகமிலவாய இன்சொற்கள். அன்பும் சொல்லும் கலவா திருப்பின் அஃது இன்சொலன்று.

"இன்சொலால் ஈர மளைஇப் படிறிலவாம்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்."

செம்பொருளைக் காணுதலாவது அநுபூதியறிவைப் பெறுதல். உயிரோடு கலந்தெழும் உணர்ச்சியே அநுபூதியறிவாகும். அந்த அநுபவ வாயிலாகப் பிறக்கும் சொல்லே இன்சொல் எனத்தகும். சொல்லும் செயலும் ஒத்திருக்கவேண்டும். இதனையே,

"பொய்யாமை பொய்யாமை யாற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று."

என்றார்.

சொற்குற்றத்தின் மிகுதியைப் பலவாறு பாரித் துரைக்கின்றார் வள்ளுவர். அறங் கூறாதிருப்பினும் புறங்கூறா திருத்தல் நன்று என்பார், "நயனில சொல்லினும் சொல்லுக, பயனில சொல்லாமை நன்று," என்றார்.

இனி, உடன்பாட்டு வகையாலும் அறத்தின் இயல்பையும் சிறப்பையும் அறிவுறுத்துகின்றார்.

"அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்து
இன்புற்றார் எய்தும் சிறப்பு."

வையத்து வாழ்வாங்கு வாழ்வதே இன்பத்திற்குக் காரணமாகும். அன்புடையராய் இல்லறத்தை இனிது நடத்துவதே நல்ல வாழ்வாகும். அவ்வாழ்வின் பயனே வீடுபேறு.

பேரின்பம் பயக்கும் வீடுபேற்றுக்குக் காரணமான இல்லற வாழ்வைத் துணைநின்று நலமுற நடாத்தும் பெண்டிர்க்கு வள்ளுவர் ஓர் அறிவுரை வழங்கினார்.

"பெற்றாற் பெறிற்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு."

இதற்குப் பரிமேலழகர், "தாமடைந்த கணவரை வழிபட்ட மகளிர்க்குப் புத்தேளிர் உலகின்கண் பெருஞ் சிறப்புண்டு," என்றார். நான் கூறும் உரை வேறு பெண்டிர், தம் வீடுபேற்றுக்கென முயலவேண்டா. தம் கணவர் வீடுபேற்றை யடையுமாறு செய்தால் தாமும் பெறுவர். பெற்றாராகிய கணவர் பெறிற் பெண்டிரும் பெறுவர் என்றே கொள்ளவேண்டும்.

திருந்திய அறவாழ்வு நடத்தினால் வீட்டுலகம் பெறலாம். அவ் அறவாழ்வுக்கு அன்புதான் சிறந்த ஒழுக்கம். அன்பின் அடிப்படையில் கட்டிய பெருமாளிகையே அறவாழ்வு. வள்ளுவர் நூலுட் சொல்லுவ எல்லாம் அன்பு அடிப்படையாக எழுவனவே. நூல் முழுதும் அன்புதான் பேசுகிறார்.

அறத்துப்பாலைமட்டும் நோக்குவோம். முதற்கண் கடவுள் வாழ்த்து. கடவுளைப் பார்க்கிலும் அன்புடையன்—அருளுடையன் வேறில்லை. அன்பு வடிவாயிருப்பது மழை. அன்பிலேயே தோய்ந்து நிற்பார் நீத்தார். அவ் அன்பு செய்வார் ஆற்றுவதே அறம். அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் ஆகும் அன்பே உருவாய்த் திகழ்ந்து பணிபுரிபவள் வாழ்க்கைத்துணை. தந்தை மகற் காற்றும் நன்றியும், மகன் தந்தைக்கு ஆற்றும் உதவியும் அன்பு காரணத்தாலேயே என்பதை யார்தாம் அறியார்!

உலகில் அன்பிலரே எண்ணிறந்தவர். அவரை விலக்கிவிட்டால் உண்மையன்புடையாரைக் கண்டவுடனே தெரிந்துகொள்ளலாம் என்பதை மிக்க நயம்படக் கூறியருளினார்.

"அன்பிலா ரெல்லாம் தமக்குரியர் ; அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு."

இனிய பண்டம் கொண்டுவந்தால் மனைவி மக்களுக்கும் கொடார் பலர். அவர் மற்றவர்பால் எத்துணையன்பு செலுத்துவார்? உண்மை யன்புடையார் எலும்பையும் பிறர்க்கீவர். குருதியைப் போரில் நாட்டிற்காக—மன்னர்க்காகக் கொடுத்ததைக் கேட்டிருக்கிறோம்—பார்த்திருக்கிறோம். எலும்பைக் கொடுத்ததாக அறிந்தோமில்லை.

சின்னாட்கு முன்னர் நாகர்கோவிலில் நடந்ததொரு செய்தி. மருத்துவச்சாலைக்கு மாதொருத்தி சிகிச்சைக்காக வந்திருந்தாள். அம் மாதின் மார்பில் பெரும்புண். அப்புண்ணை, நற்குருதியுள்ள தசையொன்றை வைத்தால் நீக்கலாமென்றார் மருத்துவர். அங்குப் புதியராய் வந்த இளைஞரொருவர், அப்பெண்ணின் உயிரைப் பேணத் தமது மார்பை அறுத்துக்கொடுத்தார். அவ் இளைஞரின் செயல் வியப்பினும் வியப்பு!

அன்புடையார் செயலே விருந்தோம்பல். அன்புடையார் கடியன கூறார்; இனியவை கூறுவர். பிறர் நன்றியைப் பேணிப் பாராட்டுவர். தினைத்துணை நன்றி செய்யினும் பனைத்துணையாக் கொள்வர். நடுவுநிலைமையில் தவறார். பிறவும் தமபோல் பேணிச்செய்யும் வாணிகத்திற்கு அன்புவேண்டும்.

இல்லறத்திலிருப்பாரும் புலன்களையடக்கவேண்டும். அடக்கினால்தான் பிறர்க்கு அன்பு செய்யமுடியும். கதங்காத்துக் கற்றடங்கல் ஆற்றுவான் செவ்வியை அறக்கடவுளே எதிர் நோக்கி நிற்குமென்கிறார். அடக்கமுடையானுக்கு ஒழுக்கம் தானே அமைகிறது. தன் மனையாளிடத்து அன்புகொண்டவன், பிறன் மனையாளை விழைவானா?

அன்புக்கும் ஆற்றலுக்கும் அடையாளம் பொறையுடைமை. அழுக்காறுடையவன் அன்பு செய்யவியலுமா? அறவாழ்வில் பிறர்க்குக் கொடுக்கவேண்டியதிருக்க மற்றவர் பொருளை விரும்புதல் பொருந்துமோ? அன்புடையவன் புறங்கூறுவனோ? அன்புக்குப் பகையன்றோ புறங்கூறல்?

ஒருவன் பொன்னான நேரத்தைப் பொருளற்ற சொல்லிப் போக்கினால், அவன்பால் அன்பு செய்யமுடியுமா? அன்பு செய்பவன் தீவினைக்கு அஞ்சுவன்; ஒப்புரவு செய்வான். ஈகை புரிவான். அன்பு காரணமாக இவ்வளவு செய்தால், தான் வேண்டாதே புகழ் ஒருவனை வேண்டியடைகிறது. அன்பின் பெருக்கமே அருள்.

அருளுண்டையார் புலால் உண்ணற்க வென்றார். அன்பு நெறியினின்றும் விலகாது புலனடக்கமுடையரே தவமுடையர். கூடாவொழுக்கினராய அன்பிலாதாரன்றோ துறவு வேடம் பூண்டும் அருளின்றியிருப்பர். அன்புடையார் களவு செய்யக் கனவிலும் கருதார்; உண்மையே உரைப்பர்; கோபம் கொள்ளார்; இன்னா செய்யார்; கொல்லாமை யென்னும் நல்லறத்தைக் கொள்ளுவார். பகுத்துண்டு பல்லுயிரோம்புவார்.

குடிகள், அரசன்மாட் டன்புடையராதலும், அரசன், குடிகளிடத்தன்புடையனாதலுமே பொருட்பால் காட்டும் உண்மைகள்.

"அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
ஐந்துசால் பூன்றிய தூண்."

சான்றாண்மைக்கு அடிப்படையே அன்பு என்றார். இத்தகைய நுண்மையெல்லாம் தொகுதியாகத் தருவதே சமயம். அத்தகைய சமய வாழ்வு துய்க்க நல்லனவே செய்தல்வேண்டும். நல்லன செய்தால் நல்லன நம்மை நாடிவரும். தீயனசெய்தால் தீயனவே நம்மை நாடிவரும். "பந்தைச் சுவரில் எறிந்தால் அந்தப் பந்தே நம்மை எதிர்த்து வரும்," என்பது நியூட்டன் விதி.

புத்தர், சமணர், உலோகாயதர் ஆகியோர், உலகம், உயிர், கடவுள் இவற்றின் உண்மைபற்றி மாறுபட்ட கருத்துடையர். வள்ளுவரோ இவற்றை ஒப்புக்கொள்கிறார்.

வள்ளுவர் தமது சமயம் யாது என வெளிப்பட விளக்கினாரில்லை. தம் நூலுள் மறைத்தே உரைத்தார். மறைத்து வைப்பதே ஒரு கலை. அதையும் கடந்து சில கருத்துக்கள் வெளித் துளும்புகின்றன. அம்முறையில் வள்ளுவர் வாக்கில் துளும்பி நிற்கும் கருத்துக்களே உலகம், உயிர், கடவுள்உண்மை பற்றியன.

"இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்."

இதனால் உலகம் ஒன்றுண்டு; அதனைச் செய்பவன் ஒருவன் உண்டு என்பதை ஒப்புக்கொள்கிறார். பௌத்தம், "மீண்டும் உலகம் படைக்கப்படுவதில்லை," யெனப் பகரும்.

"பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்."

"மன்னுயி ரோம்பி அருளாள்வார்க் கில்லென்ப
தன்னுயி ரஞ்சும் வினை."

இவற்றால் உயிரினுண்மை, பன்மை, அழியாமை யாகியவற்றை அறிவுறுத்தினர்.

கடவுள் வாழ்த்தென்றே முதலதிகாரம் வகுத்துள்ளார். முதல் மூன்று அதிகாரங்களையே விலக்கவேண்டும் என்பார் சிலர். விருப்புடையார் பலராக இருப்பின் வெறுப்புடையாரும் சிலர் இருப்பரன்றே! அவற்றை விட்டொழிப்பினும், நூலுள்ளே,

> " பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
> பற்றுக பற்று விடற்கு."

என்பதில் 'பற்றற்றான்' என இறையியல்பு கூறி, இறையுண்மை விளக்குவதை எங்ஙனம் மறுப்பர்?

> " பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
> செம்பொருள் காண்பது அறிவு."

கடவுளைச் செம்பொருள் என்று கூறினார்.

இனிச், சார்பின்றேல் வாழமுடியாது என்பதுதான் சமயம். தன் ஆற்றல் எவ்வளவு இருந்தாலும் பிறிதொன்றன் துணையின்றி இயங்க வியலாதென்பர்.

> " சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் மற்றழித்துச்
> சார்தரா சார்தரு நோய்."

இறைவனையே 'சார்பு' என்று கூறினார். இறைவனுடன் சேர்ந்து இன்பமடைகின்ற அறிவு தனிப்பட்டது. அதனைப் பிறர்பால் பெற்றுவிட முடியாது. உள்ளத்திற்கு உள்பொருளாயுள்ள பொருளை வேறாக உணர்தலே பேரின்பம்.

துன்ப நீக்கமெல்லாம் இன்பப் பேறு என்பர். துன்பம் போனால் இன்பம் வாராது. இன்பத்தையடைவது வேறு, அடையும் வழி வேறு. இறைவன் தாளை இடையறாது நினைத்தலே—தொழுதலே வீடுபேறு அடையும் வழி. அவனருளே கண்ணாகக்காணின் அல்லால் பிறவாநெறி யெய்தல் இயலாது. அவ் அன்பே உலக வாழ்வுக்கு வேண்டுவது. அதுவே வீடுபேற்றுக்கும் ஏற்ற துணை!

# நூல் நிலையம்

என் நூல்நிலையமே எனக்குப் போதிய பண்ணைப் பெருஞ் செல்வம்.

**சேக்குபியர்.**

ஒரு நூல்நிலையத்தில் உனக்குக் கிடைப்பது என்ன என்பதை நினைத்துப்பார். ஆயிரக்கணக்கான ஆண்டுகளிடையே உலகில் பல நாடுகளிலும் வாழ்ந்தவருள் தலைசிறந்த அறிஞர், சொற்செல்வர், கலைப்பண்பாளர் தம் கல்வியின் பயனை, அறிவின் பயனை தலைசிறந்த கருத்துக்களைத் தலைசிறந்த முறையிலும், ஒழுங்கிலும் தொகுத்த தொகுப்புக்களின் சூழல் உன்னுடன் உறவாடக் காத்திருக்கிறது......தம் உயிர்த்தோழனுக்குக் கூட அவர்கள் முற்றிலும் மனந்திறந்து உரைத்திருக்கமாட்டாத உயர் அருங் கருத்துக்கள் தெள்ளத்தெளிய வரையப்பட்டு, ஏதோ ஓர் ஊழியில் வரும் என்னிடம் தரப்பட்டுள்ளன.

**எமெர்சன்.**

இக்காலத்தின் உண்மைப் பல்கலைக்கழகம், நூல்களின் தொகுதிதான்.

**கார்லைல்.**

படிப்படியாக நான் தேர்ந்து திரட்டிய என் தனிப்பட்ட நூல்நிலையமே, என் அறிவுப் பணிகட்கெல்லாம் மூல அடிப்படை; அஃதுடன் என் தாயகத்திலும், புறத்தும் என் வாழ்க்கையில் ஒருங்கே இன்பமும், ஆறுதலும் அளித்துள்ளவையும் அவையே.

**கிப்பன்.**

நூல்நிலையங்கள்....பண்டை உலகின் சின்னங்கள்; இக்கால உலகின் புகழ்க்கொடிகள்.

**லாங்ஃவெல்லோ.**

சுவடிகள் இல்லாத வீடு, பலகணியில்லா வீடுபோன்றது. சுவடிகள் வாங்க ஆற்றலுடைய எவரும் சுவடிகள் இல்லாத வீட்டில் பிள்ளைகளை வளரவிடுதல் தகாது. தம் குடும்பத்திற்கு அவர்கள் இதனினும் பெரிய தீங்கு தேடவேண்டுவதில்லை. பிள்ளைகள் இயற்கையாகவே சுவடிகளை விரும்புகின்றனர். சுவடி ஆர்வம் வாசிப்பு ஆர்வமாக, அறிவு ஆர்வமாக வளர்கிறது. அவர்களைத் தீமைகளினின்றும் காக்கும் கருவிகளில் இதனினும் சிறந்தது இல்லை.

**ஃகோரேசுமான்.**

ஒவ்வொருவருக்கும் பெருந்துணை தரும் நூல்கள் அவரைச் சிந்திக்கத் தூண்டும் நூல்களே.

**தியோடோர் பார்க்கர்.**

# செய்திகளும் குறிப்புகளும்

**சித்தாந்தப் பேராசிரியர் எழுபத்தொன்பதாம் ஆண்டு நிறைவு விழா**

தூத்துக்குடி சைவ சித்தாந்த சபை சித்தாந்தப் பேராசிரியர் திரு. க. சிவகுருநாத பிள்ளையவர்களின் 79-ஆம் ஆண்டுப் பிறப்பு நாளையும், நெஞ்சு விடு தூது பாட நிறைவையும் முன்னிட்டு 5-8-51-ல் ஒரு பேரவை கூட்டப்பெற்றது. அப்பேரவைக்குச் சாத்தூர் வழக்கறிஞர் சித்தாந்த சிரோன்மணி திரு. T. S. கந்தசாமி முதலியாரவர்கள் எம்.ஏ. தலைமை தாங்கினார்கள். திருப்பனந்தாள் ஆதீன கர்த்தர் ஸ்ரீலஸ்ரீ அருணந்தித் தம்பிரான் சுவாமிகள், பேராசிரியரவர்கட்கு ரூபா நூறு நன்கொடையனுப்பி யருளியதுடன் நல்லாசித் திருமுகம் அனுப்பியிருப்பதையும், மற்றும் பல பெரியோர்கள் வாழ்த்துரைகள் அனுப்பியிருப்பதையும் தெரிவிக்கப்பட்டன. பேரவையில் இதன் அடியிற் கண்டவண்ணம் பட்டங்கள் வழங்கப்பெற்றன.

"சித்தாந்த குரு கேந்திரர்" ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக சுவாமிகள், திருவண்ணாமலை ஆதீனம், குன்றக்குடி.

"சித்தாந்த மகாமகோபாத்தியாயர்" ஸ்ரீலஸ்ரீ ஈசான சிவாச்சாரிய சுவாமிகள், பழனி.

"சித்தாந்தச் செந்நாவலர்" திரு. G. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் M.A., B.L., தமிழ்ப்பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

"சித்தாந்தப் புலவர் மாமணி" பாலகவி, திரு. வே. இராமநாதன் செட்டியாரவர்கள், தேவகோட்டை.

"சித்தாந்தச் செஞ்ஞாயிறு" திரு. இளவழகனாரவர்கள், ஆசிரியர், மாம்பாக்கம் குருகுலம்.

"சித்தாந்தச் சுடர்மணி" திரு. ஆ. முத்துக்குமாரசாமி பிள்ளையவர்கள், திருவாடுதுறை ஆதீன சொற்பொழிவாளர், அம்பாசமுத்திரம்.

## பெருமக்கள் பிரிவு

**சேலம், திரு. கே. ஏ. நாச்சியப்பக் கவுண்டர் பிரிவு**

சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த கொங்கணாபுரத்தில் 1904-ஆம் ஆண்டில் திரு. நாச்சியப்பக் கவுண்டரவர்கள் பிறந்தார்கள். இவர் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் படித்துக்கொண்டிருக்குங்கால் 1925-ல் சங்கரி தாலூகா போர்டுக்கு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதற்குப் பின் அதை விரும்பாது விட்டுவிட்டார். 1928-ல் மீண்டும் தேர்ந்தெடுக்கப் பெற்று, தாலூகா போர்டின் துணைத்தலைவராக 1932 வரை இருந்து பணியாற்றினார். 1933-ல் சேலம் மாவட்ட உறுப்பினராகி மும்முறை அதன் தலைவர் பணியை மேற்கொண்டு அரும்பணி செய்தார்.

அப்பால் சேலம் மாவட்டக் கல்வி அவை, திருச்செங்கோடு கூட்டுறவு பாங்கு, சேலம் கூட்டுறவு மொத்த வியாபாரிகள் சங்கம், திருச்செங்கோடு நில அடமான பாங்கு, திருச்செங்கோடு கூட்டுறவு மார்க்கெட்டிங் சங்கம் ஆகியவைகளிலெல்லாம் முதன்மையான பதவிகள் பெற்று அவ்வவை கட்கு வேண்டும் நற்செயல்களில் முனைந்து நின்று நலம்பல செய்தார்.

இன்னும் இந்துஸ்தான் சாரணர் சங்கம், பாரத் கைட் சாரணர் சங்கங்களின் தலைவராக இருந்து தொண்டுகள் பல செய்தார். சென்னைப்

பல்கலைக் கழக செனட் அவை உறுப்பினராகத் திகழ்ந்தார். 1930, 1937, 1945-ஆம் ஆண்டுகளில் சென்னைச் சட்ட அவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றார்.

மதுவிலக்கு விசாரணைக் குழு, இந்திய அரசினரின் நிதிக்குழு போன்ற பல முதன்மை வாய்ந்த குழுக்களிலும், அவைகளிலும் தாமும் ஓர் உறுப்பினராக இருந்து நாட்டுக்கு வேண்டும் நலன்கள் பல புரிந்துள்ளார்.

இத்தகைச் சிறப்பு வாய்ந்த பெருமகனார், 21-8-51 காலை 11-10 மணிக்குச் சென்னை மவுண்ட் ரோடிலுள்ள அரசினர் மாளிகையில் திடுமென இறையடி நிழல் எய்தினார்.

இவர் முதல் நாள் இரவு திரு. ஜி. டி. நாயுடு முதலியோரிடம் நெடுநேரம் உரையாடிக்கொண்டிருந்தனராம். மறு நாள் வழக்கம்போல் காலையில் சிற்றுணா அருந்தினார். தலை சிறிது சுற்றுவதுபோல் தோன்றிற்றாம். உடனே மருத்துவருக்குச் செய்தி அறிவித்து அழைத்துவரச் சொல்லப்பெற்றது. மருத்துவர் வந்து உதவி அளிப்பதற்குள் மூக்கிலிருந்து சிறிது செந்நீர் ஒழுகிற்று. தாம் குளிப்பறையிலிருந்து படுக்கையறைக்கு வருவதற்குள் இடையே படியில் விழுந்தார்; உயிர் பிரிந்தது.

இச் செய்தியறிந்து டாக்டர் திரு. சுப்பராயனும், திருவாட்டி ராதா பாய் சுப்பராயனும் விரைந்து வந்தார்கள். அதன்பின் முதலமைச்சர் குமாரசாமி ராசாவும், சட்ட அவை உறுப்பினர்களும் வந்து தம் இறுதி அன்பைத் தெரிவித்தனர். பின் கீழ்த்தாழ்வாரத்துக்குக் கொண்டுவந்து அவர் உடலை நாட்டுக்கொடியால் மூடி ரோசா மலர்மாலை யணிந்து யாவரும் காணுமாறு வைக்கப்பெற்றது. பின்னர் அவர் புதல்வன் சகதீஷ் ஓடிவந்து தன் தந்தையாரைப் பார்த்துத் துன்புற்ற நிலை, கண்டார் மனத்தைக் கலங்க வைத்தது. அன்று அவைநிகழ்ச்சி நிகழாமல், வருத்தங்கூறித் தீர்மானம் நிறைவேற்றினார்கள். பின்னர் அவர் உடலை மாதர் சேமவிருத்தி நிலைய வாகன் ஊர்தியில் தம் ஊராகிய கொங்கணாபுரத்துக்குக் கொண்டுபோய் இறுதிக் கடன் முடிக்கப்பெற்றது.

சட்ட அவை உறுப்பினர் ஒருவர் காலமானால் மேலவையில் (கௌன்சில்) அதற்காக வருத்தங்கொண்டு வருத்தத் தீர்மானம்செய்யும் வழக்கம் இதுகாறும் இல்லை. ஆனால் அவைத் தலைவர், இவருக்கு எந்த அவையைச் சேர்ந்தவராயினும் ஓர் அவையின் இழப்பு மற்றொன்றையும் சேர்ந்ததே என்று புதுமுறையில் மேலவையில் தீர்மானங்கொணர்ந்து நிறைவேற்றியது நாச்சியப்பக் கவுண்டரின் உயர்ந்த நிலையை விளக்கக்கூடியதாக இருந்தது.

ஏற்கனவே, இருமல் நோயால் பற்றப்பட்டு மெலிவுற்றிருந்த கவுண்டரின் உடல், வலிமைக் குறைவால் திடுமென நம்மை விட்டுப் பிரிய நேர்ந்தது, நாட்டு நலனுக்கும், பிற அறங்கட்கும் ஒரு பேரிழப்பே ஆகும். அவர் தம் பிரிவுக்கு நம் மனமார்ந்த ஆழ்ந்த வருத்தத்தை அவர்தம் புதல்வருக்குத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

" இன்னாது அம்மஇவ் உலகம்
இனிய காண்க இதன் பண்புணர்ந் தோரே,"

என்றார் பழந்தமிழ்ப் புலவரொருவர்.

இன்னா உலகில் இனிமை கண்டு நன்னெறிப்படர்ந்த அவர் தம் ஆவி இறை இன்பத்தில் படிந்து உறைவதாக.

### எழுத்தாளர் திரு. வ. ரா. பெரும்பிரிவு

தமிழில் சிறந்த எழுத்தாளரும் சீர்திருத்தப் பெருநோக்கம் உடையவரு மான திரு. வ. இராமசாமி ஐயங்காரவர்கள் 23-8-51 ஆம்நாள் நுங்கம்பாக் கம் தம் இல்லத்தில் மாரடைப்பு நோயால் இறையடி யெய்தினர். அவர் தம் பெரும் பிரிவு கேட்டு அன்பர்கள் எல்லோரும் வருந்தி நின்றனர்.

அவர் தஞ்சையிலிருந்து வெளிவந்துகொண்டிருந்த 'சுதந்திரம்' என் னும் இதழுக்கு ஆசிரியராக இருந்து தொண்டாற்றினர். டாக்டர் பி. வரத ராசுலு நாயுடுவினல் நடத்திவந்த 'தமிழ் நாடு' கிழமை இதழுக்கும் உற துணையாக இருந்து வந்தார். 'நவயுகம்' 'மணிக்கொடி' முதலிய இதழ் களுக்கு ஆசிரியராக இருந்து ஆற்றிய அரும்பெருந் தொண்டுகள் பல. அதுகாலை அவை நன்முறையில் வெளிவந்துகொண்டிருந்தன.

'சுந்தரி' 'மழையும் புயலும்' 'மகாகவி பாரதி' 'தமிழ்ப் பெரியார்' 'கோதைத் தீவு' முதலிய நூல்கள் அவரால் எழுதப்பெற்று விளங்குகின் றன. இவைகளில் அவர்தம், சிறந்த ஆற்றெழுக்குப்போன்ற கருத்துச் செறிவுள்ள நன்னடைகள் அமைந்துள்ளன.

இத்தகைய சிறந்த எழுத்தாளர் மறைவு நம்நாட்டுக்கு ஈடு செய்ய முடி யாத நட்டமாகும்.

அன்னர்தம் நல்லுயிர் இறையடியில் இன்புற்றுத் திளைப்பதாக.

அவர்தம் பிரிவுக்கு எம்மிக்க வருத்தத்தை அவர்தம் குடும்பத்தார்க்கும் உறவினர்க்கும் தெரிவித்துக்கொள்ளுகின்றேம்.

### வரலாற்று ஆசிரியர் மறைவு

அரும்பெரும் வரலாற்று ஆசிரியரும் கல்வியிற் சிறந்தோருமான திவான்பகதூர் திரு. சி. எஸ். சீனிவாச ஆச்சாரியார் 29-8-51 மாலை தம் இல்லத்தில் இறைவன் திருவடிப்பேறெய்தினர்.

இவர் 1890-ல் சிதம்பரத்தில் பிறந்தார். 1910 முதல் 1931 வரை பச்சையப்பன் கல்லூரியில் வரலாற்று அரசியல் பேராசிரியராக இருந்தார். 1932 முதல் 1946 வரை அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் வரலாற்றுப் பகுதித் தலைவராக இருந்து செயலாற்றினர். அதன் பின்னர் சிவகங்கை ஆர். டி. எம். கல்லூரியிலும், காஞ்சிபுரம் பச்சையப்பன் கல்லூரியிலும் அமர்ந்து தொண்டு செய்தார்.

சென்னைப் பல்கலைக் கழக செனெட், அகாடெமிக், கவுன்சில்களிலும் படிப்புத் திட்டக் குழு முதலியவைகளிலும் நீண்டகாலம் உறுப்பினராக இருந்தார்; அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தின் பலவகை அவைகளிலும் உறுப்பினராக இருந்தார்.

இன்னும் பல கல்விச் சார்புடைய அவைகளிளெல்லாம் தொடர்பு கொண்டிருந்தார். சென்னை நகரவரலாறு உள்படப் பல வரலாற்று நூல்கள் எழுதி உள்ளார்.

இன்னர் தம் 61 ஆம் அகவையில் பெரும் பிரிவு ஆனது மிக மிக வருந்தற் குரியது.

அவர் தம் பிரிவுக்கு எம் ஆழ்ந்த வருத்தத்தை அவர் குடும்பத்தார்க்குத் தெரிவித்துக்கொள்கின்றேம்.

அவர் ஆன்மா இறையடியில் இன்புற்று அமைவதாக.

# மதிப்புரை

**குறிஞ்சிக்கலி வழித்துணை விளக்கம்**

[ஆசிரியர்: மார்க்கபந்து சர்மா, எம். ஏ. கிடைக்குமிடம்: சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1-140, பிராட்வே, சென்னை-1. விலை ரூ. 3]

'கற்றறிந்தார் ஏத்தும் கலி'யில் ஒரு பகுதியாகிய 'குறிஞ்சிக் கலி'க்கு இவ்வுரையாசிரியர், தற்காலத்துக்கேற்ப நன்முறையில் உரைவகுத் தளித்துள்ளார்கள்.

முன்னுரையில் மேல்நாட்டு நாடக ஆசிரியர் கருத்தோடு பொருத்திக் காட்டியிருக்கும் ஒட்பம் பாராட்டுக்குரியது.

'கயமலர் உண்கண்ணாய்' என்னும் கலியில் தலைவியைத் தோழி இரவுக் குறியீட்டில் ஈடுபடுத்துதற்கு அவள் தலைவியின் செயலைத் தன் செயலாகக் காட்டி, அவள் மனநிலையை அறிந்து உடன்படச் செய்ததாகக் காட்டியுள்ள நுண்கருத்துக்கு ஒப்ப, மேல்நாட்டு சேக்குபியர் 'ஃகாம்லெட்' நாடகக் கற்பனையோடு இணைத்துக் காட்டி விளக்கியிருக்குந் திறம் மிக மகிழ்வுக்குரியது.

இவ்வுரை நாட்டுக்கு இன்றியமையாத சிறந்த ஓர் வழிகாட்டியாக— புதுக் கருத்துக்களை பழமையில் காட்டும் புகழுரையாகப்-பயிலுதற்கு ஏற்றதாகத் திகழ்கின்றது.

இந்நூலைப் பின்பற்றிப் பயில்வார்க்குத் தன் பெயர்க்கேற்ப வழித்துணையாகவே நல்லாற்றிற் செலுத்தும் தகையது.

ஆனால், செந்தமிழ்ப் பாவான் இயன்றுள்ள நூலிற்கு வகுக்கும் உரையில் இடையிடையே வேற்றுச் சொற்கள் கலந்துள்ளன.

ஆசிரியர், இந்நூல் உரைபோன்ற பல நன்னூல்கட்கு உரை பல ஆக்கித் தமிழ்த்தாய்க்கு அணிமணி அணிந்து பொன்றாப் புகழுடன் நன்று பெரிது வாழியர்.

**சங்க இலக்கியத் தொகுதி** (சிவா எம்போரியம் மயிலம்; இதன் விலை ரூ. 6)

இந்நூல் சென்னைப் பல்கலைக் கழகத்தார் புலவர் இறுதிநிலை வகுப்பிற்குப் பாடமாக வைத்துள்ள சஙக நூற் பாடல்களின் தொகுப்பாகும்.

சஙக நூல்களான எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்களிலிருந்து அரும்பொருள் பொதிந்த பாக்களையே அப்பாடத்திட்டமாக வகுத்தமைத்துள்ளனர்.

இதனை அப் பாடநூலின் தொகுப்பாக மயிலம் சிவா எம்போரியத்தார் வெளியிட்டுள்ளனர். இதில் அருஞ்சொல் உரை, குறிப்புரை, உவமம் முதலியவைகளும் சேர்க்கப்பெற்றுள்ளன. இந்நூல் புலவர் இறுதிநிலை வகுப்பிற் பயிலும் மாணவர்க்கு உறுதுணையாக உதவுவதோடல்லாமல் இலக்கிய நயங்கண்டு சுவைப்பார்க்கும் அருங்கருத்துடன் கண்டுணர வாய்ப்பாகவும் அமைந்துள்ளமை பாராட்டற்குரியது.

இத்தகைய நன்னெறியில் ஈடுபட்டு தமிழ்நாட்டுக்கு நலஞ்செய்து வரும் மயிலம் சிவா எம்போரியத்தார் தொண்டினைத் தமிழகம் என்றும் போற்றுதல் வேண்டும்.

இன்னும் இதுபோன்ற நற்பணி செய்து அவ் எம்போரியம் சிறப்பதாக.

---

திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்
கழகத்திற்காக, சென்னை 2-140, பிராட்வே,
அப்பர் அச்சகத்தில், திரு. வ. சுப்பையா அவர்களால்
அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: வ. சுப்பையா.

# கழகப் புதிய வெளியீடுகள்

## புறநானூறு உரை

[வித்துவான், ஔவை, சு. துரைசாமிப்பிள்ளை]

ஒரு நாட்டின் செல்வம் இலக்கியங்கள். அவைகளுட் சிறந்தன வரலாற்று இலக்கியம். அம்முறையில் நம்நாட்டு வரலாற்றுக் கருவூலம் புறநானூறு. அந்நூற்குப் பழைய உரை ஒன்றுளது. அது நூல் முழுதுக்கும் இல்லை. நூல் முழுதுக்கும் நல்ல உரையாகப் புதுமுறையில் அமைந்தால் நலமாகு மென்று கருதினோம்.

அவ்வாறே முதல் இருநூறு பாட்டுகட்குத் திருவாளர் ஔவை. சு. துரைசாமிபிள்ளை யவர்களைக்கொண்டு நன்முறையில் புத்துரை எழுதுவித்து முதற் பகுதியாக வெளியிட்டுள்ளோம். பிற்பகுதியாகப் பின் இருநூறு பாட்டுகட்கும் அவர்களாலேயே உரை யெழுதுவித்தும், கல்வெட்டு, செப்பேடு, பழங்கால வரலாறுகள் முதலிய யாவும் ஒருங்கே அமைய விளக்கஉரை வகுத்தும் கண்கவர் வனப்புடன் அழகிய வழுவழுப்பான உயர்ந்ததாளில் அச்சிடப்பெற்று வெளிவருகின்றது. இதனை வாங்கிக் கற்றுத் தமிழ்கூறு நல்லுலகம் உயர்வுறுவதாக.

| | | | | |
|---|---|---|---|---|
| முதற்பகுதி | ரூ. | 6 | 0 | 0 |
| இரண்டாம் பகுதி | ரூ. | 7 | 8 | 0 |

## தொல்காப்பியம்

தமிழ் மொழிக்கு முதல்இலக்கணம் தொல்காப்பியம். அந்நூல் எழுத்து சொல் பொருள் என்ற முப்பகுப்பை உடையது. அவைகளுள் பொருளதிகாரத்துக்குரிய நச்சினார்க்கினியர் உரை, பேராசிரியர்உரை முழுதும் பழைய சுவடிகள் கொண்டு ஒப்புநோக்கியும், திருத்தியும் நன்முறையில் வெளியிட்டுள்ளோம். அதனை வாங்கிக் கற்று தமிழ் நன்மக்கள் பயனுறுவார்களாக.

| | | | | |
|---|---|---|---|---|
| அகத்திணையியல், புறத்திணையியல் | ரூ. | 5 | 0 | 0 |
| களவியல், கற்பியல், பொருளியல் | ரூ. | 5 | 0 | 0 |
| மெய்ப்பாட்டியல், மரபியல், உவமவியல், செய்யுளியல் | ரூ. | 8 | 0 | 0 |

பதிவு எண் 4889

## அன்பர்களுக்கு வேண்டுகோள்

அரும்பெரும் புலவர்கள், ஆராய்ச்சியாளர், மொழிவல்லுநர் ஆகியோர் இலக்கிய நயம்தோன்ற அரிய பொருள்களைப்பற்றி உயர்ந்த நடையில் எழுதிய சிறந்த கட்டுரைகளையும், செய்யுள்களை யும், ஆராய்ச்சிகளையும் தாங்கி, நம் 'செந்தமிழ்ச் செல்வி' என்னும் திங்கள் இதழ் கடந்த இருபத்து ஐந்து ஆண்டுகளாக வெளிவந்து கொண்டிருப்பதைத் தமிழன்பர்கள் இனிதறிவார்கள்.

வியத்தகும் இலக்கியக்கருத்துக்களையும், நயங்களையும், அரிய ஆராய்ச்சிகளையும் அவ்வப்போது வெளியிட்டு, தமிழர்தம் சிந்தனைக்கு நம் செல்வி இடமளித்து வருகிறது. இவைகளைக் கற்கக்கற்க மணற்கேணிபோன்று கருத்துக்கள் ஊற்றெடுத்துப் பெருகுவதையும் தமிழன்பர், சிறப்பாகச் செல்வியன்பர் நன்கறிவர்.

'தமிழ்மொழி வளர்ச்சி பெறவேண்டும்; தாய்மொழி உயர்வடைய வேண்டும்' என்னும் எண்ணம் பெருகப் பெருகத் தமிழ்மக்கள் நம் செல்வியைப் பொன்னினும் மேலாய்ப் போற்றிவருவதும் அன்பர்கள் அறியாததொன்றல்ல. நூல்நிலையத்தாரும், சொற்பொழிவாற்று வோரும், கட்டுரையாளரும், ஆராய்ச்சித் திறன் அமைந்தோரும் கட்டடம் பெற்ற நம் செல்விச் சிலம்புகளைச் செல்வக்களஞ்சியமாகப் பேணிவருவதும் கண்கூடு.

எனவே, கடந்த இதழுடன் செந்தமிழ்ச் செல்வியின் இருபத்து ஐந்தாம் சிலம்பு முற்றுப்பெற்று, இவ் இதழ் இருபத்து ஆறாம் சிலம்பின் முதற்பரலாகத் தொடங்கி, பல புத்தம் புதுக் கருத்துக் களுடன், கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளிக்கும் வகையில் வெளி வரும் என்பதை எல்லா அன்பர்கட்கும் முன் கூட்டியே தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

செல்வி அன்பர்கள் தாம் மட்டும் கையொப்பம் அனுப்புவதோடு நில்லாமல், "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்," என்னும் ஆன்றோர் கூற்றுப்படி தம்தம் அன்பர்களையும், நண்பர்களையும் கையொப்பம் அனுப்பும்படி ஊக்கித் தமிழ் வளர்ச்சிக்குப் பணிபுரியு மாறு வேண்டிக்கொள்ளுகிறோம்.

ஆசிரியர்